பக்கங்கள்: பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 ஆனி 23 புதன்கிழமை (07-07-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:225

# ஹிங்குராகொட விகாரையில் கைதான

# கருணா குழுவின் 14 பேருக்குப் பிணை!

## இராணுவப் புலனாய்வுப் பிரிவின் அழுத்தத்தால் நீதிமன்றில் பொலீஸார் கண்துடைப்பு நாடகம்

கொழும்பு,ஜூலை7

**பொலன்நறுவை மாவட்டம், ஹிங்குராகொடவுக்கு அருகில் புபுல பௌத்த விகாரையில் ரி-56 மற்றும் ரி-84 ரக இயந்திரத் துப்பாக்கிகளுடன் பதுங்கியிருந்த கருணா குழுவினர் 14பேர் பொலீஸாரிடம் வகையாகச் சிக்கினர்.**

**ஜாதிக ஹெல உறுமயக் கட்சியின் பிக்கு ஒருவராலேயே அவர்கள் அங்கு மறைவாகத் தங்க வைக்கப்பட்டிருந்தனர் என்றும், அவர்களைப் பொலீஸார் கைதுசெய்ததை அடுத்து அவர்கள் அனைவரையும் விடுவிக்கும்படி இராணுவப் புலனாய்வுப் பிரிவிலிருந்து அழுத்தத்துக்குமேல் அழுத்தம் பிரயோகிக்கப்பட்டது என்றும் தெரியவருகிறது.**

**அதையடுத்து கண்துடைப்புக்கு அவர்களை நீதிமன்றத்தில் ஆஜர்செய்து பிணையில் விடுவிக்க நடவடிக்கை எடுத்திருக்கிறது பொலீஸ் தரப்பு.**

ரி56 ரக ரைபிள்கள்-மூன்று, ரி84 ரக தாக்குதல் ரைபிள்கள்-மூன்று, ரி-81 ரகவிசேட தாக்குதல் ரைபிள்-1, 9எம்.எம்.பிஸ்ரல்-1, கைக்குண்டுகள் - ஆறு ஆகியவை இந்தக்குழுவினரிடமிருந்து கைப்பற்றப்பட்டிருக்கின்றன. அவர்கள் பயணித்த வான் ஒன்றும் கார் ஒன்றும் கூட புபுல விகாரையிலிருந்து பொலீஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

போதிருக்காராம விகாரை என்று அழைக்கப்படும் இந்த பௌத்த விகாரையின் சிரேஷ்ட விகாராதிபதி கடந்த பொதுத்தேர்தலில் ஜாதிக ஹெல உறுமய சார்பில் பொலன்நறுவை மாவட்டத்தில் போட்டியிட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

பொலீஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து நேற்றுமுன்தினம் மாலை ஐந்து மணியளவில் விகாரையைச்சுற்றிவளைத்துத் தேடுதல் நடத்திய பொலீஸார் இவர்களைக் கைது செய்தனர். அப்போது சம்பந்தப்பட்ட விகாராதிபதி அங்கு இருக்கவில்லை.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## விபத்தில் ஒருவர் பலி!

யாழ்ப்பாணம்,ஜூலை7

மோட்டார் சைக்கிள் - சைக்கிள் மோதிக்கொண்டதில் சைக்கிளில் சென்ற இளைஞர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

கொக்குவில் பூநாறி மரத்தடியில் நேற்று முற்பகல் இடம்பெற்ற இந்த விபத்தில் கொக்கு

(16 ஆம் பக்கம் பார்க்க)

## கிணற்றில் வீழ்ந்து உயிரிழப்பு!

யாழ்ப்பாணம்,ஜூலை7

கிணற்றில் தவறி வீழ்ந்து உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டு சண்டிலிப்பாய் மேற்கு, சண்டிலிப்பாயைச் சேர்ந்த சுந்தரம்பிள்ளை இலட்சுமி (வயது64) என்ற பெண்மணியின் சடலம் யாழ்.போதனா வைத்தியசாலையில்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## நேற்றிரவு மூவருக்கு வாள்வெட்டு!

யாழ்.நாச்சிமார் கோயிலடிப் பகுதியில் நேற்றிரவு இடம்பெற்ற சம்பவமொன்றில் வாள்வெட்டுக்கு இலக்காகிப் படுகாயமடைந்த மூவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

வண்ணார்பண்ணையைச் சேர்ந்தவர்களான சண்முகலிங்கம் சண்முகதாஸ் (வயது 26), சச்சிதானந்தன் தயாரூபன் (வயது 21), கதிரவேலு ராஜ்குமார் (வயது 24) ஆகிய மூவருமே இவ்வாறு படுகாயமடைந்தவர்கள் ஆவர். (ஒ-9)

## நட்வர்சிங்-பீற்றர்ஸன் பேச்சு

புதுடில்லி,ஜூலை7

இந்தியாவுக்கு மூன்று நாள்கள் விஜயத்தை மேற் கொண்டுள்ள நோர்வேயின் வெளியுறவு அமைச்சர் ஜான் பீற்றர்ஸன் இந்திய வெளியுறவு அமைச்சர் நட்வர்சிங்கைச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளிடம் தஞ்சமடைந்த படைவீரர் கண்காணிப்புக்குழுவிடம் ஒப்படைப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை7

யாழ். ஆரியகுளம் பகுதியில் அமைந்துள்ள 512 ஆவது படையணியைச் சேர்ந்த இராணுவ வீரர் ஒருவர் விடுதலைப் புலிகளிடம் நேற்றுத் தஞ்சமடைந்தார். அவரைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினிடம் விடுதலைப் புலிகள் ஒப்படைத்தனர்.

'சிங்கரெஜிமெண்ட்' அணியைச் சேர்ந்த லான்ஸ் கோப்ரல் நாவிமன விதானகே வசந்த உபுல் குமார (வயது 22) என்பவரே தஞ்சமடைந்தவராவார். இவர் நேற்றுப் பிற்பகல் 4.30 மணியளவில் நல்லூர் பகுதியில் பொதுமக்களிடம் எனக்கு விடுதலைப் புலிகளின் அலு

(16 ஆம் பக்கம் பார்க்க)

### புலமைப் பரிசில் மாதிரி வினாத்தாள்

ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான மாதிரி வினாத்தாள் வரிசையில் மூன்றாவது வினாத்தாள் இன்றைய உதயனுடன் வெளிவருகின்றது.

பிரதி புதன்கிழமைகள் தோறும் தொடர்ந்து வினாத்தாள்கள் வெளிவரும். வினாத்தாள்களின் மேலதிகப் பிரதிகளைப் பெற்றுக்கொள்ள விரும்புவோர் உதயன் பணிமனையில் அலுவலக நேரத்தில் விநியோகப் பகுதியுடன் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

## 18 வயதுக்குக் குறைந்தவர் இராணுவத்தில் இணைப்பு?

யாழ்ப்பாணம்,ஜூலை7

விடுதலைப் புலிகளிடம் நேற்றுத் தஞ்சமடைந்து பின்னர் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் ஒப்படைக்கப்பட்ட லான்ஸ் கோபரல் நாவிமன விதானகே வசந்த உபுல் குமார 18 வயதுக்குக் குறைவான வயதில் இராணுவத்தில் சேர்ந்தாரா என்ற சந்தேகம் எழுந்துள்ளது. இது தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழு, போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு ஆகியவற்றின் கவனத்துக்கு விடுதலைப் புலிகள் கொண்டுவந்துள்ளனர் என்று தெரியவருகிறது.

மேற்படி இராணுவ வீரர் தனது பிறந்த திகதி 03-09-1982 என்றும் 1996 ஆம் ஆண்டில் தான் இராணுவத்தில் சேர்ந்தார் என்றும் தெரிவித்துள்ளார். இதன்படி, இவர் இராணுவத்தில் சேரும்போது இவரது வயது 14 ஆக இருந்திருக்கவேண்டும். அவ்வாறாயின் இலங்கை இராணுவத்தில் 18 வயதுக்குக் குறைந்தவர்கள் சேர்க்கப்படுகிறார்களா? என்ற சந்தேகம் எழுந்துள்ளதாக விடுதலைப் புலிகள் தரப்பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ஒ-4)

## குழந்தையைப் பணயம் வைத்து நகைகள், பணம் கொள்ளை!

### வடமராட்சியில் அதிர்ச்சிச் சம்பவம்

யாழ்ப்பாணம்,ஜூலை7

நான்குமாதக் குழந்தையைப் பணயமாகப் பிடித்துக்கொண்டு நகைகள் மற்றும் பணத்தைக் கொள்ளையர்கள் அபகரித்துச் சென்ற சம்பவம் நேற்று அதிகாலை 12.30 மணியளவில் வடமராட்சி கப்பூதுவெளியில் இடம்பெற்றது. இச்சம்பவத்தின்போது கொள்ளையர்கள் தாக்கியதில் இருவர் படுகாயமடைந்தனர்.

சம்பவம் இடம்பெற்ற வீட்டு உரிமையாளரின் மகளும் மருமகனும் தமது கைக்குழந்தையுடன் வெளிநாட்டிலிருந்து வந்து தங்கினர். நேற்றுமுன்தினம் இரவு புழுக்கம் காரணமாக வீட்டின் முன் கதவுகளைக் திறந்துவைத்துக்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில் நேற்று இராணுவ உயர் மாநாடு

மட்டக்களப்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தையடுத்து, அங்கு பாதுகாப்பு நிலைமைகள் தொடர்பாக ஆராய்வதற்கென உயர் மட்ட மாநாடு ஒன்று மட்டக்களப்பு இராணுவமுகாமில் நேற்றுக்காலை நடைபெற்றது.

இலங்கை இராணுவ பிரதம அதிகாரி மேஜர் ஜெனரல் சூல செனவிரத்ன தலைமையில் கொழும்பில் இருந்து சென்ற படை அதிகாரிகள் குழுவொன்றும் இம்மாநாட்டில் பங்குபற்றியது.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ஹேரத்தின் ஆலோசனையின் பிரகாரம் இராணுவத்தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சாந்த கொட்டேகொட இந்த உயர்மட்ட இராணுவ

(16 ஆம் பக்கம் பார்க்க)

யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீட நிர்வாகத்தால் தான் பழிவாங்கப்படுகிறார் என்று கூறும் கி.புஷ்பமாலா என்ற மாணவி மருத்துவ பீட முன்வாயிலில் நேற்று உண்ணாவிரதம் இருந்த போது எடுக்கப்பட்ட படம். அவரது சகோதரரும் அருகில் உள்ளார்.

*(படம் அலுவலகப் படப்பிடிப்பாளர்)*




ரன் சஹன ஈட்டுக் கடனாக ரூபா 5,000/-ஐப் பெறும்போது 40மில்லியன் ரூபா பெறுமதியான பரிசுகளை வெல்லும் வாய்ப்பு

அவசரமாக பணம் தேவையா? அருகிலுள்ள தேசிய சேமிப்பு வங்கிக் கிளைக்கு விரையுங்கள். ரூபா 5,000/- அல்லது அதற்கு மேற்பட்ட ஒவ்வொரு ரன் சஹன ஈட்டுக் கடனுக்கும் நாம் அதிர்ஷ்ட வெள்ளி (ரிதி ரேகா) சான்றிதழ்களை அன்பளிப்பாக வழங்குகின்றோம்.

இச்சலுகை 2004 ஒக்டோபர் 15 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

வட்டி:
*14% ஸ்திரி கணக்கு வைத்திருப்பவர்களுக்கு
*15% ஏனையோருக்கு

அதிர்ஷ்ட வெள்ளி (ரிதி ரேகா) பரிசு விபரங்கள்.

— 1வது பரிசு 5மில்லியன் பெறுமதியான வீடு அல்லது பணம்.
— 2வது பரிசு 1.5மில்லியன் பெறுமதியான வாகனம் அல்லது பணம்.
— 3வது பரிசு ஒவ்வொன்றும் ரூபா 10,000 பெறுமதியான 10 பரிசுகள்.
— 4வது பரிசு ஒவ்வொன்றும் ரூபா 5,000 பெறுமதியான 20 பரிசுகள்.
— 5வது பரிசு ஒவ்வொன்றும் ரூபா 1,000 பெறுமதியான 2000 பரிசுகள்.
— 6வது பரிசு ஒவ்வொன்றும் ரூபா 500 பெறுமதியான 2400 பரிசுகள்.



NSB NSB

தென்னிந்தியாவில் அவதியுறும்

# அகதிகள் திரும்பி வருவதை சட்டபூர்வமாக்குவது அவசியம்

## மன்னார் புனர்வாழ்வு ஒன்றியச் செயலாளர் கருத்து

புத்தளம்,ஜூலை7

"தென்னிந்தியாவுக்கு இடம்பெயர்ந்து சென றுள்ள வடபகுதி அகதிகள் தற்சமயம் தாய கத்திற்குத் திரும்பிவர ஆரம்பித்துள்ளனர். எனினும், பலவித சிரமங்களுக்கு மத்தியில் அவர்கள் திரும்பி வருகின்றனர். இவர்களது வருகையைச் சட்டபூர் வமாக்கி வசதிகள் செய்து கொடுத்தால் அகதி களின் வருகையை அதிகப்படுத்தலாம்."

மன்னார் மாவட்ட ஒருங்கிணைந்த புனர்வாழ்வு ஒன்றியத்தின் பொதுச் செயலாளர் கே.எம்.ஏ.கபீர் மேற்கண்ட கருத்தைத் தெரிவித்துள்ளார்.

இது பற்றி அவர் மேலும் கருத்துத் தெரி விக்கும்போது கூறியதாவது:-

"யாழ்ப்பாணம், மன்னார் ஆகிய மாவட்டங் களைச் சேர்ந்த லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் இடம்பெயர்ந்து தென்னிந்தியாவுக்குச் சென்று முகாம்களில் பல சிரமங்களுக்கு மத்தி யில் வாழ்ந்து வருகின்றனர். எனினும், தற்போது நிலவுகின்ற சமாதானச் சூழ்நிலையில் தமது தாயக மண்ணுக்குத் திரும்பிவந்து, தமது சொந்த இடங்களில் குடியேற விரும்பி அங்கிருந்து புறப் பட்டு வருகின்றனர்.

பல சிரமங்களுக்கு மத்தியில் உயிரைப் பணயம் வைத்துப் படகுகளில் வரும்போது பல உயிர் இழப்புக்களும் இடம்பெற்றுள்ளன. மேலும், படகு உரிமையாளர்கள் பயணிகளை நடுக்கட லில் தள்ளிவிடுவதும், அவர்களைக் கடற்படை யினர் கைதுசெய்து நீதிமன்றத்தில் ஒப்படைத்து, பின்னர் விடுதலை செய்வதும் வழமையாகி விட்டன.

- இதனைத் தவிர்க்குமுகமாக, உயிராபத் துக்களைத் தடுப்பதற்காக அரசு அகதிகளின் வருகையைச் சட்டபூர்வமாக்க வேண்டும்.

கப்பல் சேவைகளை ஏற்படுத்திக் கொடுப்ப தன் மூலம் அகதிகள் விரைவாகவும் ஆபத்துக் கள் எதுவுமின்றியும் வரலாம். இதனை அரசு அவசரமாகவும், அவசியமாகவும் செய்ய வேண் டும்" - என்று அவர் மேலும் தெரிவித்தார்.

# "ஸ்கானிங்" மூலம் உறுதிசெய்தபடி குழந்தைகள் பிறக்கவில்லையாம்!

## வடமராட்சிப் பெண் முறைப்பாடு

யாழ்ப்பாணம்,ஜூலை7

குழந்தை பிரசவித்த பெண் ஒருவர் டாக் டர்களுக்கு எதிராக யாழ்.பொலீஸ் நிலையத் தில் முறைப்பாடு ஒன்றை செய்திருக்கிறார்.

மருத்துவர்களால் முன்னர் 'ஸ்கானிங்' மூலம உறுதிப்படுத்தப்பட்டபடி தனக்கு இரண்டு குழந் தைகள் பிரசவிக்கவில்லை என்று தெரிவித்தே பெண் ஒருவரால் இந்த முறைப்பாடு செய்யப் பட்டிருப்பதாக யாழ்.பொலீஸ் நிலைய வட்டா ரங்கள் தெரிவித்தன.

வடமராட்சிப் பகுதியைச் சேர்ந்த பெண் ஒரு வர் சார்பிலேயே இந்த முறைப்பாடு செய்யப் பட்டிருக்கிறது.

'ஸ்கானிங்' மூலம் வயிற்றில் இரு குழந்தைகள இருப்பதை மருத்துவர்கள் உறுதிப்படுத்தி மருத்து வச் சான்றிதழ் வழங்கியிருந்தனர் என்றும் -

எனினும், பிரவசத்தின்போது ஒரு குழந் தையே பிறந்தது என்று மருத்துவர்கள் தெரி வித்தனர் என்றும் -

இது தொடர்பாக உண்மை நிலையைத் தனக்குத் தெளிவுபடுத்துமாறும் - அப்பெண் தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

யாழ்.பொலீஸ்நிலையப் பொலீஸார் இது தொடர்பாக விசாரணைகளை ஆரம்பித்துள்ள னர். (ஐ-7-15-173)

# ஒன்பது அரசியல் தலைவர்களின் கீழ் பணியாற்றிய அனுபவம் பேசும் நூல்

## பிரட்மன் வீரக்கோன் எழுதியது

கொழும்பு,ஜூலை7




ஒன்பது பிரதமர்களின் கீழ் பணி யாற்றிய பிரட்மன் வீரக்கோன் பொதுத்துறையில் தனது 50 வருட காலத்தை நினைவு கூர்ந்து ரென்டரிங் அன்டு சீஸர் எனும் நூலை வெளியிட்டுள்ளார்.

இந்நூல் வெளியீட்டு வைப வம் கடந்த 28ஆம் திகதி திங் கட்கிழமை கொழும்பு பிளாஸா ஹோட்டலில் இடம்பெற்றது. நூலை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க வெளியிட்டு வைத்தார். வெளிநாட டலுவல்கள் அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர், எதிர்க்கட்சித் தலை வர் ரணில் விக்கிரமசிங்க, நாடாளுமன்ற உறுப்பினர்கள், வர்த் தக சமூகப் பிரதிநிதிகள், உட்பட தூதுவரா லயத்தின் பிரமுகர்கள் புத்தக வெளியீட்டாளர் கள், ஊடகவியலாளர்கள் ஆகியோரும் விழா வில் கலந்துகொண்டனர்.

வெளியீட்டு விழாவில் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ், தேசீய மனித உரிமைகள் ஆணைக் குழுத் தலைவர் டாக்டர் ராதிகா குமாரசுவாமி ஆகியோர் நூல் பற்றியும் நூலாசிரியர் பற்றி யும் உரை நிகழ்த்தினர்.

இலங்கையின் பிரதமர்கள், ஜனாதிபதி ஆகியோருக்குச் செய லாளராகவும் சிரேஷ்ட ஆலோசக ராகவும் 50 வருடங்களாகச் சேவை யாற்றிய பெருமை இவரையே சாரும். 1954ஆம் ஆண்டு தனது பொதுத்துறைப் பணியை ஆரம்பித்த பிரட்மன் வீரக்கோன், 2004ஆம் ஆண்டு வரை சிறந்த சேவையாற் றியுள்ளார்.

பிரட்மன் வீரக்கோனின் "ரென்ட ரிங் அன்டு சீஸர்" என்ற இந்த நூலில் சேர்.ஜோன்.கொத்தலா வல முதல் ரணில் விக்கிரமசிங்க வரையான 9 பிரதமர்களின் கீழ் அவர் பணியாற்றிய அனுபவங்கள் அடங்கியுள்ளன. வரலாற்றுப் பதிவுக்குரிய இந்தப் பிரதம மந்திரிகளுடனான நூலாசிரியரின் தனிப்பட்ட அனுபவங்களும் உத்தியோகபூர்வ அனுபவங்களும் வாசகர்களு டன் பகிரப்பட்டுள்ளன.

விஜித யாப்பா வெளியீட்டகம் மற்றும் அமெரிக்கா, பிரிட்டன், இந்தியா ஆகியவற்றின் நியூடவுன் பிரெஸ் ஆகியன இணைந்து இந்நூலை வெளியிட்டு வைத்துள்ளன. (அ)





நெல்லியடியில் கரும்புலி கப்டன் மில்லரின் நினைவிடத்தில் இடம்பெற்ற கரும்புலிகள் தின நிகழ்வில் மில்லரின் உருவச் சிலைக்கு யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி மாலை அணிவிப்பதையும் அங்கு நடைபெற்ற நடன நிகழ்ச்சி ஒன்றில் மாணவி ஒருவர் நடனம் ஆடுவதையும் படங்களில் காணலாம்.

*படங்கள்: எஸ்.சுந்தரலிங்கம் (கரவெட்டிச் செய்தியாளர்)*

வாள்வெட்டுக்கு இலக்கான

# ஈ.பி.டி.பி. குருநகர் பொறுப்பாளர் இராணுவ மருத்துவமனைக்கு மாற்றம்

யாழ்ப்பாணம்,ஜூலை7

வாள்வெட்டுக்கு இலக்காகிப் படுகாயமடைந்து யாழ்.வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த ஈ.பி.டி.பி. கட்சியின் குருநகர்ப் பொறுப்பாளர் இளங்கோ றீகன் அங்கு தகுந்த பாதுகாப்பில் லாத காரணத்தால் பலாலி இராணுவ வைத்தி யசாலைக்கு இடமாற்றப்பட்டார்.

கடந்த 4ஆம் திகதி பொதுமக்களுடன் முரண்பட்டு இனந்தெரியாதவரின் வாள்வெட்டுக்கு இலக்கான றீகன் யாழ்.வைத்தியசாலையில் சிகிச்சைக்காக, அனுமதிக்கப்பட்டிருந்தார். யாழ். வைத்தியசாலையில் அவருக்குத் தகுந்த பாது காப்பு இல்லை என்று கருதப்பட்டதால் பலாலி இராணுவ வைத்தியசாலைக்கு அவர் மாற்றப் பட்டுள்ளார் என்று கூறப்பட்டது. (ஒ-6-15)

# இலங்கை அகதிகள் 22 பேர் நெடுந்தீவை அடைந்தனர்

நெடுந்தீவு, ஜூலை7

இந்தியாவில் அகதிகளாகத் தங்கியிருந்த 10 குடும்பங்களைச் சேர்ந்த 22 பேர் படகு மூலம் நேற்று நெடுந்தீவை வந்தடைந்துள்ளனர்.

நேற்றுக்காலை 9.30 மணியளவில் இவர் கள் நெடுந்தீவு உதவி அரச அதிபர் பணி மனைக்கு அருகில் உள்ள கடற்கரையில் வந்து இறங்கினர். இதனையடுத்து 22 பேரும் உதவி அரச அதிபர் பணிமனையில் தங்க வைக்கப் பட்டுள்ளனர்.

கடற்படையினரும் பொலீஸாரும் இவர்க ளிடம் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். இவர்களின் சொந்த இடங்களுக்கு அனுப்பி வைக்கப்படுவதற்காக இன்று இவர்கள் அனைவரும் யாழ்.செயலகத்தில் ஒப்படைக் கப்படவுள்ளனர்.

இந்த 22 பேரும் வவுனியா மற்றும் மன் னார் மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் என்று உதவி அரச அதிபர் பணிமனை வட்டாரங் கள் தெரிவித்தன. (10-ரி)

# 'மினி கச்சேரி' குறித்த வழக்கு: 2 ஆவது சந்தேக நபருக்குப் பிணை

யாழ்ப்பாணம்,ஜூலை7

போலி ஆவணங்கள் மற்றும் சான்றிதழ்களைச சட்டவிரோதமாகத் தயாரித்து வழங்கியதாகக் கூறப்படும் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த இருவரில் இரண்டாவது சந் தேக நபரைப் பிணையில் செல்ல யாழ். நீதி மன்றம் நேற்று அனுமதித்தது.

அரியாலைப் பகுதியில் இயங்கிவந்த 'மினி கச்சேரி'யை கடந்த 26 ஆம் திகதி யாழ்.பொலீ ஸார் முற்றுகையிட்டதுடன், அச்சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் இருவரை கைதுசெய்திருந்தனர். கைது செய்யப்பட்ட இருவரும் யாழ்.நீதிமன்றத்தினால் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

இச்சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணை கள் யாழ்.நீதிமன்றில் நீதிவான் இ.த.விக்ன ராசா முன்னிலையில் இடம்பெற்றன.

போலி இறப்பர் முத்திரைகளைத் தயாரித்து வழங்கினார் என்று கூறப்படும் இரண்டாவது சந்தேக நபரான தில்லையம்பலம் செல்வ ராசா என்பவரை 25 ஆயிரம் ரூபா காசுப் பிணை யிலும் இரண்டு லட்சம் ரூபா செலுத்தக்கூடிய - எழுதுவினைஞர் தரத்திலான - அரச உத்தி யோகத்தரின் ஆள்பிணையிலும் செல்ல நீதி வான் அனுமதித்தார்.

முதலாவது சந்தேக நபரான ஆறுமுகம் ஜோசப் சில்வானஸ் என்பவரை எதிர்வரும் 19 ஆம் திகதி வரை தொடர்ந்தும் விளக்க மறியலில் வைக்குமாறும் நீதிவான் உத்தர விட்டார். (ஒ-5)

பேரினவாதத்தின் மற்றோர் அடாவடித்தனம்

# பாலம்பட்டாறு பத்தினி அம்மனுக்கு நேரெதிரிலேயே பௌத்த விகாரை!

திருகோணமலை,ஜூலை7

"திருகோணமலையில் பாலம்பட்டாறு பாலத் துக்கு அருகில் உள்ள - பிரபலமான - பத்தினி அம்மன் கோயிலுக்கு நேரெதிரில் தமிழர்களுக குச் சொந்தமான காணியில் பௌத்த விகாரை ஒன்றைக் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டு வருகின்றது.

"சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குப் பலதடவை கள் முறையிட்டும் எந்தவித தடை நடவடிக்கை யும் எடுக்கப்படவில்லை.

"இந்தப்போக்கு, தற்போது சமாதான சக வாழ்வுக்காக மேற்கொள்ளப்பட்டுவரும் நட வடிக்கைகளை மோசமாகப் பாதிக்கும்" - இவ் வாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கு கடிதம் மூலம் சுட்டிக்காட்டியிருக்கின்றார் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கே.துரை ரெட்ணசிங்கம்.

அதில் அவர் மேலும் தெரிவித்திருப்பதா வது:-

புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தானதை அடுத்து திருகோணமலை மாவட்டத்தில் இது வரை இடம்பெயர்ந்திருந்த மக்கள் மீளக்குடி யேறத் தொடங்கியுள்ளனர். அத்தகைய குடியி ருப்பு இடங்களில் அல்லது கிராமங்களில் வழி பாட்டுத்தலங்கள் அமைக்கப்படுவது பொதுவாக ஏற்புடையதே.

ஆனால், தமிழர்கள் காலங்காலமாக ஆதிக கம் செலுத்திவந்த ஒரு கிராமத்தில் - சிங்க ளக் குடியிருப்போ, பௌத்த கோயிலோ இருந் ததற்கான அடையாளமோ சாட்சியமோ காட்டப் பட முடியாத ஒரு கிராமத்தில் - பௌத்த கோவில் ஒன்றைக் கட்ட முயல்வது பெரிதும் வேதனைக் குரியதாகும்.

தம்பலகாமத்துக்கும் திருகோணமலைக்கும் இடையில் உள்ள விளாங்குளம் என்ற தமிழ்க் கிராமத்தில் பௌத்த கோயில் ஒன்று கட்டப் பட்டு வருகின்றது.

பாலம்பட்டாறு பாலத்துக்குப் பக்கத்தில் உள்ள - பிரபலமான - பத்தினிஅம்மன் கோயி லுக்கு நேரெதிரில் தனியார் ஒருவரின் காணி யில் அவரது அனுமதியின்றியே பௌத்தகோவில ஒன்றைக் கட்டுவதற்கு ஆயத்தங்கள் நடக் கின்றன.

சம்பந்தப்பட்ட ஐந்து ஏக்கர் நிலமும் தம் பலகாமத்தைச் சேர்ந்த வரதலிங்கத்தினுடை யது. 34 ஆண்டுகளுக்கு முந்திய காணி அபி விருத்திச் சட்ட உரிமத்தை அவர் கொண்டி ருக்கின்றார்.

சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் பல தடவை கள் ஆட்சேபித்த போதும் கட்டுமானத்துக்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

தமிழ்க்கிராமங்களில் இவ்வாறு பலவந்த மாகக் குடியிருப்புக்கள், கட்டுமானங்கள் அமைக் கப்படுவதைத் தமிழ் எம்.பிக்களாகிய நாங்கள் வேறுபட்ட பல சமயங்களில் ஆட்சேபங்களை எழுப்பி வந்துள்ளோம்.

சமாதான சகவாழ்வுக்கு முயற்சிகள் எடுக் கப்பட்டுவரும் இந்தச்சமயத்தில், இத்தகைய நடவடிக்கைகள் வெவ்வேறு இனங்களிடையே முறுகல் நிலையை மோசமடைய வைத்துச் சமா தான எத்தனங்களில் பாரதூரமான விளைவு களை ஏற்படுத்திவிடும்.

எனவே, அமைதியின்மையையும், அதிருப் தியையும் களையும் விதத்தில் விரைந்து நட வடிக்கை எடுக்கப்படுவது உசிதமானது.

எனினும், இத்தகைய பாங்கிலான நட வடிக்கை தொடர்பாக எனது கடும் ஆட்சே பத்தைத தெரிவிக்கின்றேன்.

- இப்படி துரைரெட்ணசிங்கம் எம்.பி. தமது கடிதத்தில் தெரிவித்துள்ளார். (க)

# ரவி கருணாநாயக்கவுக்கு முன்பிணை தந்தது நீதிமன்று!

## பொலீஸ் நடவடிக்கை குறித்து வீசனம்

கொழும்பு,ஜூலை7

முன்னாள் அமைச்சரும், தற்போதைய ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினருமான ரவி கருணாநாயக்கவுக்கு கோட்டை நீதிமன்றம் முன்பிணை அனுமதி வழங்கியுள்ளது.

சட்டத்திற்கு முரணாகத் தம்மைக் கைது செய்வதற்குப் பொலீஸார் முயற்சிகளை மேற் கொண்டு வருவதால், தமக்கு முன்பிணை வழங்கு மாறு கோட்டை மஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் ரவி கருணாநாயக்க சார்பில் தாக்கல் செய்யப் பட்டிருந்த மனுவை விசாரணை செய்த நீதிவான சரத் சி.கருணாரத்ன, ரவி கருணாநாயக்காவின் கோரிக்கையை ஏற்றுக்கொண்டார்.

இதன்படி, ஒவ்வொன்றும் ஐம்பதாயிரம் ரூபா பெறுமதியான இரண்டு ரொக்கப்பிணைகளுடன் ரவி கருணாநாயக்கவுக்கு முன்பிணை வழங்கு கின்றார் என அவர் தீர்ப்பளித்தார். அத்துடன், ரவி கருணாநாயக்கவின் கடவுச்சீட்டை நீதிமன் றில் ஒப்படைக்குமாறும் நீதிவான் உத்தரவிட்டார்.

ரவி கருணாநாயக்கவைக் கைதுசெய்யும் விடயத்தில் பொலீஸார் நடந்து கொண்ட விதத்தை நீதிவான் விமர்சித்ததோடு, அவர் ஓர் எம்.பி. என்பதையும் கவனத்திற் கொள்ளாது, அரசியல் அழுத்தங்களுக்குப் பொலீஸார் துணை போனமை கண்டிக்கத்தக்கது எனவும் குறிப்பிட்டார்.

உதயன்

## தமிழகத்தில் தங்கியுள்ள அகதிகள் அவலம்

தென்னிந்தியாவில் தஞ்சம் புகுந்துள்ள வடபகுதி அகதிகள் தற்சமயம் தாயகத்திற்குத் திரும்பிவர ஆரம்பித்துள்ளனர்; திரும்பிவர ஆவலாக உள்ளனர். ஆனால், அவர்களின் வருகைக்குச் சட்டபூர்வமான வழி, வசதியேதுமில்லை. அதனால், அவர்கள் பல சிரமங்களுக்கு மத்தியில் உயிரைப் பணயம் வைத்துப் படகுகளில் தமது தாயகம் திரும்பி வரவேண்டியவர்களாக உள்ளனர். இப்படித் திரும்பிவரும் சமயம் உயிரிழப்புகளையும், ஆபத்துக்களையும் அவர்கள் சந்திக்கும் அவலமும் உள்ளது. எனவே, அவர்கள் தாயகம் திரும்புவதற்கான சட்டபூர்வ ஏற்பாடுகளையும் முறைகளையும், வசதிகளையும் அரசு செய்து கொடுக்கவேண்டும்.

மன்னார் மாவட்ட ஒருங்கிணைந்த புனர்வாழ்வு ஒன்றியத்தின் பொதுச்செயலாளர் இவ்வாறு கோரியிருக்கின்றார்.

வடக்கு - கிழக்கில் இலங்கை அரசபடைகளால் ஈழத் தமிழர்களுக்கு எதிராகப் பெரும் கொடூர யுத்தம் ஒன்று கட்டவிழ்த்துவிடப்பட்டபோது, அதற்கு முகம் கொடுக்க முடியாத அப்பாவித் தமிழ்ப் பொதுமக்கள் தங்களதும் தங்களது பிள்ளைகுட்டிகளினதும் உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்காகத் தமது வீடுவாசல்கள், சொத்துப்பத்துக்கள், உடைமைகள் யாவற்றையும் கைவிட்டுத் தாயகத்தைத் துறந்து - அருகிலுள்ள தென்னிந்தியாவுக்கு ஓடித்தப்பினர்.

அங்கு உயிரைத் தக்கவைத்து தங்கிக்கொள்வதற்கு அவர்களுக்கு வாய்ப்பளிக்கப்பட்டது என்னவோ உண்மையே. ஆனால், வாழ்க்கை வளமானதாக அமையவில்லை. நமது மக்கள் அங்கு மாக்களாகவும் வாழவேண்டியிருந்த சோகக் கதையைச் சொல்லிமாளாது.

நலன்புரி மையங்கள் என்று அழைக்கப்படும் தடுப்பு முகாம்கள் போன்ற சுமார் 102 நிலையங்களில் இன்றும் ஏறத்தாழ ஒரு லட்சம் அகதிகள் தங்கியுள்ளனர். இன்னும் விளக்கமாகச் சொல்வதானால், அவல வாழ்வு வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

தாய்நாட்டில் யுத்தம் நிறுத்தப்பட்டு தற்காலிகமாகவேனும் சமாதானம் நிலவுவது அவர்களது வாழ்வில் நம்பிக்கையை ஊட்டியுள்ளது. ஆனால், அந்த நம்பிக்கையும் பகற்கனவாகிப் போயிருப்பது கவலைக்குரியது.

தஞ்சம்புகுந்த இடத்தில்தான் பஞ்சவாழ்வு என்றால், மீண்டும் சொந்த இடங்களுக்குத் திரும்பி தங்கள் வாழ்க்கையை மீளமைத்துக்கொள்ளவும் அவர்களுக்கு வாய்ப்பு மறுக்கப்பட்டிருக்கின்றது.

தமது சொந்த இடங்களுக்கு - தாயகத்திற்கு - திரும்புவதற்கும் வழியின்றி புகுந்த இடத்தில் அடைக்கப்பட்டவர்களாக - அடக்கப்பட்டவர்களாக அந்தரிக்கின்றார்கள் அந்த ஏதிலிகள்.

இந்த அகதிகளில் பெரும்பாலானோர் தென்னிந்திய அகதி முகாம்களில் பட்ட கஷ்டம் போதும். எப்பாடுபட்டேனும் தாயகம் திரும்பிவிடுவோம் என்ற திடமான உறுதியில் இருக்கின்றார்கள். ஆனால், திரும்பத்தான் வழியில்லை. எல்லாப்பக்கத்தாலும் முட்டுக்கட்டை.

இந்த அகதிகள் தமது தாயகத்துக்குத் திரும்புவதற்கான வழிமுறைகள் இன்னும் வகுக்கப்படவில்லை என்பதை ஐ.நா. அகதிகள் தூதரகத்தின் கொழும்புப் பேச்சாளர் மீவ் முர்ளி ஒப்புக்கொள்கின்றார்.

இந்தியாவிலுள்ள இலங்கை துணைத் தூதுவர் சுமித் நாகந்தால, தாங்கள் அகதிகளை மீள அழைக்கத் தயாராக இருக்கின்றார்கள் என்று கூறுகின்றனர்.

ஆனால், யுத்தநிறுத்தம் நடைமுறைக்கு வந்து இரண்டரை வருடங்களாகியும் இன்னும் நாடுதிரும்ப விரும்பும் அகதிகளை மீள அழைத்து வருவதற்கான சட்டபூர்வ ஏற்பாடு ஒன்றுமே செய்யப்படவில்லை.

இவ்வாறு அகதிகளாகத் தஞ்சம்புகுந்த குற்றத்திற்காகத் தமிழகத்தில்...அடைக்கப்பட்டிருக்கும் - அடக்கப்பட்டிருக்கும் - ஈழத்தமிழர்கள் பலரின் வீடு, வாசல்கள் இராணுவ நடவடிக்கைகளினால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன; உயர் பாதுகாப்பு வலயங்கள் என்ற பெயரில் விழுங்கப்பட்டிருக்கின்றன.

எனவே, இந்த அகதிகள் நாடு திரும்பினால் - தாயகம் மீண்டால் - அவர்களுக்குப் புனர்வாழ்வு அளிக்கும் பொறுப்பு ஒருபுறமிருக்க, அவர்களது வீடு, வாசல், நிலங்களை ஆக்கிரமித்திருக்கும் படையினர் அவற்றை விட்டு வெளியேறி அவற்றைத் திரும்பிக் கையளிக்க வேண்டியிருக்கும் என்ற நெருக்கடி புதிதாக முளைத்து விடும் என இலங்கை அரசுத் தரப்பு கருதுகின்றது போலும். அதனாலேயே அந்த அகதிகள் தமது தாயகத்துக்குத் திரும்புவதற்கு சட்டபூர்வமான வழிமுறையை உருவாக்கிவிடாது அது இழுத்தடித்து வருவதாகக் கருதவேண்டியுள்ளது.

ஆனால், இது விடயத்தில் அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம் ஏன் மிதமிஞ்சிய மௌனமும், மென்மைப் போக்கும், வேகமின்மையும் காட்டுகின்றது என்பதுதான் புலப்படவில்லை.

இலங்கையில் செயற்படும் மற்றொரு ஐ.நா. அமைப்பு யுனிசெவ். சிறுவர்களைப் படையில் சேர்க்கும் விவகாரத்தில் அளவுக்கு மீறி யுனிசெவ் காட்டும் அக்கறையில் ஒரு துளியையாவது அதே ஐ.நாவின் மற்றொரு அமைப்பான அகதிகளுக்கான ஐ.நா.தூதரகம் (யு.என்.எச்.சீ.ஆர்.) தமிழகத்தில் உள்ள அகதிகளை அவர்களின் சுயவிருப்பின் பேரில் தாயகத்துக்கு மீள அழைத்து வருவதற்கான சட்டபூர்வ வழிமுறை ஒன்றை ஏற்படுத்துவதில் காட்டாமல் இருப்பது ஏனோ? தமிழர்களுக்குப் பதில் விளங்காத கேள்வி இது.!

# மகப்பேற்று விடுதியைத் திருத்த 50 லட்சம் ரூபா கிடைத்தது

யாழ்.போதனா வைத்தியசாலையின் மகப்பேற்றுச் சிகிச்சை விடுதியைப் புனரமைக்க சுகாதார நலத்துறை அமைச்சு 50 லட்சம் ரூபா (5 மில்லியன் ரூபா) நிதியை ஒதுக்கியுள்ளது.

இந்தத் தகவலை யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்தியகலாநிதி எஸ். சதுர்முகம் தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்.போதனா வைத்தியசாலையின் மகப்பேற்றுச் சிகிச்சை விடுதி நீண்டகாலமாகப் புனரமைப்புச் செய்யப்படாத நிலையில் உள்ளதால் அங்கு தங்கியிருந்து சிகிச்சை பெறுவோர் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

**இலங்கை வங்கி நன்கொடை**

இதனைத் தவிர்க்கும் பொருட்டு வேண்டிய புனரமைப்புப் பணிகளுக்கென 80 லட்சம் ரூபா நிதியை ஒதுக்குமாறு சுகாதார நலத்துறை அமைச்சிடம் கேட்டிருந்தோம். எமது கோரிக்கையை ஏற்று முதற்கட்டமாக சுமார் 50 லட்சம் ரூபாவை அமைச்சு வழங்கியுள்ளது. இதன்மூலம் இக்கட்டடப் புனரமைப்புப் பணிகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அதேபோல மகப்பேற்றுச் சத்திரசிகிச்சைக் கூடத்தை புனரமைப்பதற்கு இலங்கை வங்கி 3 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவை நன்கொடையாக வழங்கியுள்ளது. (ஐ-5)

## கட்டுடை மாதிரிக் குடியேற்றத் திட்டத்துக்கு மின்வழங்கக் கோரி அரச அதிபருக்குக் கடிதம்

யாழ்ப்பாணம்,ஜூலை7

கட்டுடை மாதிரிக் குடியேற்றத் திட்டத்திற்கு விரைவில் மின வழங்குமாறு கோரி, வலி. தென்மேற்கு பிரதேச சபையின் செயலாளர் பி.விக்டர், சண்டிலிப்பாய் பிரதேச செயலர் ஆ.சுப்பிரமணிய சர்மா ஊடாக யாழ்.அரச அதிபருக்குக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

முன்னாள் ஜனாதிபதி ஆர்.பிரேமதாஸவின் வீடமைப்புத் திட்டத்தின்கீழ் கட்டுடையில் 90 வீட்டுத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

இதன் முதற்கட்டமாக 30 வீடுகள் முழுமையாகக் கட்டப்பட்டு அதில் மக்கள் குடியமர்த்தப்பட்டனர்.

ஆனால், குடியமர்த்தப்பட்ட காலத்திலிருந்து இன்று வரை கட்டுடை மாதிரிக் குடியேற்றத் திட்டம் மின்இன்றி இருளிலேயே உள்ளது.

அங்கு வாழும் பாடசாலை மாணவர்கள், அலுவலர்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கட்டுடைக் கிராமத்திற்கு நாலாபுறமும் உள்ள கிராமங்கள் மின்வசதி பெற்றுள்ளன.

எனவே, வறுமையில் வாழும் மக்களும் மின்சார வசதியினைப் பெறக் கட்டுடை மாதிரிக் கிராமத்திற்கு முன்னுரிமைப் பிரகாரம் மின்சாரம் வழங்கியுதவுமாறு கேட்டுக்கொள்கிறேன்- என்றுள்ளது. (8-185)

## 'வாசலில் ஒளிவீசு' வெளியீட்டுவிழா இன்று

யாழ்ப்பாணம்,ஜூலை7

லண்டன் ஈலிங் கனகதுர்க்கையம்மன் ஆலய இந்து இளைஞர் பேரவையினால் உருவாக்கப்பட்ட 'வாசலில் ஒளிவீசு' என்ற பக்திப் பாடல் இசைத்தட்டு மற்றும் ஒலிநாடா ஆகியவற்றின் வெளியீட்டு விழா தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானத்தின் ஆதரவில் இன்று புதன்கிழமை மாலை 4மணிக்கு நடைபெறுகிறது.

நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் நடைபெறவுள்ள இந்த வெளியீட்டு விழாவிற்கு செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் தலைமைவகிப்பார். வரவேற்புரையினை யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் பேராசிரியர் மா,வேதநாதனும், ஆசியுரையை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பராமாசாரிய சுவாமிகளும் நிகழ்த்துவார்கள்.

யாழ்.பல்கலைக்கழக சமூகவியற்றுறைத் தலைவர் பேராசிரியர் நா.சண்முகலிங்கன் சிறப்புரையாற்றுவார். மதிப்பீட்டுரைகளைக் கவிஞர் சோ.பத்மநாதன், பேராசிரியர் சபா.ஜெயராசா ஆகியோரும், வெளியீட்டுரையை பொ.ஐங்கரநேசனும் நிகழ்த்துவார்கள்.

யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ் இதனை வெளியிட்டு வைப்பார். முதற்பிரதியை வல்லிபுரம் இராசையா பெற்றுக்கொள்வார்.

இதில் இடம்பெற்றுள்ள பாடல்களை விடுதலைப் புலிகளின் கலை, பண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் கவிஞர் புதுவை இரத்தினதுரை எழுதியுள்ளார். தென்னிந்தியாவின் பிரபல பாடகர்களான எஸ்.பி.பாலசுப்பிரமணியம், நித்தியஸ்ரீ, சுவர்ணலதா, உன்னிகிருஸ்னன், சுஜாதா, ஹரினி ஆகியோர் பாடியுள்ளனர். பாடல்களுக்கு இலக்கியன் இசையமைத்துள்ளார். (8-201)

# குடாநாட்டில் குற்றச் செயல்களைத் தடுக்க உரிய நடவடிக்கைகளை மேற்கொள்க!

### பிரதேசசபைச் செயலாளர்களுக்கு உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அறிவுறுத்தல்

கொக்குவில்,ஜூலை7

குடாநாட்டில் அதிகரித்துவரும் குற்றச் செயல்களைத் தடுபபதற்கு பிரதேச சபைகளின் செயலாளர்கள் உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என யாழ்பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் க.இராசையா சகல பிரதேசசபைகளின் செயலாளர்களுக்கும் அறிவித்துள்ளார்.

சகல பிரதேசசபைகளின் செயலாளர்களுக்கும் அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே அவர் இந்த அறிவித்தலை விடுத்துள்ளார்.

அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

யாழ்.மாவட்ட செயலகத்தில் அரச அதிபரின் தலைமையில் கடந்த மாதம் முதலாம் திகதி நடைபெற்ற கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களின்படி குற்றச்செயல்களைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். யாழ்.மாவட்டத்திலுள்ள உள்ளூராட்சிச் சபைகளின் வீதியோரங்களில் வரியிறுப்பாளர்கள் வீட்டுக் கழிவுப்பொருள்கள், கல், மணல் போன்றவற்றைப் போட்டு வைத்திருப்பதும் தற்போது அதிகளவில் ஏற்பட்டுக் கொண்டிருக்கும் வாகன விபத்துக்களுக்கு ஒரு காரணமாக இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டதுடன் பாதசாரிகளுக்கும் பல அசௌகரியங்களை ஏற்படுத்துகின்றது.

எனவே, வீதியோரங்களில் பொருள்கள் வைத்திருப்பது தவிர்க்க வேண்டியதன் அவசியத்தைப் பொதுமக்களுக்கு அறிவுறுத்துவதற்கு உடனடியாக ஆலோசனை வழங்கப்படவேண்டும்.

அது மட்டுமல்லாமல் இதனைத் தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்துவதற்கு ஏதுவாக வீதி சுத்திகரிக்கும் ஊழியர்களுக்கு இது விடயமாக வேண்டிய அறிவுறுத்தல்களை வழங்கி அவர்களிடமிருந்து பெறப்படும் அறிக்கையின் அடிப்படையில் பொருத்தமான நடவடிக்கைகளை உடனடியாக எடுத்து முன்னேற்ற அறிக்கையை அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன் - என்றுள்ளது. (8-76)

## பாடசாலை நூலகங்களை விருத்தி செய்ய 5 ஆயிரம் ஆசிரியர்களுக்குப் பயிற்சி

### கல்வியமைச்சு நடவடிக்கை

கொழும்பு,ஜூலை7

நாடு முழுவதும் 5 ஆயிரம் பாடசாலைகளில் நூலகங்களை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் ஒவ்வொரு பாடசாலையில் இருந்தும் ஒவ்வொரு ஆசிரியரைத் தெரிவுசெய்து அவர்களுக்கான நூலகப்பயிற்சிகளைக் கல்வியமைச்சு வழங்கி வருகின்றது.

சுமார் 450பேர் வடக்கு - கிழக்கு மாகாணத்தில் ஆசிரிய நூலகர்களாகத் தெரிவுசெய்யப்பட்டுப் படிப்படியாக பயிற்சிகளைப் பெற்று வருகின்றனர். இவர்கள் பாடசாலையில் தினமும் 3 பாடவேளைகளுக்குக் குறையாது நூலக அபிவிருத்திக் கடமையில் ஈடுபடுத்தப்படுவார்கள்.

இவர்களுக்கான பயிற்சியின் முதற்கட்டமாகத் திருகோணமலை மாவட்டத்தில் கந்தளாய், அம்பாறை மாவட்டம் மகாஓயா, தெஹியத்தகண்டி கல்விவலயங்களிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட 40 சிங்கள மொழிமூல ஆசிரிய நூலகர்களுக்குக் கடந்த 2ஆம் திகதி திருகோணமலை மாகாணக் கல்வியமைச்சின் முகாமைத்துவ மண்டபத்தில் இப்பயிற்சி ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அடுத்த கட்டமாக, வவுனியா தெற்கு, மன்னார், மடு, கிளிநொச்சி கல்விவலயங்களிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட 50 ஆசிரிய நூலகர்களுக்கு இன்று புதன்கிழமை முதல் எதிர்வரும் 11ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை வவுனியா கல்வி அலுவலகத்தின் முகாமைத்துவ மண்டபத்தில் மேற்படி பயிற்சிகள் வழங்கப்படும் எனவும் -

வவுனியா வடக்கு, முல்லைத்தீவு, துணுக்காய் ஆகிய கல்வி வலயங்களைச் சேர்ந்த ஆசிரிய நூலகர்கள் 50பேருக்கு நாளை வியாழக்கிழமை முதல் 20 ஆம திகதி செவ்வாய்க கிழமை வரை வவுனியா தமிழ் வித்தியாலயத்தில் இப்பயிற்சிகள் வழங்கப்படும் என வும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (8-201)

### நாளை

ஆனி 24
வியாழக்கிழமை
(08.07.2004)
திதி : ஷஷ்டி
காலை 6.55 வரை.
நட்சத்திரம்: உத்தரட்டாதி
பின்னிரவு 5.51 வரை.
சுபநேரம்: 7.28 - 8.58
ராகுகாலம்: 1.28 - 2.58
(பழைய நேரப்படி)

## 5 வருட சேவையைப் பூர்த்திசெய்த பட்டதாரி ஆசிரியர்களுக்குத் தரமுயர்வு

யாழ்ப்பாணம்,ஜூலை7

பட்டதாரிகள் நியமனத் திட்டத்தின் கீழ் 15-07-1998 இல் ஆசிரிய நியமனம் பெற்று 5வருடம் சேவையைப் பூர்த்தி செய்தவர்கள் தரம்II வகுப்பு II இற்கு உள்வாங்கப்படவுள்ளனர்.

இதற்கான நடவடிக்கைகளைச் சகல வலயக் கல்விப் பணிப்பாளர்களும் தயார்செய்து மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவிற்கு அனுப்பி வைக்குமாறு வடக்கு-கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் ஆர்.தியாகலிங்கம் அறிவித்துள்ளார்.

பட்டதாரிகள் நியமனத்திட்டத்தின் கீழ் வடக்கு-கிழக்கு மாகாணத்தில் கலை, வர்த்தக, விஞ்ஞான, பட்டதாரிகள் 15.07.1998 இல் நியமனம் பெற்றனர்.

இவ்வாறு வடக்கு-கிழக்கில் உள்ள 8 மாவட்டங்களிலும் நியமனம் பெற்றவர்கள் ஒரு வருடப்பயிற்சியின் பின்னர் அந்தந்த வலயக்கல்வி அலுவலகங்களிலே 15.07.1999 முதல் நியமனம் பெற்றனர்.

15.07.1999 முதல் கடமையாற்றி 5வருடம் சேவையாற்றியவர்களே ஆசிரியர் சேவையின் 3 - I இல் இருந்து தரம் II வகுப்பு II இற்குப் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.

எனவே, 15.07.1998 இல் நியமனம் பெற்றவர்கள் அதிபர், கோட்டக்கல்வி பணிப்பாளர், வலயக் கல்விப் பணிப்பாளர், மாகாணக் கல்விப்பணிப்பாளர் ஊடாக கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளருக்கு இந்த மாதம் 30ஆம் திகதிக்கு முன்னர் விவரங்களை அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (8-185)

### உதயவாக்கு

நட்பும், உறவும் அதன் பகிர்வின் சுவையிலேயே தங்கியுள்ளன.

**கோல்டன் ஈகிள் பாதுகாப்புச் சேவை**
**வெற்றிடங்கள்**
**கனிஷ்ட பாதுகாப்பு உத்தியோகத்தர்கள்**
**ஆண்கள்/பெண்கள்**

தகைமைகள்:
1. க.பொ.த. (சா/த) கணிதம், தமிழ் உட்பட ஆறு பாடங்களில் சித்தி.
2. நல்ல தேகாரோக்கியமும், கண்பார்வையும் இருத்தல் வேண்டும்.
3. உயரம்: 5'4'' குன்றயாமல் இருத்தல் வேண்டும்.
4. ஆரம்பச் சம்பளம் ரூபா 5100/-
5. வயதெல்லை: 20 தொடக்கம் 55 வரை

குறிப்பு: முதலுதவிப்படை, சாரணர்படை, மெய்வல்லுநர்களுக்கும் இளைப்பாறிய பொலீஸ்/படை உத்தியோகத்தர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.

கிராம அலுவலர் நற்சான்றிதழ், பிறப்பு அத்தாட்சிப்பத்திரம், கல்வித்தகைமை, தே.அ.அ.போட்டோ பிரதி முதலியவற்றுடன் 10.07.2004 காலை 10.00 மணிக்கு நேர்முகப்பரீட்சைக்குச் சமுகங்கொடுக்கவும்.

இல.43, கல்லூரி வீதி,
யாழ். இந்து மைதானம் முன்பாக,
யாழ்ப்பாணம். (சி-36236)(33-14-12) -பணிப்பாளர்.



Jayoda **ஜயோதா** ජයෝද

**உத்தியோகபூர்வ முடிவுகள்**

டிக்கட் தொடர் இல. 6283827 முதல் 6296172 வரை
சீட்டிழுப்பு இல. 47 திகதி 05-07-2004

வெற்றி எண்கள் **6 8 7 6 3 0** சுப்பர் எண் **02**

சுப்பர் ஜக்பொட் பரிசு 1,17,40,500/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 6 எண்களுடன் சுப்பர் எண் | - | 1,17,40,500/- | - |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 6 எண்கள் | 01 | 10,00,000/- | 10,00,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 11 | 50,000/- | 5,50,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 110 | 5,000/- | 5,50,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 1,101 | 500/- | 5,50,500/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 10,997 | 50/- | 5,49,850/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 1 எண் | 1,08,987 | 10/- | 10,89,870/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 08 | 5,000/- | 40,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 113 | 1,000/- | 1,13,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 1,097 | 100/- | 1,09,700/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 10,910 | 20/- | 2,18,200/- |
| மொத்தம் | 1,33,335 | | 47,71,120/- |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூபா. 55,75,750/-

இந்த புதன்கிழமைக்கான சுப்பர் ஜக்பொட்
ரூ. **1,20,46,300/-**

தொடர் இல. 7258222 க்கு மேற்பட்ட செம்மஞ்சள் நிற டிக்கட்டுக்கள் 2004 ஜூலை 8 ஆம் திகதி புதன்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்.

ஜயோதா சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் வீட்டுப் பாவனைப் பொருட்களை வெற்றி பெறும் 5 டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

6289450-3-06
6290219-1-82
6291605-5-22
6295302-2-54
6289096-0-44

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.


# சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,ஜூலை7

கோண்டாவில் கிழக்கு காளி அம்பாள் ஆலய வருடாந்த பெருந்திருவிழா எதிர்வரும் 12 ஆம் திகதி காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறவுள்ளது.

(-10-13)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜூலை7

அல்லைப்பிட்டி புனித உத்தரிய அன்னை ஆலயத்தின் வருடாந்த திருவிழா இன்று புதன்கிழமை மாலை 5.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 15ஆம் திகதி மாலை 6 மணிக்கு திருச்செபமாலையும் நற்கருணை ஆராதனையும் நடைபெற்று, மறுநாள் திருநாள் திருப்பலியும் திருச்சொரூபப்பவனியும் இடம்பெறும். (-10)

## சீருடைத் துணிகளைப் பெற்றுக்கொள்க!

யாழ்ப்பாணம்,ஜூலை7

நல்லூர்ப் பிரதேச செயலர் பிரிவில் இலவச சீருடைத்துணி எடுக்கத் தவறியவர்கள் எதிர்வரும் வெள்ளிக்கிழமைக்கு முன்பதாகச் சீருடைகளைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

(-10-139)

## புதிய நிர்வாகிகள்

வட்டுக்கோட்டை,ஜூலை7

நீண்டகாலமாக உரிய செயற்பாடின்றிக் காணப்பட்ட வட்டுக்கோட்டை கால்நடைவளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்திற்குப் புதிய நிர்வாக சபைத்தெரிவு அண்மையில் நடைபெற்றது.

தலைவராக அ.ரகுநாதனும் செயலாளராக எஸ்.சுப்பிரமணியமும் பொருளாளராக நா.அகிலனும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். (-10-161)

## மின்சாரம் வழங்கப் பின்னடிப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை7

பண்டத்தரிப்பு பிரான்பற்று கிராமத்திற்கு மின்வழங்குவதற்கு இலங்கை மின்சார சபையின் வடக்குப் பிராந்தியம் பின்னடித்து வருகிறது.

இவ்வாறு பிரான்பற்று நாவலர் சனசமூக நிலையம் விடுத்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரான்பற்று கிராமம் பல வருடங்களாக மின்சாரம் இன்றி உள்ளதை எடுத்துக்கூறி மகஜர்கள் சமர்ப்பித்திருந்ததுடன், கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜின் சிபார்சுடனும் பல கடிதங்கள் சமர்ப்பிக்கப்பட்டன.

ஆனால், இன்றுவரை மின்சாரசபை சாதகமான பதிலைத்தரவில்லை.

எனவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதனைக் கவனத்தில் எடுத்து மின்சாரம் வழங்குவதற்கு ஆவனசெய்யுமாறு பிரான்பற்று நாவலர் சனசமூக நிலையம் வினயமாகக் கேட்டுள்ளது என்று அந்தச் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(-10-185)

## பொதுக்கூட்டம்

கைதடி,ஜூலை7

சாவகச்சேரிப் பிரதேச சபையின் நாவற்குழி உப அலுவலகத்தைச் சேர்ந்த சனசமூக நிலையங்களுக்கான மாதாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 11ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10மணிக்கு நாவற்குழி சனசமூக நிலையங்களின் உபசமாசத் தலைவர் சி.பற்குலேந்திரன் தலைமையில் நாவற்குழி உப அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

சனசமூக நிலையங்கள் மற்றும் கிராம அபிவிருத்தி சம்பந்தமாகக் கலந்துரையாட இருப்பதால் ஒவ்வொரு சனசமூக நிலையங்களிலும் இருந்து குறைந்தது ஐந்து பிரதிநிதிகளைத் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

(10-75)

## பதவியுயர்வு

சாவகச்சேரி பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றிய எஸ். பீஎன. அபேரத்ன உதவிப்பொலீஸ் அத்தியட்சகராகப் பதவி உயர்வுடன் தீவகப் பிரிவுக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

ஊர்காவற்றுறை, நெடுந்தீவு, காரைநகர் ஆகிய பொலீஸ் நிலையப் பிரிவுகளுக்குப் பொறுப்பாக இவர் கடமையாற்றுவார்.

இதேவேளை, பொலீஸ் நிலையக் குற்றத் தடுப்புப் பிரிவுப் பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றிய எஸ். ஏ.எிக்ரோகித கம்டிஹா மாவட்டட் பொலீஸ் நிலையமொன்றுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

(10-117)

## திருமண அழைப்பு

உ
சிவமயம்

அன்புடையீர்!

நிகழும் தாரண வருஷம் ஆனித்திங்கள் 24ஆம் நாள் (08.07.2004) வியாழக்கிழமை இலங்கை நேரம் மு.ப. 11 மணி 17 நிமிடம் தொடக்கம் 12 மணி 48 நிமிடம் வரையுள்ள சித்தயோகமும் உத்தரட்டாதி நட்ஷத்திரமும் கன்னிலக்கினமும் கூடிய சுபமுகூர்த்த வேளையில்.

| | |
|---|---|
| திருநிறை செல்வன் | திருவளர் செல்வி |
| **ஜெயசீலன்** | **விஜிதா** |
| (இலத்திரனியல் நிபுணர், டென்மார்க்) | (பொறியியலாளர்) |
| அவர்களுக்கும் | அவர்களுக்கும் |

இறைவன் திருவருள் துணைகொணடு கற்கோவளம் கும்பி அம்மன் ஆலயத்தில் திருமாங்கல்யதாரணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால், அவ்வமயம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இந்நிகழ்வினிற் கலந்து மணமக்களை ஆசீர்வதித்தேகும்வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்:

திரு.திருமதி செ.அருளானந்தஜோதி
அம்புளி ஓடை, புலோலி கிழக்கு, பருத்தித்துறை.
LYNGENSKVARTER - 99,
7400, HERNING, DANMARK.
Tel.: 97215223

திரு.திருமதி அன்னராசா
வல்லிபுரப் பாரியார் ஒழுங்கை,
பருத்தித்துறை.

(இருவீட்டார் அழைப்பு)

(சி-36261) (24-12-14-33)

# 50 ஆயிரம் பேருக்கு சிகிச்சை

சாவகச்சேரி வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவில் கடந்த ஆறு மாதங்களில் சுமார் 50ஆயிரம் பேர் சிகிச்சை பெற்றுள்ளனர்.

ஜனவரி மாதத்தில் 7ஆயிரத்து 416பேரும் பெப்ரவரி மாதத்தில் 7ஆயிரத்து 582பேரும் மார்ச் மாதத்தில் 8ஆயிரத்து 732பேரும் ஏப்ரல் மாதத்தில் 7ஆயிரத்து449 பேரும் மே மாதத்தில் 7ஆயிரத்து956பேரும் ஜூன் மாதத்தில் 10ஆயிரத்து302 பேரும் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்றுள்ளனர். இதேவேளை, கடந்த ஆறு மாதங்களில் 3ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் விடுதிகளில் தங்கியிருந்தும் 25ஆயிரத்துக்கு மேற்பட்டோர் கிளினிக்குகளிலும் சிகிச்சை பெற்றுள்ளனர்.(10-117)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயத்தில் ஆசிரியையாகவும், பகுதித் தலைவராகவும், உப அதிபராகவும் சேவையாற்றி ஓய்வுபெற்றுச் செல்பவரும், உரும்பிராய் கற்பக விநாயகர் மகளிர் சிக்கன கடன்வழங்கு கூட்டுறவுச்சங்கத்தின் இந்நாள் தலைவியுமான

திருமதி மதுரநாயகி திருநாவுக்கரசு

அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

அவர்களால் வளர்த்தெடுக்கப்பட்ட
நன்றியுள்ள பழைய மாணவர்கள்.

(33867) (43-12-14-33)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது கல்வி நிறுவனத்தில் சமூகக்கல்விப் பாடத்தைச் சிறப்பாகக் கற்பித்து வரும்

**திரு.முத்துக்குமாரு கண்ணகுமார்**

(B.Com.)

ஆசிரியர் அவர்கள் புதிய பாடத்திட்டத்திற்கு அமைவாகத் தரம் 10,11இற்கான சமூகக்கல்வியும் வரலாறும் பாடத் தொகுப்பு நூலை இரண்டாவது பதிப்பாக வெளியிட்டு, எமது கற்றலை இலகுபடுத்தியமைக்காக ஆசிரியரைப் பாராட்டியும் மேலும் பல திறன்மிக்க ஆக்கங்களை வெளியிட்டு மாணவர்களின் அறிவுப் பசிக்கு உதவ வேண்டும் எனவும் வாழ்த்துகின்றோம்.

சதாபொன்ஸ்,
அல்வாய்.

மீட்டல்வகுப்பு
ஆசிரியர்களும், மாணவர்களும்.

(C/33860)(42-12-14-33)


**ஆசிரியர் போட்டிப் பரீட்சை பயிற்சி வகுப்புகள்**

ஆரம்பம்: 09.07.2004 9 மணி (காலை)
வழமையான ஆசிரியர்

**புதிய உயர் கல்லூரி**
ஆரியகுளம் சந்தி, யாழ்.
(3858) (24-12-14-33)



**LEARN FRENCH**
**NOW**
**AT JAFFNA**

பிரஞ்சு மொழி ஆரம்பநிலை வகுப்புகள் ஒகஸ்டில் ஆரம்பம்.
விவரங்களுக்கு:

**Aliance Francaise of Jaffna,**
83, Palaly Road,
Kantharmadam, Jaffna.
(சி-33857)(42-12-14-33)


## காணவில்லை



நாவலடி, அரியாலையைச் சேர்ந்த
**வினாசித்தம்பி இராமலிங்கம்**
(மனநோயாளி) என்பவரைக் கடந்த 04.07.2004 ஞாயிறு தொடக்கம் காணவில்லை. இவரைக் கண்டவர்கள் கீழ்வரும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

நிரந்தர முகவரி: நாவலடி அரியாலை
தற்காலிக முகவரி: சி.பொன்ராசா (சிறி) சாந்தி
முள்ளிவீதி, ஆனைக்கோட்டை.
T.P: 077 6549931, 077 6184714 (பொன்ராசா)

(33855)(12-14-33)

## மரண அறிவித்தல்

**திருமதி அமிர்தம்மா கதிரவேலு**

*(இளைப்பாறிய ஆசிரியர், நாவலர் மகா வித்தியாலயம்)*

காரைநகர் பயிரிக் கூடலைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் இல. 229, பிறவுண் வீதியை வசிப்பிடமாகவும், I.B.C.றோட், வெள்ளவத்தையைத் தற்காலிக இருப்பிடமாகவும் கொண்ட திருமதி அமிர்தம்மா கதிரவேலு அவர்கள் 03.07.2004 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் கதிரவேலுவின் (இளைப்பாறிய ஆசிரியர்) அன்பு மனைவியும் காலஞ்சென்ற திரு.திருமதி வேலுப்பிள்ளையின் அன்பு மகளும் காலஞ்சென்ற திரு.திருமதி கந்தையாவின் அன்பு மருமகளும் ரவீந்திரன் (லண்டன்), மகேந்திரன் (நோர்வே) ஆகியோரின் பாசமிகு தாயாரும் அனுஷா (லண்டன்), திருமகள் (நோர்வே) ஆகியோரின் அன்பு மாமியாரும் வைஷ்ணவியின் அன்புப் பேர்த்தியும் அரசரட்ணம் (நியூஸிலாந்து), தர்மரட்ணம் (கணித பேராசிரியர், யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ராஜேஸ்வரி, கனகேஸ்வரி, அன்னபூரணம், காலஞ்சென்ற நாகம்மா ஆகியோரின் மைத்துனியும் திரு.திருமதி சற்குணாநந்தன் (லண்டன்), திரு.திருமதி கருணைஆனந்தன் (கொழும்பு) ஆகியோரின் சம்பந்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (08.07.2004) வியாழக்கிழமை காலை 10மணியளவில் கொழும்பு கனத்தை மயானத்தில் தகனஞ் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

6B, Pinto Place, Hampdan Lane,
Clombo-06.T.P:2365259.
(33854)(35-12-14-33)

தகவல்:
கணவர், பிள்ளைகள்.

# ஜெயலலிதாவுக்கு தோல்விக்கு மேல் தோல்வி...!

**13** நடந்துமுடிந்த இந்திய நாடாளுமன்றத் தேர்தலில் தமிழகம் மற்றும் பாண்டிச்சேரியில் கலைஞர் கருணாநிதி தலைமையிலான கூட்டணி வரலாறு காணாத விதத்தில் அனைத்துத் தொகுதிகளிலும் வெற்றிவாகைசூடிச் சரித்திரம் படைத்துள்ளது. இந்த வெற்றிக்கான காரணங்களையும் முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கு ஏற்பட்ட பரிதாபத் தோல்விக்கான காரணங்களையும் தேர்தல் நடைபெற்றவேளையில் தமிழகத்திற்கு விஜயம் செய்திருந்த 'உதயன்' சிறப்புப்பிரதிநிதி "கஜனி" அலசி ஆராய்கிறார்.

நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்னர் ஜெயலலிதா இந்துமதத் தீவிரவாதியாகக் காட்சியளித்தார். பா.ஜ.கட்சியுடனான உறவுக்கும் இதுவும் முக்கிய காரணமாக அமைநததது. காஞ்சிப் பெரியவர், இந்து முன்னணித் தலைவர் இராமகோபாலன், பத்திரிகையாளர் "சோ" ஆகியோர் தேர்தலில் ஜெயலலிதாவை ஆதரித்ததற்குக் காரணம் இந்த இந்துத்துவக் கொள்கையே ஆகும்.

ஆனால், தேர்தல் முடிந்த கையோடு அதாவது 40 தொகுதிகளிலும் படுதோல்வியைச் சந்தித்தவுடன் நிலைமை தலைகீழாக மாறியது. மதமாற்றத் தடைச்சட்டத்தை தமிழக அரசு வாபஸ் பெற்றது. தமிழக அரசின் சார்பில் முதல்வர் ஜெயலலிதா இது குறித்த அறிவிப்பை வெளியிட்டார். தேர்தலின்போது ஜெயலலிதா அணி வெற்றி பெறவேண்டும் எனப் பகிரங்கமாகக் கருத்துத் தெரிவித்த இந்து முன்னணியின் தலைவர் இராம.கோபாலன் ஜெயலலிதாவின் இந்தக் குத்துக்கரணத்தை அடுத்து கருத்துத் தெரிவிக்கையில் பின்வருமாறு குறிப்பிட்டார்.

"பயம் என்பதே என்ன என்று அறியாதவர் என நாங்கள் நம்பிய தமிழக முதல்வர் ஜெயலலிதா இப்படி ஒரு கோழையைப் போல பின் வாங்கிப் புறமுதுகுகாட்டி ஓடுகிறார் என்பதை நினைத்தபோது மிகப்பெரிய அதிர்ச்சியால் வேதனையால் துடித்துப் போனேன்.

"ஜெயலலிதாவின் இந்த முடிவினால் இந்தியா முழுவதுமுள்ள அனைத்து மடாதிபதிகளும் ஆதீனகர்த்தர்களும் அதிர்ச்சியடைந்துள்ளனர். ஜெயலலிதா எங்களை அவமானப்படுத்திவிட்டார். இதை ஜனநாயக ரீதியில் - காந்திய வழியில் எதிர்த்துப் போராடுவதென நாங்கள் முடிவெடுத்திருக்கிறோம். இதைக் காஞ்சி சங்கராச்சாரியார், மாதா அமிர்தானந்தமாயி. சுவாமி தயானந்த சரஸ்வதி போன்ற பெரியவர்கள் எல்லாம் ஆதரிக்கின்றார்கள். இந்தச் சட்டத்தை வாபஸ் பெற்றதன் மூலம் இந்து விரோதச் செயல்களை மேற்கொண்ட அரசியல்வாதிகளின் பட்டியலில் ஜெயலலிதாவும் இடம்பிடித்துவிட்டார்" என இராம.கோபாலன் கருத்துத் தெரிவித்துள்ளார். இதே இராம.கோபாலன்தான் தேர்தலுக்கு முன்னர் ஜெயலலிதாவை ஆதரித்து அறிக்கை விட்டவர் ஆவார். (இக்கட்டுரைத் தொடரின் 8ஆவது பாகத்தைப் பார்க்கவும்)



தலைமைச் செயலர் லட்சுமி பிரானேஷ்

### குடமுழுக்கு விழாக்கள்

இது இவ்வாறிருக்க, இந்து ஆலயங்களில் குடமுழுக்கு விழாக்கள் இடம்பெற்றால் தமிழக அரசுக்கு ஆபத்து நேரிடும் என ஒரு சோதிடர் தெரிவித்துள்ளாராம். இந்து ஆலயங்களில் ஆடி மற்றும் ஆவணி மாதங்களிலேயே பெருமபாலும் குடமுழுக்கு விழா நடைபெறுவது வழக்கம். இவ்வருடம் தமிழ்நாட்டில் சுமார் 80 முக்கிய கோவில்களில் குடமுழுக்கு விழாக்களை நடத்த கோயில்களின் நிர்வாகங்கள் தீர்மானித்து அதற்கான ஏற்பாடுகளையும் செய்துமுடிததுள்ளன. இந்நிலையிலேதான் இந்தக் குடமுழுக்கு விழாக்களை ஒத்திவைக்க தமிழக அரசு முனைந்துள்ளது. இதற்கென சட்டம் கொண்டுவந்து நடவடிக்கை எடுக்க முடியாத நிலையில் இந்து அறநிலைததுறை அதிகாரிகளைக் கொண்டு கோவில்களின் நிர்வாகத்தினரை அச்சுறுத்தி குடமுழுக்கு விழாக்களை ஒத்திவைக்கும் முயற்சியில் தமிழக அரசு ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பிள்ளையார் பட்டி என்னும் ஊரில் கற்பக விநாயகர் கோவில் உள்ளது. இந்தக் கோவிலுக்கான குடமுழுக்கு விழா நடத்தத் தீர்மானிக்கப் பட்டிருந்தது. ஆனால், இந்து அறநிலைத் துறையைச் சேர்ந்த அதிகாரிகள் குடமுழுக்கு விழாவை ஒத்திவைக்குமாறு கோவில் நிர்வாகத்தினருக்கு நெருக்குதல்களைக் கொடுத்துவருவதாக இந்திய தொலைக்காட்சி சேவை ஒன்றில் தெரிவிக்கப்பட்டது.

மத சம்பந்தமான வழிபாடுகள், பின்பற்றல்கள் மற்றும் வழக்கங்கள் ஆகியன பல நூற்றாண்டுகளாக மக்களிடையே ஊறிப்போயுள்ளன. இந்த விடயங்களில் மக்கள் விட்டுக்கொடுக்கத் தயாரில்லை. இந்நிலையில் சொந்த நலன்களுக்காக மக்களிடையே நிலவும் சம்பிரதாயங்களை மாற்ற முனைந்தால் அது மக்களுக்கு அதிருப்தியையே உருவாக்கும். மீண்டும் தமிழகத்தில் ஆட்சியமைக்கக் கிடைத்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி மக்களுக்குப் பணியாற்றி அதன் மூலம் மக்களின் கௌரவத்திற்கு ஆளாவதை விடுத்து மக்களுக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொண்டதன் பலனை நாடாளுமன்றத் தேர்தலில் அனுபவித்ததை ஜெயலலிதா மறந்துவிட்டார் போலும். குடமுழுக்கு விழாக்களுக்குத் தடை விதிக்க எடுக்கும் முயற்சிகள் சில சமயம் அவரது அரசியல் வாழ்க்கையையே தலைமுழுக வைத்துவிடவும் கூடும்.

தேர்தலில் படுதோல்வியைச் சந்தித்த பின்னர் தனது 3ஆண்டு ஆட்சியில் மேற்கொண்ட கெடுபிடிகளை ஜெயலலிதா விலக்கினார் - வாபஸ் பெற்றார். இவற்றை தேர்தல் அறிவிக்கப்படுமுன்னர் அவர் மேற்கொண்டிருந்தால் அதிமுக - பாரதிய ஜனதா கூட்டணிக்கு ஒரு கௌரவமான நிலைமை ஏற்பட்டிருக்கும் என வெங்கையாநாயுடு தெரிவித்துள்ளார். ஜெயலலிதாவின் இந்த வாபஸ்களை 'கண்கெட்ட பின்னர் சூரிய நமஸ்காரம் என' கலைஞர் கருணாநிதி வர்ணித்திருந்தார்.

அரச ஊழியர்களின் வேலைநிறுத்தத்தின் போது சுமார் 14 ஆயிரம் தற்காலிக ஊழியர்களை ஜெயலலிதா பணியில் அமர்த்தினார். ஆனால், அரச ஊழியர்களுக்கு எதிரான நடவடிக்கைகளை வாபஸ் பெற்றதால் பழிவாங்கப்பட்ட அரச ஊழியர்களுக்கு மீண்டும் வேலை வழங்கப்படவே தற்காலிக ஊழியர்களை வேலையிலிருந்தும் நீக்க வேண்டியதாயிற்று. அவ்வாறு நீக்கப்பட்ட 14ஆயிரம் ஊழியர்களும் ஆர்ப்பாட்டத்தில் இறங்கினர். ஊடகங்களும் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு ஆதரவை வழங்கின. பணி நீக்கப்பட்ட 3 நாள்களுக்குள்ளேயே அவர்களுக்கு மீண்டும் வேலை வழங்கப்பட்டது. பொது நலனைக் கவனத்திற்கொள்ளாது தனிப்பட்ட அபிலாஷைகளை நிறைவேற்ற முற்படுவதால் தானாகவே ஜெயலலிதா அபகீர்த்தியைச் சம்பாதித்துக் கொள்ளுகிறார்.



டி.டி.பி. தினகரன்

### தவறாக வழிநடத்திய ஆலோசகர்கள்

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை அதி.மு.க.பலம் வாய்ந்த மாநிலக் கட்சி. நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டசபை உறுப்பினர்கள், மாவட்ட மற்றும் வட்டச் செயலர்கள், அடிமட்டத் தொண்டர்கள் ஆகியோரைக் கொண்ட கட்சியாகும் (இம்முறை மட்டும் அக்கட்சி சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவரும் வெற்றி பெறவில்லை) இருப்பினும் ஜெயலலிதா, அவரது உடன்பிறவா சகோதரி சசிகலா மற்றும் அவர்களைத் தவறான வழியில் நடத்தும் ஓரிரு உயர் அதிகாரிகளின் அபிலாஷைகளை நிறைவேற்றும் கட்சியாகவே அ.தி.மு.க செயற்படுகிறது.

சின்னம்மாவைப் (சசிகலாவை) பார்க்காமல் பெரியம்மாவை (ஜெயலலிதாவை) நேரடியாகப் பார்க்க முடியவில்லை என அமைச்சர்களே கவலைப்படுகின்றனர்.

தேர்தல் முடிந்த கையோடு அமைச்சர்கள் அனைவரும் ஜெயலலிதாவின் இல்லத்திற்கு அழைக்கப்பட்டனர். அவர்களிடம் தேர்தலில் படுதோல்விக்கான காரணம் எழுத்து மூலம் கோரப்பட்டது.

பொதுவாகவே அனைவரும் இரண்டு காரணங்களைத் தெரிவித்தனர். அதாவது, அரசு மீது மக்களுக்குத் திருப்தியில்லை. மற்றது கட்சியின தலைமை மீது மக்களுக்கு அதிருப்தி. ரேசன் கார்டில் "எச்" முத்திரை, கட்டாய மதமாற்றத் தடைச்சட்டம், சத்துணவில் முட்டை வழங்காதது, விவசாயிகளுக்கு இலவச மின்சார ரத்து, அரச ஊழியர்கள், ஆசிரியர்கள் பாதிக்கப்பட்டமை, தொழிலாளர்கள் மீது விதிக்கப்பட்ட வரி ஆகியனவே மக்கள் அரசு மீது அதிருப்தியடைய முக்கிய காரணங்கள் ஆகும். இவை அனைத்தையும் அமைச்சர் பொன்னையனின் சிபார்சின் பேரிலேயே ஜெயலலிதா நடைமுறைப்படுத்தினார். ஆனால், அதே அமைச்சர் பொன்னையன் முதலமைச்சருக்கு அளித்த அறிக்கையில் அரசு மீது மக்களுக்கு அதிருப்தி எனக் குறிப்பிட்டிருந்தார்.

அமைச்சர் பொன்னையனின் அறிக்கையில் பார்த்ததும் ஜெயலலிதா வெகுண்டெழுந்தார்.

"நீ சொல்லித்தான் எல்லாத்தையும் ரத்துச் செய்தோம். இப்ப என்னடாவென்றால் இதெல்லாம்தான் மக்கள் அதிருப்திக்குக் காரணம் எனக் கூறுகிறாய். உனது அமைச்சு அதிகாரியும் அப்படித்தான் கூறுகிறார். என்னதான் ஐயா நினைச்சிக்கிட்டிருக்கிறீங்க" என காஜித்துள்ளார்.

அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளை ரத்துச் செய்வதாக மறுநாள் ஜெயலலிதா அறிக்கை விட்டார். ஐ.ஏ.எஸ். அதிகாரிகளில் ஓரிருவரே ஜெயலலிதாவுடன் நெருங்கிப் பழகினர். அவர்களுள் நிதித்துறைச் செயலர் நாராயணன் குறிப்பிடத்தக்கவர். அவருக்கு ஜெயலலிதாவிடம் இருக்கும் செல்வாக்கைக் கண்டு தலைமைச் செயலாளர் லட்சுமி பிரானேஷால் எதுவும் செய்யமுடியவில்லை. இதனால் இதுவரை காலமும் தன் கருத்தைச் சொல்ல முடியாதிருந்த தலைமைச் செயலாளர் தேர்தல் முடிவுகளுக்குப் பின்னர் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் தன் கருத்தை வெளிப்படையாகத் தெரிவித்தார். அரச ஊழியர்கள் மீதான நடவடிக்கைகள் வாபஸ் பெறப்பட்டதற்கு தலைமைச் செயலாளரின் வலியுறுத்தல்களும் காரணம் எனக் கூறப்படுகிறது.

தேர்தல் ஆணையகத்தின் கெடுபிடிகள் தேர்தல் கண்காணிப்பாளர்களின் நடவடிக்கைகள் ஆகியவை காரணமாக அரசால் நினைத்தவற்றைச் சாதிக்க முடியாமற் போயிற்று. எதிர்பார்த்தவாறு மாநிலத்தில், குறிப்பாகச் சென்னை நகரில் வன்முறைகள் இடம்பெறவில்லை. சட்டத்தையும் ஒழுங்கையும் பேணுவதில் பொலீஸாரும் ஓரளவு ஒத்துழைத்தனர். இது அரசுக்கு எரிச்சலை ஊட்டியுள்ளது. பல பொலீஸ் அதிகாரிகள் இடமாற்றங்களுக்கு உட்படலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது. அரசின் விருப்பத்திற்கேற்ப செயற்பட்ட உயர் அதிகாரிகளுக்கு உரிய மரியாதை அளிக்கவும் அரசு தயாராகி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. வாக்காளர் பட்டியல்களில் பெயர்களை நீக்கியது போன்ற பல குளறுபடிகளுக்குக் காரணமானவரும் தேர்தல் ஆணையகத்தால் உடனடியாக இடமாற்றம் செய்யப்பட்டவருமான திருவள்ளூர் மாவட்ட முன்னாள் கலெக்டர் சந்திரமோகன் மீண்டும் அதே பதவிக்கு நியமிக்கப்படவுள்ளார் எனக் கதையடிபடுகிறது. தமிழகத் தேர்தல் ஆணையாளர் சாரங்கியை மாற்றுவதற்கும் தமிழக அரசு நடவடிக்கைகள் மேற்கொண்டது எனவும் ஆனால், தேர்தல் ஆணையகம் அவரை அப்பதவியில் தொடர்ந்து வைத்திருக்கத் தீர்மானித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. வாக்காளர் பட்டியல் குளறுபடிகள் தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் சாரங்கியை மாற்ற தேர்தல் ஆணையகம் விரும்பவில்லை எனத் தெரியவருகிறது.

மத்தியில் எந்தக் கட்சிக்கும் அறுதிப்பெரும்பான்மை கிடைக்காது. அந்நிலையில் அ.தி.மு.கவுக்கு 33 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருந்தால் எந்தக் கட்சி ஆட்சி அமைத்தாலும் தனது ஆதரவை வழங்கி துணைப்பிரதமர் அல்லது பிரதமர் பதவியைப் பெறலாம் என ஜெயலலிதா கனவு கண்டார். அவர் கண்டது கனவாகவே அமைந்துவிட்டது.



நிதிச் செயலர் நாராயணன்

சோனியா தலைமையிலான காங்கிரஸ் மத்தியில் ஆட்சி அமைத்துள்ள நிலைமையானது ஜெயலலிதாவுக்கு ஒரு தலைவலியாக - பேரிடியாக அமைந்துள்ளது. காங்கிரஸ் இவ்வளவு ஆதரவைப் பெறும் என ஜெயலலிதா நினைக்கவில்லை. அவ்வாறு கணித்தே சோனியாவைக் கேவலமாகப் பேசிவந்தார். இப்போது அதை நினைத்தாலே ஜெயலலிதாவுக்கு உடல் உதறுகின்றது. சோனியா தலைமையிலான காங்கிரஸ் தேர்தலில் வென்றது மாத்திரமன்றி சோனியா பிரதமர் பதவியை ஏற்க மறுத்ததன் மூலம் சோனியா பெரும் பாராட்டைப் பெற்றுள்ளார். இந்திய மக்களின் மனதில் இடத்தைப்பிடித்து விட்டார்.

சோனியா பிரதமர் ஆகவேண்டும் என்பதற்காக வாக்குப்பதிவு மின்னணு யந்திரத்தின் பொத்தானை அழுத்திய போது இருந்த மனநிலையை விட, பல மடங்கு சோனியாவைப் பற்றி மக்கள் தங்கள் மனதில் வைத்திருந்த மதிப்பும் மரியாதையும் கிடுகிடு என வளர்ந்து இமயத்தின் கொடு முடியை எட்டி விட்டது.

சோனியா பிரதமர் ஆவதைத் தடுப்பவர்கள் சோனியாவின் தியாகம் காரணமாக சோனியாவின் புகழை பல மடங்கு மக்கள் மனதில் பதிததன் மூலம் தங்களுக்குத் தாங்களே தோல்வியை அணைத்துக்கொண்டனர். கடந்த தேர்தலில் பா.ஜ.கட்சியை மக்கள் நிராகரித்தனர். அது முதல் தோல்வி. இப்போது தங்களுக்குத் தாங்களே உருவாக்கிக்கொண்ட படுதோல்வியாகும். மொத்தத்தில் சோனியா பா.ஜ கட்சியை 2 தோல்வியைச் சந்திக்க வைத்துள்ளார்.

எந்தப்பக்கம் திரும்பினாலும் ஜெயலலிதா தோல்வியையே சந்திக்கிறார். தோல்விகள் ஏற்படுவதற்கான காரணங்களை அவர் வரிந்து கட்டி விலைக்கு வாங்கிக்கொள்கிறார் - தேடிக் கொள்கிறார். அதற்கு மற்றவர்கள் என்ன செய்ய முடியும்.

தேர்தல் கள நிலைவரங்களின் படி தேர்தல் அண்மித்த வேளையில் ஜெயலலிதா நம்பியிருந்த ஒரேயொரு தொகுதி பெரியகுளமாகும்.

## தமிழகத் தேர்தல் வெற்றி: உள்ளிருந்து வரும் பார்வை

### எதைச்செய்தாலும் முரண்பாடு

வீராணம் ஏரியிலிருந்து சென்னைக்குத் தண்ணீர் இன்றுவரும் நாளைவரும் என ஜெயலலிதா அரசு மக்களை ஏமாற்றிவருகிறது. மேட்டூர் அணையில் நீர்மட்டம் அதிகரித்தால் மாத்திரமே வீராணம் ஏரிக்குத் தண்ணீர் வரும். வீராணம் ஏரிவரண்டு போயுள்ளது. அந்த ஏரியில் ஆழ்துளை கிணறுகளை அமைத்து சென்னைக்கு நீரை அனுப்பினால் நிலத்தடி நீர் பாதிக்கப்பட்டு விடும் என விவசாயிகள் கூக்குரல் எழுப்புகின்றனர். ஜெயலலிதா எதைச் செய்தாலும் மக்களுடன் முரண்படும் நிலைமையே உருவாகிறது.

இதற்கிடையில், நாடாளுமன்றத்தின் அடுத்த கூட்டத்தொடரில் "பொடா" சட்டத்தை ரத்துச் செய்யும் மசோதா கொண்டுவரப்படவுள்ளதாக சட்ட அமைச்சர் கடந்தவாரம் தெரிவித்துள்ளார். தனது எதிரிகளை பழிவாங்குவதற்கு "பொடா" சட்டத்தை ஜெயலலிதா பயன்படுத்திவந்தார். வை.கோ., நெடுமாறன் போன்ற தலைவர்கள் இதற்குப் பலியாகினர். ஜெயலலிதாவுக்குக் கைகொடுத்த "பொடா" சட்டமும் ரத்துச்செய்யப்படவுள்ளது.

அங்கு போட்டியிட்ட அ.தி.மு.க. வேட்பாளர்-ஒரேயொரு நம்பிக்கை நட்சத்திரமாக டி.டி.பி.தினகரன் கணிக்கப்பட்டார். ஜெயலலிதா தனது வளங்கள் அனைத்தையும் அத்தொகுதியில் பயன்படுத்தினார். முடிவில் அங்கும் தோல்வி. பணப்பட்டுவாடா தொடர்பாக அங்கு உட்கட்சிப்பூசல் தலைவிரித்தாடுகின்றது.

ஜெயலலிதாவுக்குத் தோலிவிகளும் பின்னடைவுகளும் வரிசையாக வந்து கொண்டிக்கின்றன. மத்திய அரசு ஜெயலலிதா மீது ஏதாவது குற்றத்தைக் கண்டு பிடித்து அரசமைப்பின் 356ஆவது சரத்தைப் பயன்படுத்தி மாநில அரசைக் கலைத்தாலும் அதில் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை. அப்படி நடைபெற்றால் அவ்வேளையில் இதே தி.மு.க. கூட்டணி தொடர்ந்திருக்குமேயானால் நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகளே மாநில சட்டசபை முடிவாகவும் அமையும் என்பதில் சந்தேகமே இல்லை. அதற்கு வாய்ப்புகள் உள்ளனவா என்பது குறித்து அடுத்த பாகத்தில் பார்ப்போம்.

(வளரும்)

# ஒரு லட்சத்து 20 ஆயிரம் மாணவர்கள் சத்துணவுத்திட்டத்தில் இணைக்கப்படுவர்

## கல்வியமைச்சின் சுகாதாரப்பிரிவுப் பணிப்பாளர் தகவல்

அடுத்த ஆண்டுமுதல் ஒரு லட்சத்து 20 ஆயிரம் மாணவர்கள் பாடசாலை மாணவர்களுக்கான சத்துணவுத் திட்டத்தில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

கல்வி அமைச்சின் போஷாக்கு, தொழில்நுட்ப மற்றும் போதைப்பொருள் தடுப்புக் குறித்த நாடளாவிய ரீதியிலான நிகழ்ச்சித்திட்ட அங்குரார்ப்பண வைபவத்தில் விசேட அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றிய, கல்வி அமைச்சின் போஷாக்கு, சுகாதார மேம்பாட்டுப் பிரிவுப் பணிப்பாளர் திருமதி எச்.எம்.பட்டலியத்த இதனைத் தெரிவித்தார்.

கம்பளை ஜினராவ ஆண்கள் கல்லூரியில் ஜனாதிபதி சந்திரிகா தலைமையில் தொடக்கிவைக்கப்பட்ட இத்திட்டத்தில் திருமதி பட்டலியத்த தொடர்ந்தும் உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:-

நாடளாவிய ரீதியில் தீவிர போஷாக்கின்மைக்குள்ளாகியுள்ள 12 மாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கான சத்துணவை வழங்குவதற்காகவே அரசு இத்திட்டத்தை முன்வைத்துள்ளது. இதன்கீழ் சுமார் 1,800 பாடசாலைகள் கொண்டுவரப்பட்டுள்ளன.

அடுத்த கட்டமாக 2005 ஆம் ஆண்டு 3 ஆயிரம் பாடசாலைகளைச் சேர்ந்த ஒரு லட்சத்து 20 ஆயிரம் மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

இதற்காக 3 கோடி 60 லட்சம் ரூபா செலவாகும் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. ஏற்கனவே, ஐந்து கோடி ரூபா இதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

உள்நாட்டு, வெளிநாட்டு நிறுவனங்கள் பல இதற்கு உதவிவழங்கவுள்ளன. வடக்கு, கிழக்கிலுள்ள பாடசாலை மாணவர்களுக்குச் சத்துணவு வழங்கவென 7 கோடி 50 லட்சம் ரூபாவை உலக வங்கி ஒதுக்கியுள்ளது - என்றார். (8-ரி)

### சண்டிலிப்பாய்ப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவின் கூட்டம் நாளை

யாழ்ப்பாணம்,ஜூலை7

சண்டிலிப்பாய் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் நாளை 8ஆம் திகதி வியாழக்கிழமை காலை 11 மணிக்கு நடைபெறும்.

பிரதேச செயலர் ஆ.சுப்பிரமணியசர்மா தலைமையில் இடம்பெறவுள்ள இக்கூட்டத்தில் வீதி மின்விளக்கு அமைத்தல், வீதி அபிவிருத்தி, கட்டுடைப்பகுதிக்கு மின்சாரம் வழங்குதல், பஸ்போக்குவரத்து, உலக உணவுத் திட்டம், துரித மகாவலித்திட்ட நகர்வுகள் குறித்து ஆராயப்படவுள்ளது.

மேற்படி கூட்டத்திற்கு அரச திணைக்கள அதிகாரிகள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் அழைக்கப்பட்டுள்ளனர்.

(8-185)

# சித்திரவதை குறித்து விளக்கம்தர அழைப்பு

கொழும்பு,ஜூலை7

தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த சமயம் தான் சித்திரவதைக்குள்ளாகினர் என ஐக்கிய நாடுகளின் மனித உரிமை அமைப்பிடம் முறைப்பாடு செய்திருக்கும் ஏழுபேரை அது பற்றிய விளக்கத்தைத் தருவதற்கு வருமாறு பொலீஸ் தலைமையகம் அழைத்துள்ளது.

வவுனியா ஜோசப் இராணுவமுகாம், வவுனியா பொலீஸ் நிலையம் மற்றும் மூதூர், கந்தளாய் போன்ற பொலீஸ் நிலையங்களில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சமயம், இவர்கள் பல்வேறு சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

வவுனியாவைச் சேர்ந்த செல்லத்துரை காந்தன், மனோக்ரன் பிரகலாதன், தருமதேவேந்திரன், நடராசா கமலா (ஓமந்தை), யோகநாதன் யோகேந்திரன் (மாங்குளம்), அப்துல் ஜபார் (திருகோணமலை), மொகமட் தீரியாத் (திருகோணமலை) ஆகியோரே இவ்வாறு அழைக்கப்பட்டுள்ளனர். பொலீஸ் தலைமையகத்தில் உள்ள விசேட புலனாய்வுப் பிரிவுக்குச் சென்று தமக்கு மேற்கொள்ளப்பட்ட சித்திரவதை பற்றி இவர்கள் விளக்கமளிக்க வேண்டும் எனப் பொலீஸார் கேட்டுள்ளனர்.


# இசுசு ஜேணி பஸ்

## விற்பனைக்கு

**GR XXXX (கஸ்ரம் ஜேணி பஸ்)**
**60 ஸ்ரீ XXXX (ஜேணி) தொடர் இலக்கங்களைக் கொண்ட கஸ்ரம் ஜேணி பஸ்கள் விற்பனைக்குண்டு.**

தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:
தி.ஸ்ரீதரன்
யாழ்ப்பாணம்,
பருத்தித்துறை வீதி,
கோப்பாய் தெற்கு, கோப்பாய்.
தொ.பே.இல.: 0777 - 110832

(சி-35995) (24-14)


# மீள்கேள்வி அறிவித்தல்

## கல்விப் பணிப்பாளர், கல்வித் திணைக்களம், யாழ்ப்பாணம்.

01. இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசின் வடகிழக்குக் கல்வி அமைச்சின் நிதி ஒதுக்கீட்டிலிருந்து கீழ் குறிப்பிடப்பட்ட கட்டட வேலைகளைப் பூர்த்திசெய்ய யாழ். கல்வித்திணைக்களக் கல்விப் பணிப்பாளரும் கேள்விச் சபைத் தலைவருமாகிய என்னால் கேள்வி அறிவித்தல் செய்யப்படுகிறது.
02. அ. ஒப்பந்தகாரர் இக்ராட் (ICTAD) பதிவுப்புத்தகம் உள்ளவராகவும் இலங்கை தேசியக் கட்டட ஒப்பந்தகாரர் சங்கத்தின் அங்கத்தவராகவும், பதிவுப் புத்தகம் 2004ஆம் ஆண்டு புதுப்பிக்கப்பட்டதாகவும் இருக்கவேண்டும்.
    ஆ. பாடசாலை அபிவிருத்திச் சங்கமும் தங்களால் இவ்வேலையைச் செய்து முடிக்கமுடியுமானால் தங்கள் பாடசாலைக்குரிய கீழ்வரும் வேலைசெய்யக் கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக் கீழ்வரும் உரியகாலத்தில் நடவடிக்கை எடுக்கவும். பாடசாலை அபிவிருத்திச் சங்கத்திற்கு 2.அ.வில குறிப்பிட்ட சட்டதிட்டமும் மீளளிக்கக்கூடிய மீளளிக்கமுடியாத வைப்புப் பணமும் விதி விலக்களிக்கப்பட்டது.
03. கேள்விப்பத்திரங்கள் வழங்கல் 2004.07.07ஆம் திகதியிலிருந்து 2004.07.14ஆம் திகதி முற்பகல் 3 மணிவரை வழங்கப்படும். பத்திரங்கள் யாவும் எம்மால் 2004.07.19ஆம் திகதி முற்பகல் 10 மணிவரை ஏற்றுக்கொள்ளப்பட்டு அன்றையதினம் முற்பகல் 10.30 மணிக்கு கேள்விப் பத்திரப்பெட்டி திறக்கப்படும்.
04. கேள்விப் பத்திரங்களைப் பாடசாலைக் கட்டடப் பொறியியலாளர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளவும். ஆவணங்களை இலவசமாகப் பெறுவதுடன், மேலதிக தகவல் தேவைப்படின் இங்கு பெற்றுக்கொள்ளலாம்.
05. கேள்விப் பெட்டி திறக்கும் நேரத்தில் விரும்பும் கேள்விகாரர் அல்லது அவரால் எழுத்து மூலம் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி, பாடசாலை அபிவிருத்திச் சங்கம் கேள்விப் பத்திரம் பெற்றிருப்பின் அபிவிருத்திச் சங்கத் தலைவரும் தவறாது கேள்விச் சபையில் கலந்துகொள்ளவும்.

| பாடசாலையின் பெயரும் வேலையின் விவரமும் | மீளளிக்கமுடியாத வைப்புப் பணம் | மீளளிக்கக்கூடிய வைப்புப் பணம் | இக்ராட் இலக்கம் |
|---|---|---|---|
| யா/புனித பெனடிற் றோ.த.க. பாடசாலை நல்லூர். மிகுதி வேலை மூன்று மாடி வகுப்பறைக் கட்டடம் 90'x25' | 500.00 | 15,000.00 | M8 |
| யா/இந்து ஆரம்பப் பாடசாலை யாழ்ப்பாணம் மிகுதி வேலை மேல்மாடி கட்டடம் 70'x25' | 500.00 | 45 00.00 | M9 |
| யா/புனித திரேசா வித்தியாலயம் அச்சுவேலி கணனி அறை அமைத்தல் 6.10mx6.10m | 250.00 | 750.00 | M9 |

06. கேள்வியாளர் மீளளிக்கக்கூடிய, மீளளிக்கமுடியாத பணத்தை மேற்கூறப்பட்ட காலத்துக்குள் யாழ். வலயக் கல்விப்பணிப்பாளர், அலுவலகத்தில் வைப்புச்செய்தபின் கேள்வி ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளவும்.
07. கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொண்டவர்கள் எம்மால் வழங்கப்படும் இரண்டு கட்டட மதிப்பீட்டு அறிக்கைப் பத்திரங்களில் ஒன்று மூலப்பிரதியாகவும் மற்றையது பிரதியாகவும் கொள்ளவேண்டும்.
08. கேள்வியாளர் அல்லது பாடசாலை அபிவிருத்திச்சங்கத் தலைவர் பூர்த்திசெய்யப்பட்ட மூலப்பிரதியையும் ஒபபந்த ஆவணங்களையும் ஒரு கடித உறையிலும் மறு பிரதியை வேறு கடித உறையிலும் இடல் வேண்டும். இரண்டு கடித உறைகளையும் வேறு பெரிய கடித உறையிலிட்டு மேல்மூலையில் வேலையின் விவரம், ஒப்பந்தகாரரின் இறப்பர் முத்திரை பொறிக்கப்பட்டு தலைவர், கேள்விச்சபை, வலயக்கல்வி அலுவலகம், யாழ்ப்பாணம் என விலாசமிட்டு யாழ். வலயக்கல்விப்பணிப்பாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 2004.07.19ஆம் திகதி முற்பகல் 10மணிக்கு முன் இடப்பட வேண்டும்.
09. குறித்த நேரத்திற்குப் பிந்திய கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

ஒப்பம்: **ப.விக்னேஸ்வரன்,**
வலயக் கல்விப் பணிப்பாளர், யாழ்ப்பாணம்.

(சி-36234) (24-12-18)


# STUDY IN INDIA

## Garden City College affiliated to UNIVERSITY of BANGALORE

| COURSES | DURATION | G.C.E. (A/L) PASSES NEEDED |
|---|---|---|
| B.Sc. (Computer Science) | 3 Year | Maths, Physics & Statistics |
| B.Sc. (Fashion & Apparel Design) | 3 Year | Pass in All Subjects in any discipline |
| B.Sc. (Microbiology) | 3 Year | Chemistry and Biology |
| B.Sc. (Genetics) | 3 Year | Chemistry, Physics, Biology, Zoology, Botany |
| B.Sc. (Biotechnology) | 3 Year | Chemistry, Physics, Biology |
| BCA. (Bachelor of Computer Applicants) | 3 Year | Pass in All Subjects in any discipline |
| BBM. (Bachelor of Business Management) | 3 Year | Pass in All Subjects in any discipline |
| BHM. (Bachelor of Hotel Management) | 4 Year | Pass in All Subjects in any discipline |
| B.A. (Journ alism) | 3 Year | Pass in All Subjects in any discipline |
| B.Com (Computers) | 3 Year | Pass in All Subjects in any discipline |

## SSM College of Engineering affiliated to ANNA UNIVERSITY (Chennai)

| COURSES | DURATION | G.C.E. (A/L) PASSES NEEDED |
|---|---|---|
| B.E. Information Technology | 4 Year | Pass in All Subjects with Maths & Physics |
| B.E. Computer Science and Engineering | 4 Year | Pass in All Subjects with Maths & Physics |
| B.E. Electronics and Communication Engineering | 4 Year | Pass in All Subjects with Maths & Physics |
| B.E. Mechanical Engineering | 4 Year | Pass in All Subjects with Maths & Physics |
| B.Sc. Information Technology | 3 Year | Pass in All Subjects with Maths & Physics |
| B.Sc. Computer Technology | 3 Year | Pass in All Subjects with Maths & Physics. |
| B.Sc. Apparel and Fashion Technology | 3 Year | Pass in All Subjects with Maths & Physics |
| M.S.C. Information Technology | 5 Year | Pass in All Subjects in any discipline |

Partial SCHOLARSHIPS for students with average of 75 marks in A/L exam

யாழ்ப்பாணத்தில் தொடர்புகளுக்கு
Mr. K.Jegaeswaran (B.Sc, Dip. in Edu.)
(Chemistry Teacher - J/Vembady Girls High School)
ANDRA, உப்புமடச்சந்தி. K.K.S Road, கோண்டாவில்
Telephone :- 021-4590268 or 9



# மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை

மூளாய், சுழிபுரம்.

## வெளிநோயாளர் சேவை

எமது வைத்தியசாலையில் வெளிநோயாளர் சேவை
தினமும் காலை 8.30 மணிதொடக்கம்
மாலை 5.00 மணிவரை நடைபெறும்.

**மேலதிக சேவைகள்:**

1. ஈ.சி.ஜீ.
2. ஸ்கானிங்
3. நீரிழிவு பரிசோதனைகள் (தினமும் நடைபெறும்)
4. கண் வைத்தியம்
5. பல் வைத்தியம்
6. மகப்பேற்று வைத்தியம்

என்பன விசேட வைத்திய நிபுணர்களால் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் நடைபெறும். நோயாளர்கள் தமது பதிவுகளை முன்கூட்டியே பதிவுசெய்யவும்.

மூளாய். - செயலாளர்.

(C/36233)(42-12-18-24)

# கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் ஆளணி வளப் பற்றாக்குறை

ஒட்டுசுட்டான்,ஜூலை7

வன்னிப் பெருநிலப்பரப்பில் இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசத்தின் பெரும் வைத்திய சாலையாக விளங்கும் கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனை, ஆளணிவளப் பற்றாக்குறையுடன் இயங்கிவருவதாகக் கிளிநொச்சி மாவட்ட வைத்திய அதிகாரி சிவானந்தன் தெரிவித்தார்.

இந்த மருத்துவமனைக்கு 19 வைத்திய அதிகாரிகளும், 25இற்கு மேற்பட்ட தாதியர்களும், 120இற்கு மேற்பட்ட சாதாரண ஊழியர்களும் இருக்கவேண்டும்.

ஆனால், இங்கு 5 வைத்தியர்களும், 8 தாதியர்களும் மற்றும் ஏனைய தர உத்தியோகத்தர்கள் சிலரும் மட்டுமே கடமைபுரிகின்றனர் என்று அவர் விசனம் தெரிவித்தார்.

சுகாதாரத் தொண்டர்கள் மூலமே கூடுதலான சேவைகள் செய்யப்படுகின்றன. இங்குள்ள வைத்தியர்களும் ஏனைய ஊழியர்களும் தொடர்ந்து 24 மணிநேரமும் சேவையாற்ற வேண்டிய நிலை ஏற்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த வைத்தியசாலையின் ஆளணிப் பற்றாக்குறையை நீக்குவதற்கு உதவுமாறு சுகாதார அமைச்சிடம் கோரிக்கை விடுத்திருக்கின்ற போதிலும் சம்பந்தப்பட்டோர் பாராமுகமாக இருக்கின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.(-4)

வன்னிச் செய்திகள்

## கூழாமரத்தில் பிள்ளையார் உருவம்!


ஒட்டுசுட்டான்,ஜூலை7

கூழாமரம் ஒன்றின் அடிப்பகுதியில் விநாயகர் உருவமொன்று தோன்றியுள்ளது.

மாங்குளம் முல்லை வீதியிலுள்ள வெள்ளை மலை என அழைக்கப்படும் இடத்தில் வீதியோரமாக உள்ள கூழாமரத்தினிலேயே இந்த உருவம் தோன்றியிருக்கின்றது.

சிறிதுசிறிதாகத் தோன்றி இப்போது பெரிய உருவமாக வளர்ந்து நிற்கும் இந்தப் பிள்ளையார் உருவத்தை நாளாந்தம் ஏராளமான மக்கள் பார்வையிட்டுச் செல்கின்றனர்.

(-4-7-341)



முள்ளியவளை கிராமிய வங்கிக் கிளையினால் கடந்த 2ஆம் திகதி வெள்ளிக்கிழமை முள்ளியவளைப் பிரதேச விவசாயிகள் மூவருக்கு இலகு கடன் அடிப்படையில் உழவு இயந்திரங்கள் வழங்கப்பட்டன.

ஒவ்வொன்றும் தலா 7 லட்சத்து 75ஆயிரம் ரூபா பெறுமதியான இந்த உழவு இயந்திரங்களைப் பெற்றுக்கொண்ட விவசாயிகள் உழவு இயந்திரங்களுடன் படத்தில் காணப்படுகின்றனர்.

(படம்: பரந்தன் செய்தியாளர்)

## முல்லை, துணுக்காய் வலயங்களின் விளையாட்டுப்போட்டி முடிவுகள்

புதுக்குடியிருப்பு,ஜூலை7

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள முல்லைத்தீவு, துணுக்காய் வலயங்களுக்கு உட்பட்ட பாடசாலைகள் பங்குகொள்ளும் மெய்வன்மைப் போட்டிகள் கடந்த 14 ஆம் திகதிமுதல் ஆரம்பமாகி நடைபெற்றன.

இப்போட்டிகள் மல்லாவி மத்திய கல்லூரியிலும், ஒட்டுசுட்டான் ம.வியிலும் நடைபெற்றன.

14 ஆம் திகதி காலை 9 மணியளவில் மல்லாவி மத்திய கல்லூரி மைதானத்தில் 17, 19 வயது ஆண்களுக்கான உதைபந்தாட்டப் போட்டி நடைபெற்றது.

**17 வயதுப் பிரிவு**

முதலாம் இடம் - புதுக்குடியிருப்பு ம.வி., இரண்டாம் இடம் - முல்லைத்தீவு ம.வி., மூன்றாம் இடம் - மல்லாவி மத்திய கல்லூரி.

**19 வயதுப்பிரிவு**

முதலாம் இடம் - வித்தியானந்தாக் கல்லூரி, இரண்டாம் இடம் - முல்லைத்தீவு ம.வி., மூன்றாம் இடம் - கற்சிலைமடு அ.த.க.பாடசாலை.

பெண்களுக்கான வலைப்பந்தாட்டப் போட்டியில் 15, 17, 19 வயதுப் பிரிவுகள் கலந்துகொண்டன.

**15வயதுப் பிரிவு**

முதலாம் இடம் - விக்கினேஸ்வரா வித்தியாலயம், இரண்டாம் இடம் - கொக்கிளாய் அ.த.க.பாடசாலை, மூன்றாம் இடம் - பாலிநகர் ம.வி.

**17 வயதுப் பிரிவு**

முதலாம் இடம் - பாலிநகர் ம.வி., இரண்டாம் இடம் - முல்லைத்தீவு ம.வி., மூன்றாம் இடம் - புதுக்குடியிருப்பு ம.வி.

**19 வயதுப்பிரிவு**

முதலாமிடம் - கொக்கிளாய் அ.த.க. பாடசாலை, இரண்டாம் இடம் - இரணைப்பாலை றோ.க.வி., மூன்றாம் இடம் - கற்சிலைமடு அ.த.க. பாடசாலை.

**கிரிக்கெட் போட்டி**

**19 வயது ஆண்கள் பிரிவு**

முதலாம் இடம் - யோகபுரம் ம.வி., இரண்டாம் இடம் - வித்தியானந்தாக் கல்லூரி, மூன்றாம் இடம் - மல்லாவி மத்திய கல்லூரி.

எல்லாப் போட்டிகளும் 19 வயது ஆண்கள், பெண்கள் என நடைபெற்றன.

ஆண்கள் பிரிவில் முதலாம் இடத்தினை வித்தியானந்தாக் கல்லூரியும், இரண்டாம் இடத்தினை யோகபுரம் ம.வியும், மூன்றாம் இடத்தினை மல்லாவி மத்திய கல்லூரியும் பெற்றுக்கொண்டன.

பெண்கள் பிரிவில் புதுக்குடியிருப்பு றோ.க. வித்தியாலயம் முதலாம் இடத்தினையும், இரண்டாம் இடத்தினை பாண்டியன்குளம் ம.வியும், மூன்றாம் இடத்தினை கற்சிலைமடு அ.த.க.பாடசாலையும் பெற்றுக்கொண்டன.

**கபடிப்போட்டி ஆண்கள் பிரிவு**

முதலாம் இடம் - புதுக்குடியிருப்பு ம.வி., இரண்டாம் இடம் - இரணைப்பாலை றோ.க.வி., மூன்றாம் இடம் - பாலிநகர் ம.வி.

**பெண்கள் பிரிவு**

முதலாம் இடம் - முத்தையன்கட்டு வலதுகரை அ.த.க.பாடசாலை, இரண்டாம் இடம் - முல்லைத்தீவு ம.வி., மூன்றாம் இடம் - நட்டாங்கண்டல் ம.வி.

**கரபந்தாட்டப்போட்டி**

**15 வயது ஆண்கள் பிரிவு**

முதலாம் இடம் - சிறி சுப்பிரமணிய வித்தியாலயம், இரண்டாம் இடம் - நட்டாங்கண்டல் ம.வி., மூன்றாம் இடம் - மாங்குளம் ம.வி.

**15 வயதுப் பெண்கள் பிரிவு**

முதலாம் இடம் - கலைமகள் வித்தியாலயம், இரண்டாம் இடம் - பாலிநகர் ம.வி., மூன்றாம் இடம் - விக்கினேஸ்வரா வித்தியாலயம்.

**17 வயது ஆண்கள் பிரிவு**

முதலாமிடம் - புதுக்குடியிருப்பு ம.வி., இரண்டாம் இடம் - செம்மலை ம.வி., மூன்றாம் இடம் - யோகபுரம் ம.வி.

**17. வயதுப் பெண்கள் பிரிவு**

முதலாம் இடம் - கலைமகள் வித்தியாலயம், இரண்டாம் இடம் - பாண்டியன்குளம் ம.வி., மூன்றாம் இடம் - மல்லாவி மத்திய கல்லூரி.

**19 வயதுப் ஆண்கள் பிரிவு**

முதலாம் இடம் - செம்மலை ம.வி., இரண்டாம் இடம் - புதுக்குடியிருப்பு ம.வி., மூன்றாம் இடம் - மல்லாவி மத்திய கல்லூரி.

**19 வயதுப் பெண்கள் பிரிவு**

முதலாம் இடம் - வித்தியானந்தாக் கல்லூரி, இரண்டாம் இடம் - செம்மலை ம.வி., மூன்றாம் இடம் - கற்சிலைமடு அ.த.க.பாடசாலை. (-4-353)

## புதுக்குடியிருப்பு ம.வி. முதலாமிடம்

மல்லாவி,ஜூன்7

முல்லைத்தீவு மாவட்டப் பாடசாலைகளுக்கிடையிலான மாவட்டமட்ட விளையாட்டுப் போட்டி கடந்த 17ஆம், 18ஆம் திகதிகளில் மல்லாவி மத்திய கல்லூரியில் நடைபெற்றது.

இப்போட்டியில் புதுக்குடியிருப்பு மகாவித்தியால்யம் முதலாம் இடத்தையும், கொக்கிளாய் அ.த.க. பாடசாலை இரண்டாம் இடத்தையும், வித்தியானந்தாக் கல்லூரி மூன்றாம் இடத்தையும் பெற்றுக்கொண்டன.



கிளிநொச்சி, கண்டாவளை, ஊரியான் கிராமத்தில் அண்மையில் உலகச் சூழல் தினம் கடைப்பிடிக்கப்பட்டது.

இதில் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம் நிகழ்வினை ஆரம்பித்து வைத்து உரையாற்றுவதையும் அருகில் ஊரியான் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் வே.பரமலிங்கம் மற்றும் உறுப்பினர்கள் நிற்பதையும் பட்த்தில் காணலாம்.

(படம்: பரந்தன் செய்தியாளர்)

## அவசர நோயாளிகளின் வாகனம் மாட்டுவண்டில்!

பரந்தன்,ஜூலை7

கண்டாவளைப் பிரிவு இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தினால் தருமபுரம் வைத்தியசாலைக்கு வழங்கப்பட்ட அம்புலன்ஸ் வண்டி மீளப்பெறப்பட்டுள்ளதால் இப்பகுதி நோயாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

பரந்தன் பகுதியிலிருந்து தேராவில் பகுதி வரையான பிரதேசங்களில் வாழும் நோயாளர்கள பல மைல் தொலைவிற்குச் சென்று வாகனங்களில் பயணஞ்செய்ய வேண்டியநிலையும்-

பரந்தன் மற்றும் தேராவில் கிராமங்களில் உள்ள அவசர நோயாளிகளைத் தருமபுரம் வைத்தியசாலைக்கு ஏற்றிச் செல்வதற்கும், அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக வேறு வைத்தியசாலைகளுக்கு நோயாளர்களைக் கொண்டு செல்லவும் இந்த அம்புலன்ஸ் வண்டி பயன்படுத்தப்பட்டு வந்தது.

தற்போது அந்த அம்புலன்ஸ் வண்டி மீளப்பெறப்பட்டிருக்கிறது. அங்கு ஏனைய வாகன வசதிகளும் இல்லை. இதனால் மேற்படி கிராமங்களில் உள்ள அவசர நோயாளிகளை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்வதற்கு மக்கள் மாட்டுவண்டில்களைப் பெரிதும் பயன்படுத்துகின்ற நிலை ஏற்பட்டிருக்கிறது என்றும் கூறப்பட்டது. இதனால் அவ்வப்போது உயிரிழப்புகள் ஏற்பட்டுவருவதாகவும் சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது.

## கிளிநொச்சி தமிழ்ச் சங்கத்தின் திருக்குறள் இலக்கியப் போட்டி

கிளிநொச்சி,ஜூலை7

கிளிநொச்சி மாவட்டத் தமிழ்ச் சங்கத்தால் நடத்தப்படும் திருக்குறள் தமிழ் இலக்கியத் திறன் தேர்வு கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள 30 பாடசாலைகளில் கடந்த மாதம் 27ஆம் திகதி நடத்தப்பட்டது.

கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளரின் அனுசரணையுடன் தரம் 4 தொடக்கம் தரம் 13 வரையான மாணவ, மாணவிகளுக்கு இத்தேர்வு நடத்தப்பட்டது.

தரம் 12,13ஐச் சேர்ந்த பிரிவு 'அ'வில் 226 மாணவர்களும் தரம்9,10,11 ஐச் சேர்ந்த பிரிவு 'ஆ'வில் 845 மாணவர்களும் தரம் 6,7,8ஐச் சேர்ந்த பிரிவு 'இ'யில் ஆயிரத்து 230 மாணவர்களும், தரம் 4,5ஐச் சேர்ந்த பிரிவு 'ஈ'யில் ஆயிரத்து 640 மாணவர்களும தோற்றினர்.

இப்போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கான பரிசும், சான்றிதழ்களும் செப்ரெம்பர் மாதம் கொண்டாடப்பட இருக்கும் திருவள்ளுவர் விழாவில் வைத்து வழங்கப்படும்.

## மீனவர்களின் பிரச்சினை குறித்து மன்னார் கூட்டத்தில் ஆராய்வு

### புலிகளின் தளபதிகளும் பங்கேற்பு

பூநகரி,ஜூலை7

மன்னார் மாவட்டக் கடற்றொழிலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்வதற்கான கூட்டம் ஒன்று கடந்த 24 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 2.00 மணியளவில் கடற்புலிகளின் சிறப்புத்தளபதி கேணல் சூசை தலைமையில் மன்னார் இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசத்தில் நடைபெற்றது.

இதில் மூத்ததளபதி கேணல் பால்ராஜ், மன்னார் மாவட்ட கடற்றொழிலாளர் சங்க சமாசத்தினர், அரச அதிபர், கடற்றொழிலாளர் சங்கப் பணிப்பாளர், பிரதேச செயலாளர், பங்குத் தந்தை, மன்னார் மாவட்ட கடற்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் குகன், இலுப்பைக்கடவை பிரதேச கடற்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் வேங்கைத்தமிழன் போன்றோருடன் பல தொகையான மக்களும் கலந்துகொண்டனர்.

இதில் சமாதானம் பற்றிய சிறப்புரை[illegible] விடுதலைப் புலிகளின் சிறப்புத்தளபதி கே[illegible]ல் பால்ராஜ் அவர்கள் ஆற்றினார்.

இக்கலந்துரையாடலில் போதை ஒழிப்புக்குத் தாம் ஒத்துழைப்பு வழங்குவதாக மக்கள் உறுதி அளித்துள்ளனர்.

(4-403)

# தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சை-2004
## மாதிரி வினாத்தாள் இல. 03

வினாத்தாள் - I நேரம் 45 நிமிடங்கள்

**பக்கம் 1**

★ **கீழே தரப்பட்டுள்ள கூற்றுக்கள் ஒவ்வொன்றும் யாரால் கூறப்பட்டிருக்கலாம் என்பதற்கான மிகப் பொருத்தமான விடையைத் தெரிந்து அதன் இலக்கத்தைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

01) 'எல்லாப் பிள்ளைகளும் பயிற்சிக் கொப்பியை எடுத்துக் கரும் பலகையிலுள்ள கணக்கைச் செய்யுங்கள்.'
(1) வகுப்புத் தலைவன் (2) ஆசிரியர்
(3) அதிபர் (4) அப்பா (...........)

02) 'நாளொன்றுக்கு கூலியாக ரூபா 200 தரவேண்டும்.'
(1) வியாபாரி (2) விவசாயி
(3) முதலாளி (4) தொழிலாளி (...........)

★ **பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் உரிய விடையைத் தெரிவுசெய்து அதற்கு உரிய இலக்கத்தைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.**

03) ஓர் அழிறப்பரின் விலை ரூ. 5.00 ஆகும். ஒரு பேனாவின் விலை ரூபா 17.00 ஆகும். ஒரு பென்சிலின் விலை ரூபா 10.00 ஆகும். ரூபா 57.00 ஐ வைத்திருக்கும் ஒருவர் அப் பணத் தொகை முழுவதையும் கொடுத்து வாங்கக்கூடிய பொருள்களை உள்ளடக்கிய விடை எது?
(1) 2 அழிறப்பர், 2 பேனா, 1 பென்சில்
(2) 2 அழிறப்பர், 1 பேனா, 3 பென்சில்
(3) 1 அழிறப்பர், 1 பேனா, 2 பென்சில் (...........)

04) வேலியொன்றின் ஒரு நிரையில் 9 தூண்கள் நடப்பட்டிருந்தன. ஒவ்வொரு தூணுக்கும் இடையில் 2m தூரம் இடைவெளி விடப்பட்டிருந்தது எனின், முதலாவது தூணிலிருந்து 9 ஆவது தூண் வரையிலான தூரம் எவ்வளவு?
(1) 18m (2) 16m (3) 4m (...........)

**ஒரு பண்ணையில் ஆடும் கோழியும் உள்ளன. ஆட்டின் கால்களை விடக் கோழியின் கால்கள் 6 கூடுதலாகவுள்ளன. ஆனால், மொத்தக் கால்கள் 38 ஆகும்.**

05) இங்குள்ள கோழியின் மொத்தக் கால்களின் எண்ணிக்கை?
(1) 16 (2) 22 (3) 19 (4) 12 (...........)

06) இங்குள்ள ஆடுகளின் எண்ணிக்கை?
(1) 8 (2) 4 (3) 16 (4) 10 (...........)

★ **07ஆம், 08ஆம் வினாக்களில் தரப்பட்ட உருவங்களுடன் மிகவும் தொடர்பான சொல்லின் கீழ் கீறிடுக.**


07)  (1) அழகு (2) குளிர்மை (3) வீடு

08) (1) மாணவர் (2) பாடசாலை (3) அறிவு 


**பக்கம் 2**

★ **சரியான விடையின் கீழ்க் கீறிடுக.**

09) கீழ்வரும் எழுத்து ஒழுங்கமைவிற்கேற்ப வேறுபட்ட உரு.




10) கீழ்வருவனவற்றில் வலஞ்சுழித் திசையில் அமைந்த உரு.



★ **சரியான விடையின் கீழ்க் கீறிடுக.**

11) விமலை விட குமார் 30 ரூபா குறைவாக வைத்திருந்தான். அவர்கள் இருவரிடமும் மொத்தமாக 90 ரூபா இருந்தால் குமாரிடம் எத்தனை ரூபா இருக்கும்?
(1) 45 ரூபா (2) 30 ரூபா (3) 120 ரூபா (4) 60 ரூபா


12) ஒரு வட்டப் பாதையின் நடுவில் நின்று மேற்குத் திசையைப் பார்க்கும் ஒருவன் இடஞ்சுழியாக அரைவட்டம் திரும்பிப் பார்க்கின்றான். தற்போது அவன் நோக்கும் திசை யாது?
(1) வடக்கு (2) கிழக்கு (3) தெற்கு (4) மேற்கு

★ **கீழ்வரும் கூற்றுக்களில் எவ்வாறேனும் நடக்கமுடியாத கூற்றைத் தெரிந்து அதன் இலக்கத்தை அடைப்புக்குள் எழுதுக.**


13) (1) பாடசாலையில் ஒரு வகுப்பறையில் 30 கதிரைகள் இருந்தன எனினும், அங்கு 31 மாணவர்கள் படித்தனர்.
(2) ஒரு பாடசாலையில் இரண்டு கிணறுகள் இருந்தன. எனினும் தண்ணீர் தொட்டியில் நீர் இருக்கவில்லை
(3) கண் பார்வை இழந்த மாணவர்கள் கலை நிகழ்ச்சிகளைப் பார்த்து இரசித்தனர். (...........)

14) (1) தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை வினாத்தாள் I இற்கான நேரம் 45 நிமிடங்கள் எனினும், சுரமிகன் 35 நிமிடத்தில் செய்து முடித்தான்.
(2) தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் வினாத்தாள் II இற் நேரம் 1 மணி 15 நிமிடங்கள் எனினும், அதற்குத் தோற்றிய அபிநயன் 1 மணி 25 நிமிடத்தில் செய்து கொடுத்தான்.
(3) தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில், வகுப்பில் முதலாவதாக வரும் மாணவனான கம்சிகன் சித்தியடையவில்லை. (..........)

★ **கீழ்வரும் எண் கோலங்களின் தொடர்பினை அவதானித்து வெற்றிடங்களில் வரவேண்டிய விடையின் கீழ் கீறிடுக.**

15) 

(1) 18 (2) 20 (3) 9


16) 

(1) 8 (2) 9 (3) 10

**பக்கம் 3**

★ **17-21 வரையான வினாக்களில் தரப்பட்டுள்ள சொற்கள் ஒவ்வொன்றினதும் இரகசியக் குறியீட்டை மேலே தரப்பட்டவற்றிலிருந்து தெரிவுசெய்து அதன் உரோமன் இலக்கத்தைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.**

I)
II)
III)
VI)
V)



17) குந்தகம் (..........) 18) சங்கரன் (..........)
19) சங்கமம் (..........) 20) வசந்தன் (..... ....)
21) பங்கயம் (..........)

★ **கீழ்வரும் வினாக்களில் தரப்பட்டுள்ள பழமொழி ஒவ்வொன்றினதும் கருத்தைத் தருகின்ற மிகப் பொருத்தமான கூற்றின் இலக்கத்தைச் சுற்றி வட்டமிடுக.**

26) ஆழமறியாமல் காலை விடாதே.
(1) ஆழமான இடங்களில் காலை விட்டால் அபாயம்
(2) எவரையும் ஆளைத் தெரியாமல் நம்பக்கூடாது
(3) ஒன்றின் இயல்பை அறியாது அதில் பிரவேசிக்கக்கூடாது

27) ஆற்றிலே போட்டாலும் அளந்துபோடு
(1) யாருக்கும் அளவுக்கு மேல் உதவக்கூடாது
(2) அளவு அறியாமல் உதவி செய்தால் கஷ்டப்படவேண்டும்
(3) வீண் செலவு செய்யின் அச்செலவின் கணக்கை அறிந்தி திருத்தல் நல்லது.

★ **கீழ்வரும் வினாக்களுக்குரிய சரியான விடையின் கீழ் கீறிடுக.**

20) தரம் 5 இல் படிக்கும் மதுரன் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையிலும் மட்டும் கோயிலுக்குச் செல்வான். இன்று கோயிலுக்குச் சென்றான். கடந்த வெள்ளிக்கிழமை கோயிலுக்குச் சென்ற போது நாள்காட்டியில் அன்று 8ஆம் திகதி ஆகும். எதிர்வரும் வெள்ளிக்கிழமை கோயிலுக்குச் செல்லும்போது அன்று என்ன திகதி?
(1) 15 (2) 20 (3) 22 (4) 29

21) என்னிடம் 25 ரூபா இருந்தது. தம்பியிடம் 10 ரூபா இருந்தது. அம்மா இன்று இருவருக்கும் சமபணம் தந்தபோது தம்பியிடம் உள்ளதன் இருமடங்கு என்னிடம் வந்தது. அம்மா தந்த பணத்தின் பெறுமதி யாது?
(1) 20 ரூபா (2) 5 ரூபா (3) 15 ரூபா (4) 10 ரூபா


**பக்கம் 4**

★ **சரியான விடை குறிக்கும் இலக்கத்தைச் சுற்றி வட்டமிடுக.**


24) கீழுள்ளவற்றில் ஒத்த உருவங்கள் எவை?





(1) AB (2) BD (3) BC (4) AC


25)  இவ்வுருவில் உள்ளதும் அதிகமாகக் காணப்படாததுமான வடிவம் எது?
(1) செவ்வகம் (2) சதுரம் (3) முக்கோணி (4) வட்டம்


★ **கீழே ஒவ்வொரு வரிசையிலும் வெற்றுக்கூட்டுக்குப் பொருத்தமான படத்தைத் தெரிவுசெய்து அதன் கீழ் கோடிடுக.**

28) 



29) 


30) கீழுள்ள உருக்கோலத்திற்(கே)ற்ப 21ஆவது உருவாக அமைவது எது?








★ **பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றினதும் முதலாவதாகத் தரப்பட்டுள்ள வடிவத்திற்குச் சமனாக அமையாத வடிவத்தை எதிரே தரப்பட்டுள்ள நான்கு வடிவங்களிலிருந்தும் தெரிவுசெய்க.**

31) 


32) 

33) மேலே தரப்பட்ட நிறை விவரத்தின்படி நிறை கூடிய வடிவப் பொருள் எது?






**பக்கம் 5**

★ **சரியான விடையின் கீழ்க் கீறி(...)**

34) மாணவன் ஒருவன் காலையில் (...)
அவனது நிழல் ஆனது அவ(...)
எனின், அவன் எத்திசை நோக்(...)
(1) வடக்கு (2) கிழக்கு (...)


35) எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட (...)
கள் கீழே தரப்பட்டுள்ளன. (...)
பக்கத்திற்கு எதிரான பக்கத்(...)






36) 


மேலே தரப்பட்ட சமநிலையில் (...)
வித்துகள் ஒரு மாம்பழத்திற்குச்(...)
(1) 4 (2) 8 (3) 1(...)


37) கோகுலனிடம் 50ml (...)
தது. அவன் முகக(...)
பின் 50ml ஐ வெளி(...)
மீண்டும் 150ml நீரைச் (...)
லுள்ள நீரின் அள(...)




38)  தரப்பட்ட திண்ம(...)
ஆக்கப்பட்டது. (...)
வினதாகும். இது(...)
கட்டைகள் பய(...)
(1) 5 (2) 6 (...)

39) எண்கோலத்தினை அவதானி(...)
டிய எண்ணைத் தெரி(...) செ(...)




(1) 15 (2) 20 (...)

40)

| | | |
|---|---|---|
| 0.1 | 0.3 | 0.5 |

(1) 0.10 (2) 0.11 (...)

**பக்கம் 6**

## வினாத்தாள் -II

**01) கீழுள்ள பந்தியை வாசித்து (...)**
**களுக்கு விடை எழுதுக.**

வீதி வழியே மான் போலத் துள்(...)
துச் சிறுமியை காற்றாய் பறந்து வந்(...)
மோதியது. அவள் இரத்த வெள்(...)
கிடந்தாள். பாதசாரிகள் சி(...) மூர்(...)
முதலுதவி செய்தனர். சிலர் மோட்டா(...)
மாறாக ஏசினர். தந்தையை இழந்த (...)
மகளைக் காணத் தலைவிரிகோலம(...)
யாது திகைத்தாள். அப்பொழுது அ(...)
சங்க வாகனம் அவளுக்கு கைகொடு(...)
யையும் தாயையும் ஏற்றிக்கொண்டு ம(...)

01) மோட்டார் சைக்கிளின் வேகத்(...)
பட்டுள்ளது?
02) பந்தியிலுள்ள உவமைத் தொ(...)
03) செஞ்சிலுவைச் சங்கம் எத்த(...)
04) "காற்றாய் பறத்தல்" என்றால் (...)
05) "கைகொடுத்தல்" என்றால் எ(...)
06) பந்தியில் உள்ள இணை ெ(...)
07) கணவனை இழந்த அந்தச் (...)
அழைக்கலாம்? ..........................

★ **ஒத்தகருத்துள்ள சொல் எழு(...)**

08) வீதி ..........................
10) மருத்துவம் ..........................

★ **எதிர்க்கருத்துள்ள சொல் எழு(...)**

12) கோலம்.......................... 13) ஏற்(...)

★ **பன்மைச் சொல் எழுதுக.**

14) ஒன்று.......................... 15) (...)
16) மோதியது.................... 17) (...)
18) பந்தியிலுள்ள பெண்பால் வி(...)
19) பந்தியில் உள்ள ஒன்றன்பால் (...)


★ **ஆங்கிலச் சொல்லை எழுதுக(...)**

20) பன்னிரெண்டு................ 21) (...)
22) முதலுதவி .................... 23) (...)


★ **கீழ்வரும் ஆங்கிலச் சொல்லு(...)**
**பந்தியிலிருந்து எழுதுக.**

24) Deer ...................... 25) (...)
26) Girl ........................ 27) (...)


ழ்க் கீறிடுக.
லையில் பாடசாலைக்குச் செல்லும்போது
து அவனுக்கு முன்னால் விழுகின்றது
சை நோக்கிச் சென்றுகொண்டிருந்தான்?
கிழக்கு (3) தெற்கு (4) மேற்கு
கப்பட்ட சதுரமுகி ஒன்றின் இரு நிலை
ள்ளன. இதில் 'க' என்ற எழுத்துள்ள
ா பக்கத்தில் உள்ள எழுத்து யாது?





(1) ப
(2) ம
(3) வ
(4) ச




லயில் உள்ள தராசின் படி எத்தனை
த்திற்குச் சமனாகும்?
) 12 4) 16
ம் 50ml நீர் கொண்ட முகவை இருந்
் முகவையில் 75ml நீரைச் சேர்த்துப்
ஐ வெளியே எடுத்தான். அதன் பின்
ml நீரைச் சேர்த்தான். தற்போது முகவைய
ன் அளவைக் காட்டும் படம் எது?




திண்ம வடிவம் மரக்கட்டைகளால்
ட்டது. சகல கட்டைகளும் ஒரே அள
ும். இதன்படி இதில் எத்தனை மரக்
ள் பயன்படுத்தப்பட்டுள்ளன.
(2) 6 (3) 10 (4) 11
அவதானித்து வெற்றிடத்தில் வரவேண்
செ?




) (3) 21 (4) 30

| | | | |
|---|---|---|---|
| | 0.5 | 0.7 | 0.9 |

11 (3) 1.1 (4) 1.2

## பக்கம் 7

**.02) பின்வரும் பாடல் வரிகள் அழகு, அன்பு, கருணை, வீரம், தேசப்பற்று என்பனவற்றினை வெளிப்படுத்துகின்றன. அவை வெளிப்படுத்தும் உணர்வினை அப்பாடல்களுக்கு எதிரே உள்ள புள்ளிக்கோட்டில் எழுதுக.**

01) காலைத்தூக்கிக் கண்ணில் ஒற்றிக்
கட்டிக் கொஞ்சும் அம்மா..............................
02) புள்ளிப் புள்ளி மானே
துள்ளித் துள்ளி ஓடிவா...................................
03) உடலில் உறுதி உடையவரே
உலகில் உறுதி உடையவராம்..........................
04) நண்டின் காலை ஒடிக்காதே
நாயைக் கல்லால் அடிக்காதே.........................
05) இலங்கை எங்கள் தாய் நிலம்
இணையில்லாத தாய்நிலம் ..............................


**03) கீழ்வரும் வினாக்களிற்குரிய விடையைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

01) 45 ரூபாவுக்கு இரண்டு கொப்பிகள் வாங்கமுடியும் எனில், 225 ரூபாவுக்கு எத்தனை கொப்பிகள் வாங்கமுடியும்? ..............................
02) சம அளவான 8 தோடம்பழங்களின் நிறை 880 கிராம் ஆகும். அதில் 5 தோடம்பழங்களின் நிறை யாது?..........................
03) தந்தையின் வயது மகனின் வயதைப் போன்று 4 மடங்காகும். 6 வருடங்களுக்கு முன்னர் தந்தையின் வயது 50 ஆக இருந்தது. மகனின் தற்போதைய வயது யாது? ............................ வருடங்கள்.
04) ஒரு வியாபாரி தன்னிடமிருந்த தேனை 10ml கொண்ட 75 போத்தல்களிலும், 75ml கொண்ட 80 போத்தல்களிலும் அடைத்தார். அவரிடம் இருந்த தேனின் அளவு யாது? .............லீற்றர் .............. மில்லிலீற்றர்
05) மாலாவிடம் உள்ள பணத்தைவிட 175 ரூபா கூடுதலாக கமலாவிடம் பணம் உள்ளது. இரண்டு பேரிடமும் உள்ள மொத்தப் பணம் 475 ரூபா ஆகும். கமலாவிடம் உள்ள பணம் எவ்வளவு? ......................... ரூபா
06) 125 கிராம் தேயிலையின் விலை 4 ரூபா 50 சதம் ஆகும். 750 கிராம் தேயிலையின் விலை யாது? ............... ரூபா ............... சதம்
07) ஒரு பெட்டியில் 3 டசின் சன்லைட் கட்டிகளை அடுக்கலாம். 216 சன்லைட் கட்டிகளை அடுக்குவதற்கு எத்தனை பெட்டிகள் தேவை? ......................................
08) ஒரு புத்தகத்தின் விலை 14 ரூபா ஆகும். ஒரு பேனையின் விலை 6 ரூபா ஆகும். 6 புத்தகங்கள் வாங்கக்கூடிய பணத்திற்கு எத்தனை பேனைகள் வாங்கலாம்? ........................

## பக்கம் 9

**07) பின்வரும் இடங்களை இலங்கைப் படத்திற் கண்டுபிடித்து அதன் ஆங்கில எழுத்தைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.**


01) கொழும்பு ..............................
02) கண்டி ..............................
03) மட்டக்களப்பு ..............................
04) யாழ்ப்பாணம் ..............................
05) புத்தளம் ..............................
06) திருகோணமலை ..............................




**08) பின்வரும் நிறங்களை ஒன்றுடன் ஒன்று கலக்கும்போது உண்டாகும் புதிய நிறத்தின் பெயரை எழுதுக**

01) சிவப்பு + மஞ்சள் =..........................
02) நீலம் + மஞ்சள் =..........................
03) சிவப்பு + நீலம் =..........................

**09) தரப்பட்ட உபகரணத்தினைக் கொண்டு விடை எழுதுக.**



01) அருகிலுள்ள உபகரணத்தின் பெயர் யாது? ..........................
02) அதனைச் செய்வதற்குத் தேவையான 5 உபகரணங்களையும் எழுதுக.
(1) ..........................
(2) ..........................
(3) ..........................
(4) ..........................
(5) ..........................

## 1மணி 15 நிமிடங்கள்

**வாசித்து 1 முதல் 27 வரையுள்ள வினாக் ழுதுக.**

த் துள்ளி ஓடி வந்த பன்னிரண்டு வய
ந்து வந்த மோட்டார் சைக்கிள் ஒன்று
வெள்ளத்தில் மூச்சுப் பேச்சின்றிக்
மூர்ச்சை அடைந்திருந்த சிறுமிக்கு
மோட்டார் சைக்கிள் ஓட்டுநரைத் தாறு
இழந்த சிறுமியின் தாய் தன் ஒரேயொரு
ிகோலமாக ஓடி வந்தாள்; செய்வதறி
ழுது அவ்வழியால் வந்த செஞ்சிலுவைச்
கொடுத்தது. அதிலிருந்தவர்கள் சிறுமி
ண்டு மருத்துவமனைக்கு விரைந்தனர்.
வேகத்தினை எதற்கு ஒப்பிட்டுக் கூறப்
..............................
மத் தொடர் எது?..............................
ம் எத்தகைய நிறுவனம்?..............................
..............................
ான்றால் என்ன?..............................
றால் என்ன?..............................
ண மொழி ஒன்று எழுதுக?
..............................
அந்தச் சிறுமியின் தாயை எவ்வாறு
..............................

**ல் எழுதுக.**

09) பாதசாரி ..............................
.............. 11) ஓட்டுநர் ..............................

**சால் எழுதுக.**

13) ஏற்றிக்கொண்டு ..............................

**துக.**

15) தாய்..............................
17) வாகனம்..............................

ல் வினைச்சொல் ஒன்று எழுதுக?
..............................
ன்பால் வினைச் சொல் ஒன்று எழுதுக?
..............................

**எழுதுக.**

. 21) இரத்தம் ..............................
. 23) மருத்துவமனை..............................

**சால்லுக்குரிய தமிழ்ச் சொற்களைப் க.**

25) Wind ..............................
27) Vehicle ..............................

## பக்கம் 8

09) ஓர் உண்டியலில் 50 சத நாணயங்கள் 25உம், 1 ரூபா நாணயங்கள் 30உம், 2 ரூபா நாணயங்கள் 18 உம் இருந்தன. உண்டியலில் இருந்த மொத்தப் பணம் எவ்வளவு?..............
10) 350 தோடம்பழங்களில் $\frac{2}{7}$ பங்கு அழுகிவிட்டன. மிகுதியாக உள்ள நல்ல பழங்கள் எத்தனை? ..................................

**04) பின்வரும் தாவரங்களைக் கொண்டு வினாக்களுக்குரிய விடைகளை எழுதுக.**

**வாழை, நெல், பாகல், ஈரப்பலா, பனை**

01) அதிக நீர் வழங்க வேண்டிய தாவரம் எது?..............
02) வேரின் மூலம் இனம் பெருகும் தாவரம் எது? ...........
03) நிலக்கீழ்த் தண்டுள்ள தாவரம் எது? ..............
04) பற்றி ஏறும் தாவரம் எது? ............................
05) நீர் வழங்கி வளர்க்கத் தேவையற்ற தாவரம் எது?..............

**05) பின்வரும் பாடல்கள் எதனைப் பற்றிக் கூறுகின்றன? என்று "அ" பகுதியிலும் அவற்றை இயற்றியவர்கள் யார்? என்று "ஆ" பகுதியிலும் எழுதுக.**




01) மீன் பாடும் நகரம் - காற்று
மிதந்து வரும் நகரம் (அ) ..............................
தேன் ஓடும் நகரம் - வளர்
தென்னை மர நகரம் (ஆ) ..............................
02) பாடுபட்டு உழுபவர்
பலனும் கண்டு தருபவர் (அ) ..............................
நாடு வளர வாழ்பவர் நன்கு
வாழ்க வாழ்கவே! (ஆ) ..............................
03) கல்லும் மலையும் குதித்து வந்தேன் - பெருங்
காடும் செடியும் கடந்து வந்தேன்
எல்லை விரிந்த சமவெளியெங்கும் - நான்
இறங்கித் தவழ்ந்து தவழ்ந்து வந்தேன்
(அ) ..............................
(ஆ) ..............................

**06) பின்வரும் வீதிக் குறியீடுகளின் பெயர்களை எழுதுக.**

1) 
..............................
2) 
..............................
3) 
..............................
4) 
..............................
5) 
..............................

## பக்கம் 10

**10) பின்வரும் தலையுடன் கூடிய அலகுகளைக் கொண்ட பிராணிகளின் பெயர்களை எழுதுக.**

1) 
..............................
2) 
..............................
3) 
..............................
4) 
..............................
5) 
..............................

**11) பலத்த காற்று வீசி மழை பெய்ததால்.......... என்னும் தலைப்பின் கீழ் சரியான எழுவாய், பயனிலைகளுடன் ஆறு வாக்கியங்கள் எழுதுக.**

(1) ..............................
..............................
(2) ..............................
..............................
(3) ..............................
..............................
(4) ..............................
..............................
(5) ..............................
..............................
(6) ..............................
..............................

**தயாரிப்பு:**
**ஆசிரியர் வேலுப்பிள்ளை அன்பழகன்**

யா/உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயம்
சேவைநலன் பாராட்டு
2004.07.07



திருமதி மதுரநாயகி திருநாவுக்கரசு
(உப அதிபர்)

எமது பள்ளியில் ஆசிரியராகவும் பகுதித்தலைவராகவும் உபஅதிபராகவும் அரும்பணியாற்றி ஓய்வுபெற்ற இவரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

சைவத்தமிழ் வித்தியாலயம்,
உரும்பிராய். (33882) (18-19-26) - பாடசாலைச் சமூகம்.



மானிப்பாய் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
பதவி வெற்றிடங்கள்

01. பதவி: லொறிக்காப்பாளர் - பதவிஎண் 314:16
தகைமைகள்:
(அ) கூட்டுறவுப் பணியாளரின் 17 ஆவது சம்பளத்திட்டத்தில் ஒருவருட அனுபவம்
அல்லது
(ஆ) 5ஆம் வகுப்பு சித்தியுடன் சிறந்த தேகாரோக்கியம் உள்ளவராக இருத்தல் வேண்டும்.
*(சாரதி அனுமதிப்பத்திரம் உடையவருக்கு முன்னுரிமை அளிக்கப்படும்)*
வயதெல்லை: **18-45 வருடம்**

02. பதவி: காரியாலய தூதுவர் - பதவிஎண் 317:17
தகைமைகள்:
(அ) கூட்டுறவுப் பணியாளர் சம்பளத் திட்டம் 15இல் ஒருவருட அனுபவம்
அல்லது
(ஆ) 8ஆம் வகுப்புச் சித்தியடைந்தவராக இருத்தல் வேண்டும்.
வயதெல்லை: **18-45 வருடம்**

03. விற்பனையாளர் *(தற்காலிகம்)*
தகைமைகள்:
(அ) கூட்டுறவு பணியாளர் கனிஷ்ட பிரிவில் சித்தியடைந்திருத்தல்
அல்லது
(ஆ) 8ஆம் வகுப்பு சித்தியும் விற்பனையாளர் தொழிலில் 3வருடத்திற்கு குறையாத அனுபவமும்
வயதெல்லை: **18-45 வருடம்**

சங்க எல்லைப் பரப்பிலுள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். ரூபா 5/- சங்கத்தில் செலுத்தி விண்ணப்பப்படிவத்தைப் பெற்றுப் பூர்த்திசெய்து "தலைவர், மானிப்பாய் கோவில்பற்று ப.நோ.கூ.சங்கம்" என்ற முகவரிக்கு 15. 07. 2004 இற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாகப் பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கவும்.

தலைவர்,
(சி-36222) (26-18-19) மானிப்பாய் கோ.ப.நோ.கூ.சங்கம்.


# அன்று விவசாயிகளுக்காகக் குரல் எழுப்பியவர் இன்று அமைச்சரானதும் அடித்து விரட்டுகின்றார்

## ஜே.வி.பியின் சுபசிங்க குறித்து ஐ.தே.கவினர் சாடல்

உரவகைகளின் விலையைக் குறைக்க வேண்டும். தேவையான நீரை வழங்கவேண்டும் என்று ஜே.வி.பி. அமைச்சர் சுபசிங்க அன்று கோட்டை ரயில் நிலையத்தின்முன் உண்ணாவிரதப் போராட்டம் செய்தார்.

அதே சுபசிங்க இன்று, விவசாயிகளின் உரத்தின் விலைகளைக் குறைக்கவேண்டும். அவசியமான நீரை வழங்கவேண்டும் என ஊர்வலம் போகும்போது கல்லடித்து விரட்டுகின்றார்; குண்டர்களை வைத்துத் தாக்குகின்றார். இதுதான் ஜே.வி.பியினரின் மக்கள் சேவையா என்று வினாவெழுப்புகின்றார் முன்னாள் அமைச்சர் ஜயவிக்கிரமபெரேரா.

கடந்த ஞாயிற்றுக்கிழமை ஹிங்குரங்கொடையில் அமைதியாக ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடத்திய விவசாயிகள் மீது ஜே.வி.பியினர் நடத்திய தாக்குதல் சம்பவம் தொடர்பாக விளக்கம் அளிக்கும்போதே முன்னாள் அமைச்சர் இப்படிக் கூறினார். இச்சம்பவம் தொடர்பாக செய்தியாளர்களுக்கு விளக்கம் அளிக்கும் செய்தியாளர் மாநாடு ஒன்றை ஜயவிக்கிரமபெரேரா நேற்றுக் கொழும்பில் நடத்தினார்.

தமது நியாயமான கோரிக்கைகளை முன்வைத்து ஊர்வலம் சென்ற ஏழை விவசாயிகள் மீது காட்டுமிராண்டித்தனமாகத் தாக்குதல் நடத்திய ஜே.வி.பியினர், தங்களின் பிரசாரக் கூட்டத்தை விவசாயிகள் குழப்பியடித்தனர் என அரச ஊடகங்கள்மூலம் பிரசாரப்படுத்திவிட்டனர். இது உண்மைக்குமாறான ஒரு செய்தியாகும்.

ஒரு வாரத்திற்கு முன்னரே விவசாயிகளின் ஊர்வலம் ஏற்பாடு செய்யப்பட்டது. இதனைச் சகல ஊடகங்கள் மூலமாகவும் அவர்கள் அறிவித்திருந்தனர்.

திட்டமிட்டபடி விவசாயிகளின் ஊர்வலம் நேற்றுமுன்தினம் காலை பத்து மணிக்கு இடம்பெற்றது. ஆனால், ஜே.வி.பியினரின் கூட்டமோ மாலை மூன்று மணிக்கே நடைபெற்றது.

விவசாயிகளின் ஊர்வலம் ஹிங்குரங்கொடை சென்றபோது, அங்கு மேடை அலங்கார வேலைகளில் ஈடுபட்டிருந்த ஜே.வி.பியினரே விவசாயிகள் மீது தாக்குதல் நடத்திக் காயப்படுத்தியுள்ளனர்.

அந்த மேடையில் ஜே.வி.பி. அமைச்சரான சுபசிங்கவும் இருந்துள்ளார். உண்மையாகவே விவசாயிகள் மீது பாசம் உள்ளவராக இருந்தால் அமைச்சர் சுபசிங்கவும் விவசாயிகளுடன் சேர்ந்து ஊர்வலத்தில் சென்றிருக்க வேண்டும்.

ஆனால், அவரே முன்நின்று தாக்குதல் நடத்தியுள்ளார்.

இந்த அமைச்சர்தான் ஐ.தே.க அரசின் ஆட்சியின்போது கோட்டை ரயில் நிலையத்தின் முன் விவசாயிகளுக்காக உண்ணாவிரதம் இருந்தார். திடீரென ஜனாதிபதி அரசைக் கலைத்தவுடன் அனுரா பண்டார நாயகக இளநீர் கொடுத்து உண்ணாவிரதத்தை முடித்து வைத்தார்.

ஆனால், இந்த ஆசாமிதான் இப்போது விவசாயிகளைக் குண்டர்களை வைத்து மிரட்டுகின்றார். இதுதான் ஜே.வி.பியினரின் சுயரூபம் - என்று சாடினார் காமினி ஜயவிக்கிரமபெரேரா. (8)

## கிராம அலுவலருக்குப் பயிற்சி

வடக்கு - கிழக்கு அவசர புனரமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் (நீர்ப்) நிதி உதவியுடன் யாழ்.மாவட்ட கிராம அலுவலர்களுக்கு ஆற்றலை மேம்படுத்துவதற்கான பயிற்சி வகுப்புகள் நடத்தப்படவுள்ளன.

முதலாவது கட்டப் பயிற்சி வகுப்புகள் ஜூலை 10,11ஆம் திகதிகளில் யாழ்.செயலகக் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளதாக மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி பிரதேச செயலகங்களுக்கு அறிவித்துள்ளார். (ஓ-117-139)


நன்றி கூறுகின்றோம்

தாய்மடியில்
10
07
1918



இறையடியில்
07
06
2004

அமரர் ஆறுமுகம் கோபாலபிள்ளை
(அக்கரைப்பற்று சண்முகநாதன் ஸ்ரோர்ஸ், உரிமையாளர்)

31 ஆம் நாள் நினைவஞ்சலி

எம் குடும்ப விளக்காய் இருந்து எம் வாழ்வில் வழிகாட்டி ஒளியேற்றிய எமது குடும்பத் தலைவருக்கு இதயக் காணிக்கை.

யாழ்.வடமராட்சி, துன்னாலை அல்லையம்பதியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், பிரபல வர்த்தகருமான எங்கள் குடும்பத தலைவர் இறையடி சேர்ந்த செய்திகேட்டு அவரது மரணச் சடங்கில் கலந்துகொண்டோர்க்கும், நேரிலும், தொலைபேசி மூலமும்; தந்தி, தபால் மூலம் உள்நாட்டிலிருந்தும் வெளிநாட்டிலிருந்தும் தமது துயரை எம்முடன் பகிர்ந்து கொண்டோர்க்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த இதயபூர்வமான நன்றிகள்.


அமரரது 31ஆம் நாள் அந்தியேட்டி, சபிண்டீகரணக்கிரியைகள் அல்லையம்பதியில் இன்று (07-07-2004) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். இதில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*அல்லையம்பதி,*
*துன்னாலை,*
*கரவெட்டி.* - குடும்பத்தினர்.
(33821)(42-18-19-26)



சேவைநலன் பாராட்டும்
அறுபதாவது பிறந்ததின வாழ்த்தும்

திரு. சின்னத்தம்பி பேரம்பலம்
(ஆயுர்வேத வைத்தியகலாநிதி)
(கரைச்சி/வட்டக்கச்சி, முரசுமோட்டை, யாழ்/நல்லூர், பூநகரி/
பல்லவராயன்கட்டு ஆயுர்வேத வைத்தியசாலைகளில்
கடமையாற்றியவர்)



எமது பூநகரி, பல்லவராயன்கட்டுப் பிரதேசத்தில் கடந்த 23 வருடங்களாக ஆயுர்வேத வைத்திய கலாநிதியாகக் கடமையாற்றி 07-07-2004 இன்றுடன் ஓய்வுபெறுகின்றவரான எமது ஆயுர்வேத வைத்திய கலாநிதி அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதோடு, இன்றைய அவரது அறுபதாவது பிறந்ததினத்தில் அவரை மென்மேலும் சீரும் சிறப்பும் பெற்று வாழ எல்லாம் வல்ல இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

பல்லவராயன்கட்டு வாழ் மக்கள்.
(C/36224)(42-18-19-26)


## வீதிக்கு குறுக்கே அடைத்த வேலி அகற்றப்பட்டது

கைதடி,ஜூலை7

கைதடிச் சந்தியில் பொதுமகன் ஒருவரால் பலவந்தமாக அடைக்கப்பட்டிருந்ததாகக் கூறப்படும் பொதுமக்கள் பாவனைக்குரிய ஒழுங்கை ஒன்றின் வேலி சாவகச்சேரி பிரதேச சபை ஊழியர்களால் அப்புறப்படுத்தப்பட்டது.

தற்போது அந்த ஒழுங்கை பொதுமக்களின் பாவனைக்கும் விடப்பட்டுள்ளது.

பொதுமக்களின் பாவனைக்குரிய இந்த ஒழுங்கையில் மேற்படி நபர் பலவந்தமாக வேலியடைத்திருந்தார் எனவும் -

இதனால் பொதுமக்கள் பெருஞ்சிரமங்களை எதிர்நோக்கி வந்தனர் என்றும் -

இது குறித்துப் பொதுமக்கள் சாவகச்சேரிப் பிரதேச சபையிடம் முறையிட்டதையடுத்து வேலி மேற்படி பிரதேச சபையால் அகற்றப்பட்டுள்ளது என்றும் தொிவிக்கப்பட்டது.

(ஓ-75)

# எக்கல பகுதியில் வீட்டுத்திட்டத்தை யாழ்.அலுவலர்கள் பார்வையிட்டனர்

வலி.வடக்கு,ஜூலை7

யாழ். குடாநாட்டில் உலகவங்கியின் உதவித் திட்டத்தின் கீழ்க் கட்டப்படவுள்ள வீடுகள் சம்பந்தமாக நான்கு பிரதேச செயலகங்களைச சேர்ந்த உத்தியோகத்தர்கள் கொழும்பில் உள்ள எக்கல என்னும் இடத்தில் உள்ள வீடமைப்புத்திட்ட வீடுகளைச் சென்று பார்வையிட்டுத்திரும்பியுள்ளனர்.

நல்லூர், யாழ்ப்பாணம், தென்மராட்சி, மருதங்கேணி ஆகிய பிரதேச செயலகங்களைச் சேர்ந்த பிரதேச செயலாளர்கள், உதவி திட்டமிடல் பணிப்பாளர்கள், தொழில்நுட்பவியலாளர்கள் மற்றும் வீடுகள் அமைக்கப்படவுள்ள பிரிவு கிராம அலுவலர்கள் ஆகியோரே இவ்வாறு சென்று பார்வையிட்டுத் திரும்பியுள்ளார்கள்.

இந்த நான்கு பிரதேச செயலகங்களிலும் முதற்கட்டமாக தலா 25 வீடுகள் நிர்மாணிக்கப்படவுள்ளன. (ஐ-4-86)

# எரிபொருள்நிலையத் திறப்புவிழா

சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தால் உடுவில் பகுதியில் பல லட்சம் ரூபா செலவில் புதிதாக அமைக்கப்பட்ட எரிபொருள் நிரப்பு நிலையத்தின் திறப்புவிழா இன்று புதன்கிழமை பிற்பகல் 3மணிக்கு நடைபெறவுள்ளது.

சங்கத் தலைவர் சி.குமரவேல் தலைமையில் நடைபெறும் திறப்புவிழாவில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா, யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, யாழ்.மாவட்ட நிர்வாக சேவைப் பொறுப்பாளர் கி.விஜிதரன், வடக்கு - கிழக்கு மாகாணக் கூட்டுறவு ஆணையாளர் இ.இளங்கோவன் ஆகியோர் முதன்மை விருந்தினர்களாகக் கலந்துகொள்வார்கள். (ஐ-17)

# மக்களின் மரபார்ந்த நம்பிக்கையாக நிலைத்துவிட்ட வேள்விகள்

**சைவ** ஆலயங்களில் மிருகப்பலி என்றொரு கட்டுரையை 26.05.1998 திகதிய உதயனில் எழுதியிருந்தேன். அந்தக்கட்டுரை பின்னர் ஒரு விவாதக்களத்தையே திறந்து விட்டிருந்தது. வேள்விக்கு ஆதரவாகவும், எதிராகவும் வாசகர்கள் விவாதித்தனர். அக்கட்டுரையில் குறிப்பிடப்பட்ட ஆலயம் சார்ந்தவர்களையும் கூட அக்கட்டுரை சீற்றமடையச் செய்திருந்தது.

வேள்வி என்பது நியாய, அநியாயங்களுக்கு அப்பால் மக்களின் மரபார்ந்த நம்பிக்கையாக நிலைத்துவிட்டது. இன்றுவரை, அறிவுப்பெருக்கம் சந்ததி மாற்றம் எல்லாம் கடந்தும் அது நின்று நிலைப்பதற்கு அந்த நம்பிக்கைகளே காரணம்.

சிந்துவெளி நாகரிக காலத்தில் காளி, நீலி, துர்க்கை ஆகிய கடவுள்களுக்கு உயிர்ப பலி நடந்ததாகக் கூறப்படுகின்றது. இத்தகைய பலிகள் தெய்வ ஆசிவேண்டியும், தெய்வ சாபத்தில் இருந்து நீங்கவும் என இருவேறு காரணங்




கள் கற்பிக்கப்படும் நம்பிக்கையின் பாற்பட்டனவாகும்.

வைகாசி மாதத்தில் நடைபெறும் பொங்கல் உற்சவமே பெரும்பாலான ஆலயங்களில் வேள்வி நடைபெறும் தினமாகவும் உள்ளன. இன்று கிராம ரீதியாக உள்ள பல ஆலயங்கள் முன்னர் வேள்வி நடந்தவையாகவே உள்ளன. கிராமப்புறங்களில் இன்றுவரை நின்று நிலவும் 'பொங்கல் விழா' மடைபரவுதல், வேள்வி, என்பவற்றோடு இணைந்த பெருவிழாவாக நடைபெற்று வருகின்றது.

இரவே ஆலயத்தில் பக்தர்கள் ஒன்று கூடுவார்கள். குடும்பம், குடும்பமாக, ஆண்கள், பெண்கள், சிறுவர்கள் எல்லோரும் கூடுவார்கள். கிராமமே ஆலயத்தில் திரண்டிருக்கும். வீட்டில் இருந்து பொங்கல் பானைகள், பலகார அடுக்கணிகள் எல்லாம் எடுத்து வருவார்கள். இரவிரவாகப் பெண்கள் பலகாரச்சூட்டில் ஈடுபடுவார்கள். மறுபுறத்தே காத்தவராயன் பாடல்களும் கோவலன் கதைப்பாடல்களும் பாடப்படும். சிறுவர்களின் விளையாட்டுக்கள், வாணவேடிக்கைகள் எனக் களைகட்டிய காலமும் ஒன்றிருந்தது.

இரு தசாப்தப் போரின் தீவிரம் இவற்றில் பலவற்றை இல்லாமலோ, குறைத்தோ விட்டிருந்தது. இன்றைய அமைதி இத்தகைய பொங்கல் விழாக்களை மீளப் புத்துருவாக்கி விட்டுள்ளது சில குறைகளுடனும், மாற்றங்களுடனும்.

நள்ளிரவு தாண்டிய பின்னர் வழுந்துவைக்கப்படும். மக்கள் நேர்ந்து பொங்கல் செய்வதே வழுந்துவைத்தல் ஆகும். வழுந்துப்பானை பெரிதாகவும் பலர் சேர்ந்து பொங்குவதாகவும் இருக்கும்.

வழுந்துப் பொங்கல் நடைபெறும்வேளை 'சாமியாடுதல்' இடம்பெறும். இதைக் கலையாடுதல் என்றும் கூறுவார்கள். அம்மன்கலை, அண்ணமார் கலை, வீரபத்திரர் கலை, வைரவர் கலை என்று கடவுள்களின் பெயரிலமைந்த கலையாடுதல் வகைகள் கிராமத்தில் உண்டு.

உடுக்கையும், பறையும் ஆண்களிலும், பெண்களிலும் 'சாமி'யைத் தொற்றவைத்துக் கலையாட்டத்தை உச்ச ஸ்தாயிக்குக் கொண்டு செல்லும்.

காலையில் ஏனையோர் பொங்கல் செய்வார்கள். அதைத் தொடர்ந்து மடைபரவுதல் இடம்பெறும். பழங்களை அடுக்கிப் பரவி பழமடையும, பலகாரங்களைப் படைத்துப் பலகாரமடையும், பொங்கலைப் படைத்து பொங்கல் மடையும் பரவப்படும்.

மடைபரவுதல் நடைபெறும்வேளை, ஆலயத்துக்கு வெளிப்புறமிருந்து கலகலப்பான இன்னொரு நிகழ்வு நடைபெறும். அதுதான் வேள்விக் கடாக்கள் அழைத்து வரப்படும் நிகழ்வு. வண்டில்கள், லான்ட் மாஸ்ரர்களில் உயரமாகப் பீடம் அமைத்து, அதன்மேல் அலங்கரிக்கப்பட்ட வேள்விக் கடாக்கள் அழைத்து வரப்படும். கம்பீரமாகப் புதினம் பார்த்தபடி கடாக்கள் ஊர்வலமாக ஆலயத்திற்கு வந்து சேரும். 'ஏழைக் கடாக்கள்' ஊர்வலமாக நடத்தி வரப்படும். சேவல்களையும் தூக்கி வருவார்கள்.

ஆலயத்திற்குக் கொண்டு வரப்படும் இவை கோவிலைச்சுற்றிக் கொண்டு வந்து, வாசலில் திருநறும், பொட்டும் அணிந்து கொண்டு காலையை நோக்கி நகர்த்தப்படும்.

"காலை" என்பது ஆடுகள், கோழிகளைப் பலியிடும் களம். பனங்குற்றிகளால் அடைக்கப்பட்ட சதுரப்பரப்பாக அது அமையும். அதற்குள் கொண்டு செல்லப்பட்டே வேள்வி நடைபெறும்.

ஆலயப்பூசைகள் முடிவுற்ற பின்னர் வேள்வி தொடங்கும். வேள்விக்குக் கொண்டுவரப்படும் ஆடுகள், கோழிகள் என்பவற்றுக்கு ஒரு தொகைப் பணத்தை ஆலயத்திற்கு வழங்கவேண்டும். அண்மையில் நான் பார்த்த வேள்வியில் ஆடுகளுக்கு ஐம்பது ரூபாவும் கோழிகளுக்கு முபபது ரூபாவும் அறவிடப்பட்டன.

காலையைச் சுற்றிலும் கூட்டம் அலை மோத, ஆடுகள் காலைக்குள் பணத்தைச் செலுத்திப் பிரவேசிக்கும். மூன்று நான்கு பேர் உள்ளே நிற்பார்கள். அவர்களில் ஒருவர் ஆட்டின் செவிகளோடு சேர்த்துத் தலையை இழுத்துப்பிடிப்பார். இன்னொருவர் ஆட்டின் விதையோடு பின்னங்கால்களை இழுத்துப்பிடிப்பார். நன்கு தீட்டப்பட்டுத் தயாராக இருக்கும் நான்கைந்து பெரிய கத்திகளில் ஒன்றை எடுப்பார் மற்றவர். அவரே வேள்வி நடத்துபவர்.ஓங்கி, பலஞ்சேர்த்து ஆட்டின் கழுத்தை வெட்டுவார். இரத்தமும், இரைப்பை உணவும் பீறியடித்து மண்ணில் பரவ தலையற்றமுண்டமாய் துடிதுடித்து மாயும். சிறுவர், சிறுமியர் பெண்கள் கூடப் பார்த்து இரசிக்கும் சுவாரஸ்யம் மிக்க வேள்வி கடவுளின் பெயரால் நிறைவெய்தும்.

அதன்பின் ஆடுகள் வெளியே இழுத்துச் செல்லப்பட்டு விலை பேரம் பேசப்படும்.

இப்படியான உயிர்ப்பலி பூமியில் நன்மையைச் செய்வதான நம்பிக்கை அகலா மரபாய் நமது மரபு நீள்கிறது. அண்மை நாள்களில் பிரான்பற்று மாரியம்மன் கோயில், துர்க்காபுரம் தேரம்பல வைரவர் கோயில், கவுணாவத்தை வைரவர் கோயில், உரும்பிராய் காட்டு வைரவர் கோயில், மட்டுவில் அண்ணமார் கோயில் எனப் பல இடங்களிலும் பொங்கலும் வேள்வியும் நடைபெற்றுள்ளன.

தமிழகத்தில் கூட ஆட்சி நிலைப்பதற்காக அ.தி.மு.கட்சி உயிர்ப்பலி கொடுத்த செய்திகள் சில மாதங்களுக்கு முன்னர் வெளியாகியிருந்தது. முதுமாணி படிப்பிற்காக இந்தியாவின் ஆந்திரா மாநிலத்தில் தங்கியிருக்கும் எனது நண்பர் சொன்னார். அங்கு திருநீற்றுக் குறியுடன் பூணூல் தரித்த பிராமணரொருவர் மாட்டிறைச்சி விற்பனை செய்வதாக. இந்திய உபகண்டத்தில் உள்ள நாடுகளில் அவ்வப்போது நரபலி தொடர்பான செய்திகளும் வெளிவந்த வண்ணமேயுள்ளன.

**சு.சங்கிலிகுமாரன்**

அன்பையும் வன்முறையையும் இரு வேறு கிளை பிரித்துப் பயிலும் நடைமுறை இந்து சமயத்தில் புராண இதிகாசங்கள் வாயிலாகவே வந்துள்ளன என்பது என் அபிப்பிராயம். தத்துவார்த்தப் பின்னணிகளுக்கு எளிமையான விளக்கம் அளிக்கப் புறப்பட்ட புராண இதிகாசங்கள் இன ரீதியான, வர்க்க ரீதியான முரண்பாடுகளையே (தேவாசுர யுத்தம் என்பது ஆழ்ந்த நோக்கில் திராவிட - ஆரிய யுத்தமே) தோற்றுவித்தது. இன்றைய பிரசங்கியார்கள் புராணங்கள் கூறும் கருத்துக்களுக்கு விரிவுரை நிகழ்த்தியே பல்வேறு முரண்களைப் புதிதாகத் தோற்றுவித்து விடுகிறார்கள்.

இந்தப் பிரசங்கியார்களும் எட்டிப் பார்க்காத அல்லது நுழைய விரும்பாத வகையில் வேள்விகள் கிராமிய மக்களின் நம்பிக்கையின் பாற்பட்டு நீள்கிறது.

# வாசகர் திருமுகம்

## அரசியலுக்குள் நுழைந்த பின்னர் பிக்குமார் மதத்தலைவர்களா?

கடந்த 26.06.04 அன்று உதயனின் வாசகர் திருமுகம் பகுதியில் திரு.டேவிட் தம்பிராஜா அவர்கள் எழுதிய கடிதம் தொடர்பாக எனது அபிப்பிராயத்தைத் திரு டேவிட் தம்பிராஜாவுக்குத் தெரிவித்துக்கொள்ளவிரும்புகின்றேன்.

இலங்கை நாடாளுமன்றத்தில் வைத்து பௌத்த பிக்குமார் தாக்கப்பட்டமையைக் கண்டித்து ஊர்வலம் நடத்த வேண்டும் எனக் கோரிக்கை விடுத்திருந்ததுடன் நல்ல சமாரியனின் கதையையும் மேற்கோள் காட்டியிருந்தார் டேவிட் தம்பிராஜா.

அன்பர் ஓர் ஆசிரியர் என்பதால் அவருக்கு இலங்கை அரசியல் பற்றியும் ஓரளவுக்காவது தெரிந்திருக்கும்.

வன்முறை எங்கு இடம்பெற்றாலும் யார் அதில் ஈடுபட்டாலும் அது கண்டிக்கப்படவேண டிய ஒன்று. இதில் இன, மத, மொழி பேதங்களுக்கு இடமில்லை. இதில் யாருக்கும் மாற்றுக கருதது்க் கிடையாது.

பௌத்த பிக்குமார் தாக்கப்பட்டமையைக் கண்டிக்கவேண்டும் என்ற டேவிட் தம்பிராஜாவின் கோரிக்கையை நானும் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால், அரசியல்வாதிகள் தங்களுக்குள் மோதிக கொள்வதற்குப் பொதுமக்கள் ஒன்றும் செய்யமுடியாது. ஏனெனில், ஓர் அரசியல்வாதிக்காகக குரல் எழுப்பினால் குரல் எழுப்புபவர் குறிப்பிட்ட கட்சியின் ஆதரவாளர் எனச் சாயம் பூசப்பட்டு விடுவார். அத்துடன், ஹெல உறுமய தாக்கப்பட்டதைக் கண்டிக்கும்போது ஹெல உறுமயவினருக்கு யாழ்ப்பாணத்திலும் ஆதரவு உள்ளது என்ற மாயை தோற்றுவிக்கப்படலாம்.

நாடாளுமன்றத்தில் வைத்துத் தாக்கப்பட்ட பிக்குமார் பிக்குகளாகவே இருந்திருந்தால் அவர்கள் தாக்கப்பட்டதை நாமும் கண்டிக்கலாம்; கண்டிக்கவேண்டும். ஆனால், ஜாதிக ஹெல உறுமயவினர்கள் அரசியலுக்குள் என்று நுழைந்தார்களோ அன்று தொடக்கம் அவர்கள் அரசியல்வாதிகளே.

அரசியல் என்பது ஒரு சாக்கடை சாக்கடைக்குள் காலவைத்தால் என்ன நடக்கும் என்பதை நாம்தான் சிந்திக்கவேண்டும். சாக்கடைக்குத் தெரியாது கால் வைப்பவர் புனிதமானவர் என்று. தமிழ்நாட்டில் முதலமைச்சரின் துகிலுரிந்த வரலாறும் உண்டு.

இது போன்ற ஒருபிரச்சினை இரு பத்திரிகையாளர்களின் மரணத்தின்போதும் ஏற்பட்டது. பத்திரிகையாளர் நிமலராஜன் சுட்டுக்கொல்லப்பட்டபோது சிங்களப் பத்திரிகையாளர்கள் ஒன்றுதிரண்டு ஆர்ப்பாட்டம் செய்தனர். அத்துடன், உலகம் முழுவதும் நிமலராஜனின் கொலையைக் கண்டித்தது. அண்மையில் காலமான பத்திரிகையாளர் நடேசனின் கொலையையும் அனைவரும் கண்டித்தனர். ஆனால், அற்புதராஜா (தினமுரசு ஆசிரியர்) கொல்லப்பட்ட போதோ, மட்டக்களப்பு மாநகர முதல்வர் செழியன் பேரின்பநாயகம் சுட்டுக்கொல்லப்பட்டபோதோ யாரும கண்டிக்க முன்வரவில்லை. இதற்குப் பிரதான காரணம் கொலைசெய்யப்பட்ட சமயத்தில் இவர்கள் அரசியல்வாதிகளாக இருந்தமையே. (அதற்காக அரசியல்வாதிகள் மீதான கொலைகளை நான் நியாயப்படுத்துகிறேன் எனத் தவறாக எவரும் எடை போட்டு விடக்கூடாது.) அடுத்த படியாக இவர்கள் பிக்குகள் (துறவிகள்) என்பதையும் ஏற்றுக்கொள்ளமுடியாது. சித்தார்த்தர் (புத்த பெருமான்) பிறப்பால் அரசன். சுத்தோதன மகாராஜாவின் புத்திரன் இந்துக்கள் வர்ணாச்சிரமம் என்று சொல்கிற குலப்பிரிவின்படி போர்க்குணம் மிக்க ஷத்திரிய வம்சத்தில் பிறந்தவர். ஆனால், அரண்மனை வாழ்க்கையையும் சுகபோகங்களையும் வெறுத்துத் துறவறம் பூண்டவர்.

'ஜாதிகஹெல' உறுமயவினரோ துறவறம் பூண்டு மடத்தில் வசித்து வருபவர்கள். ஆனால், நாடாளுமன்றம் செல்லவேண்டும் என்பதற்காகத் தேர்தலில் போட்டியிட்டு, நாடாளுமன்றம் சென்றவர்கள். புத்தபெருமான் துறவறம் பூணுவதற்குப் போர் அழிவுகளும் ஒரு காரணம். அசோகச்சக்கரவர்த்தி கலிங்கத்துப்போரில் இடம்பெற்ற அழிவுகளைப் பார்த்து மனம் வெதும்பி புத்தபிரானின் போதனையைப் பின்பற்றி புத்தமதத்தைத் தழுவினான். இலங்கையிலுள்ள பிக்குமாரோ ஸ்ரீலங்கா அரசு தமிழர்களுக்கு இந்த நாட்டைத் தாரை வார்த்துக் கொடுக்கப்போகிறது எனக கூறி புலிகளுக்கு எதிராக யுத்தம் பிரகடனப்படுத்தப்படவேண்டும் என்று நாடாளுமன்றம் சென்றவர்கள்.

பண்டா - செல்வா ஒப்பந்தத்தைக் கிழித்தெறியச்செய்த பெருமை இலங்கையிலுள்ள பௌத்த பிக்குமாரையே சாரும். கடந்த ஆண்டு கொழும்பு நகர மண்டபத்தில் தமிழ்,சிங்கள கலைக கூடல் நடைபெற்றபோது மண்டபத்தினுள் நுழைந்து தாக்குதல் நடத்தியவர்களும் பௌத்தத் துறவிகளே கொழும்பிலிருந்து வெளிவரும் ஆங்கிலப்பத்திரிகைகள் கூட இவர்கள் நடத்திய தாக்குதல் தொடர்பான புகைப்படங்களை முன்பக்கத்தில் பிரசுரித்திருந்தன.

ஹெல உறுமயவினர் மீது தாக்குதல் நடத்தியவர்கள் யார்? தமிழர்களா, முஸ்லிம்களா அலலது இந்துக்களா? கிறிஸ்தவர்களா? இல்லையே. பௌத்த சிங்களவர்கள்தான் தாக்குதலை மேற்கொண்டனர்.

யாராவது வேற்று மதத்தவர் அல்லது பிறமொழி பேசுவோர் தாக்குதலை மேற்கொண்டிருந்தால் அது நிச்சயமாக கண்டிக்கப்படவேண்டும். ஆனால், இது உள்வீட்டுப் பிரச்சினை. (இலங்கை இனப்பிரச்சினையைக் கூட உள்நாட்டுப் பிரச்சினை என்றுதான் சர்வதேச நாடுகள் கூறுகின்றன)

'வினை விதைத்தவன் வினை அறுப்பான்' என இந்து மதம் கூறுகின்றது. இந்து, பௌத்த மதங்களில் பாவமன்னிப்பு இருப்பதாகத் தெரியவில்லை.

பௌத்த தர்மப்படி ஒருவன்செய்யும் பாவபுண்ணியங்களுக்குரிய பலனை இப்பிறவியிலேயே அனுபவிக்கவேண்டும் என பௌத்த தர்மம் இயம்புகிறது. (பௌத்தம் மறுபிறப்புக் கோட்பாட்டை ஏற்றுக்கொள்ளவில்லை) அதன்படி ஹெல உறுமயவினர் விதைத்ததையே அறுக்கிறார்கள் என்று கருதலாமா?

**நல்லூர்** **ந.பரமேஸ்வரன்.**

## யாழ். - தெல்லிப்பழை இடையே மேலும் ஒரு பஸ் சேவை

யாழ். பஸ் நிலையத்திலிருந்து சண்டிலிப்பாய் - கல்வளை, ஆலங்குழாய் ஊடாக தெல்லிப பழை வரை வடபிராந்திய போக்குவரத்துச சபையினரால் மேலும் ஒரு பஸ் சேவையினை நடத்த நடவடிக்கை எடுக்கப்படுமா?

இப்பாதையூடாக 749 இலக்கமுடைய பஸ் மட்டும் சேவைக்கமர்த்தப்பட்ட போதிலும் அந்தப பஸ்சேவை சீரின்மையின்றி அடிக்கடி தடைப்பட்டு வருகின்றது.

இதனால், கல்வளை, ஆலங்குழாய் பகுதிகளைச் சேர்ந்த மக்கள் பெரும் சிரமத்தை எதிர்நோக்குகின்றனர்.

குறிப்பாக பாடசாலை மாணவர்கள், அரச உத்தியோகத்தர்கள் இதனால், பெரிதும் பாதிப்புக்குள்ளாகின்றனர்.

எனவே, இந்த பஸ் சேவையைச் சீராக நடத்துவதோடு இன்னுமொரு பஸ்சேவையினையும் நடத்துவதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பார்களா?

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் போதிய கவனமெடுத்து இப்பகுதி மக்களைப் போக்குவரத்துப் பிரச்சினையில் இருந்து விடுவிக்க உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று உதயனின் வாசகர் திருமுகத்தினூடாக அன்பான வேண்டுகோளைச் சம்பந்தப்பட்ட உயா அதிகாரிகளுக்குச் சமர்ப்பிக்கிறேன்.

**சண்டிலிப்பாய்** **எஸ்.கவி.**

## அலுவலகங்களில் சிகரெட் புகை!

பத்திரிகைகளில் போதைப்பொருள் தடைபற்றி நாள்தோறும் செய்திகளாக வெளியாகி மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் இக்காலத்தில் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் "ஊருக்குத்தான் உபதேசம் உனக்கில்லையடி" என்ற போக்கில் செயற்படுவது வேதனைக்குரியது.

பொதுவாக யாழ் அரச அலுவலகங்களில் புகைத்தல் தடைசெய்யப்பட்டுள்ளது என்ற விளம்பரப் பலகைகள் முன்னுக்கு வரவேற்க உள்ளே புகைமயமாக உள்ளது. அரச அதிகாரிகள் தமது அலுவலக நேரத்தில் அலுவலகங்களுக்கு உள்ளேயும் நடைபாதைகளிலும் தொடர்ச்சியாகப் புகைப்பிடிப்பதை அவதானிக்க முடிகிறது. இதனால், தமது கடமைகளுக்காக அலுவலகம் செல்லும் பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். அண்மையில் அரச அலுவலகம் ஒன்றிற்குச் சென்றபோது அதிகாரி ஒருவர் தொடர்ச்சியாகப் புகைத்தபடி இருந்தார்.அவரிடம் அலுவல்களுக்காகச் சென்றிருந்தோர் அவஸ்தைப்பட்டுக் கொண்டு நின்றதை அவதானிக்க முடிந்தது.இந்த அதிகாரிகளின் செயற்பாட்டைப் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் கவனத்தில் எடுத்து உரிய நடவடிக்கைகள் எடுப்பார்களென நம்புகின்றேன்.

புகைப்பிடித்தலால் நாம் பாதிப்புக்குள்ளாவதோடு, அருகில் சுவாசிப்பவர்களும் பாதிப்படைகின்றனர் என்ற உண்மையை புகைத்தலில் ஈடுபடும் அதிகாரிகள் உணர்ந்து செயற்படுவார்களா?

**கோண்டாவில்** **மதி**

## சின்னஞ்சிறு விளம்பரங்கள்

### விற்பனைக்கு

இல.132, முதலாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணத்தில் ஒரு பரப்பு 6 குழி காணி விற்பனைக்குண்டு. (வேம்படி மகளிர் கல்லூரி, மத்திய கல்லூரி அருகில்) (கடை, வைத்திய நிலையங்கள் கட்டுவதற்குச் சிறந்தது) தொடர்பு: வே.அருளானந்தம் (அருள்), 27/5, புது வீதி, கொய்யாத்தோட்டம். (33996)

புலோப்பளை, பச்சிலைப்பள்ளியில் இருக்கும் 28 ஏக்கர் 15 பரப்பு விஸ்தீரணம் கொண்ட 'நாச்சிமா சோலைக்காடு' அல்லது 'சோலை' என்ற தென்னந்தோட்டக் காணி விற்பனைக்கு உண்டு. வாங்க விரும்புவோர் பின்வரும் முகவரியில் தொடர்புகொள்ளவும். K.சிவராஜா, 'ராஜவாசா' 151, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே.இலக்கம் 021-222-3408, 2574199. (33735)

மசிபேக்கிசன் 240 **Super** ரக்ரும் ரெயிலரும் விற்பனைக்கு உண்டு. தொடர்புகொள்ள வேண்டிய முகவரி: இராஜகுலசிங்கம், ராஜ வீதி, நவற்கிரி, புத்தூர், நிலாவரை. (33831)

தரமான நம்பர் - 1 பகிரா இன புறொயிலர் குஞ்சுகளும், பிறிமா இன சிவப்பு, வெள்ளைப் பேட்டுக்குஞ்சுகளும் இன்று மாலை 07.07.2004 விநியோகிக்கப்படும். பதிவுகளை முன்கூட்டியே மேற்கொள்ளவும். றாஜீவ், ஆனைக்கோட்டைச் சந்தி, **T.P.**: 3529, 2867. P.ரவி, தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. (33761)

### காணி விற்பனைக்கு

சுளிபுரம், பறாளாய் வீதியில் காரைநகர் யாழ்ப்பாணம் பிரதான வீதியிலிருந்து 50 யார் தூரத்தில் 3 பரப்பும் 3 குழி காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இ.பரநிருபசிங்கம். **T.P.**: 0112 559502. (33790)

### மணமக்கள் தேவை

இந்துகௌரவ குடும்ப அழகின பெண்ணுக்கு 37-45 வயதிற்கு இடைப்பட்ட உத்தியோக ஆசிரிய, சுயதொழில் மணமகன் தேவை. நல்ல வீடும் காணிகளும் பணமுமாகச் சிறந்த சீதமுண்டு. இங்கிலாந்துப் பிரஜையான முகாமைத்துவ இங்கிலாந்து பட்டதாரியான நல்ல நிலையிலுள்ள தம்பியார் மாற்றுச் சம்பந்தத்திற்கு இடமுண்டு. தொடர்பு: விள. இல. 2319, மே/பா உதயன். (33695)

### வாடகைக்கு

கடை வாடகைக்கு உண்டு. தொடர்பு: சிவா, இராமலிங்கம் வீதி, முடமாவடி.(33829)

### தேவை

புறொயிலர் இறைச்சிக்கோழிகள் தேவை. தொடர்பு: சிவா, இராமலிங்கம் வீதி, முடமாவடி. (33829)

### தவறிவிட்டது

உரும்பிராய் தெற்கைச் சேர்ந்த வல்லி கிருஷ்ணபாலன் என்பவருடைய விசேட அ. அட்டை (இல.0903004749), யூரோவில் ஜொப் காட் என்பன முகமாலைக்குச் செல்லும் வழியில் 04.07.2004 ஞாயிற்றுக்கிழமை தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கஸ்தூரியார் வீதியிலுள்ள புதிய நவீனா நகையகத்தில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும். **T.P.**: 0222 7114 (33851)

## கிராம அலுவலர் பிரிவுகளில் சமுர்த்தி சிறுவர் அமைப்புகள்

குருநகர்,ஜூலை7

யாழ். பிரதேச செயலகத்தின் யாழ்நகர் கிழக்கு சமுர்த்தி வலயக் காரியாலத்திற்குட்பட்ட கிராம அலுவலர் பிரிவுகளில் சமுர்த்தி சிறுவர் அமைப்புக்கள் உருவாக்கப்படவுள்ளன.

ஜே/61, ஜே/62, ஜே/66, ஜே/67, ஜே/69, ஜே/71, ஜே/72, ஜே/73, ஜே/74 ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் இந்த அமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.

சிறுவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதும், சிறுவர் துஷ்பிரயோகங்களைத் தடுப்பதும், வறிய சிறுவர்களுக்குக் கல்வி வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதும் இந்த அமைப்பின் நோக்கம் என யாழ். நகர் கிழக்கு சமுர்த்தி வங்கி முகாமையாளர் ம.கியூமன் தெரிவித்தார். (8-51)

## நாடு முழுவதும் புதியவகைக் காய்ச்சல்

கொழும்பு,ஜூலை7

நாடு முழுவதும் ஒரு புதிய வகைக் காய்ச்சல் வேகமாகப் பரவிவருவதாகவும் அதனால் பாதிக்கப்பட்ட பெரும் எண்ணிக்கையான நோயாளர்கள் தனியார் வைத்தியசாலைகளிலும், அரச வைத்தியசாலைகளிலும் சிகிச்சை பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தினமும் இக்காய்ச்சலால் பீடிக்கப்பட்டு 500பேர் வரையில் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைபெற்று வருவதால் வைத்தியசாலைகளில் போதிய படுக்கை வசதிகள் இல்லையெனவும், இதனால் அதிகளவிலான நோயாளிகள் தனியார் வைத்தியசாலைகளிலும் சிகிச்சை பெறுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (8-20)

# அரசமைப்பு, நீதித்துறை, தேர்தல் விதிமுறை அனைத்தையுமே மீறுகின்றார் ஜனாதிபதி!

## குற்றம் சுமத்துகின்றார் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ்

கொழும்பு,ஜூலை7

நிறைவேற்று அதிகாரம் என்ற பெயரில் ஜனாதிபதி, அரசமைப்பை மட்டுமல்ல நீதித்துறையையும், தேர்தல் விதிமுறைகளையும் மீறுகின்றார்.

- ஜனாதிபதியின் நடவடிக்கைகள் தொடர்பாகத் தேர்தல் ஆணையாளரிடம் இவ்வாறு முறைப்பாடு செய்கின்றது ஐக்கிய தேசிய முன்னணி.

தேர்தல் சட்டதிட்டங்களின்படி தேர்தல் நடைபெறுவதற்கு 48 மணி நேரத்துக்கு முன் சகல தேர்தல் பிரசார நடவடிக்கைகளையும் நிறுத்தி விடவேண்டும்.

ஆளும்கட்சியாக இருந்தாலும், எதிர்க்கட்சியாக இருந்தாலும் சுயேட்சைக்குழுக்களாக இருந்தாலும் இதனைக் கட்டாயமாகக கடைப்பிடித்தே ஆகவேண்டும். மீறுபவர்கள் எவராக இருந்தாலும் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் தேர்தல் ஆணையாளருக்கு உண்டு. அதை ஜனாதிபதியும் தடுக்க முடியாது.

பத்தாம் திகதி மாகாணசபைகளுக்கான தேர்தல்கள் நடைபெறவுள்ளன. அதன்படி 7ஆம் திகதி நள்ளிரவுடன் சகல பிரசார நடவடிக்கைகளையும் நிறுத்திவிட வேண்டும்.

ஆனால், ஜனாதிபதி எட்டாம் திகதி பதுளை மாவட்டத்தில் தனது கூட்டமைப்புக்கு ஆதரவு திரட்டும் வகையில் பல நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்துள்ளார். ஊவா மாகாணத்தில் ஐ.தே.கவின் வெற்றி உறுதிப்படுத்தப்பட்டுவிட்டது. அதனை எப்படியாவது தடுக்கவேண்டும் என்ற உள்நோக்குடனேயே ஜனாதிபதி இதனைச் செய்கின்றார். எனவே, தேர்தல் ஆணையாளர் ஜனாதிபதியின் இந்த அத்துமீறல்களைத் தடுக்கவேண்டும் எனத் தேர்தல் ஆணையாளரிடம் எதிர்க்கட்சிகளின் கூட்டணி கோரிக்கை விடுக்கும். இதற்கான மகஜர் தயாரிக்கபடுகின்றது - என்கிறார் ஐ.தே.க. பேச்சாளரான பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் எம்.பி.

நேற்றுமுன்தினம் காலை எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே ஜீ.எல்.பீரிஸ் இதனைத் தெரிவித்தார்.

மேலும், ஜனாதிபதியின் அத்துமீறல்கள் எனச் சிலவற்றை அவர் பட்டியல்போட்டும் காட்டினார்.

பொலீஸ் சேவை - பொதுமக்களின் நேரடித் தொடர்புடைய ஒரு சிவில் நிர்வாகசேவை. அரசியல் தலையீடுகள் இன்றிச் சுதந்திரமாக அது இயங்கவேண்டும் என்பதனாலேயே முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பொலீஸ் நிர்வாகத்திற்கெனத் தனியமைச்சை உருவாக்கினார்.

பொலீஸார் தொடர்பான சகல விடயங்களும் பொலீஸ் ஆணைக்குழுவினால் கையாளப்பட வேண்டும். பதவி உயர்வுகளைப் பொலீஸ் ஆணைக்குழுவே அங்கீகரிக்கவேண்டும். ஆனால், இதிலும் ஜனாதிபதி மூக்கை நுழைத்துவிட்டார். இதனால் பதவி உயர்வுகளினால் பாதிக்கப்பட்ட பொலீஸ் அதிகாரிகள் உயர் நீதிமன்றத்துக்குச் சென்றுவிட்டனர்.

அரசியல்வாதிகளோ அல்லது உயரதிகாரிகளோ ஊழல் மோசடிகளில் ஈடுபட்டால் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதில் எங்களுக்கு எந்த மாறான கருத்தும் இல்லை.

விசாரணை செய்யவேண்டியதும், தண்டனை வழங்கவேண்டியதும் பொலீஸாரும் நீதிமன்றமும்தான்.

ஆனால், ஜனாதிபதியோ சட்டத்தையும், ஒழுங்கையும் கையில் எடுத்துக்கொண்டு எதிர்க கட்சி உறுப்பினர்கள் மீது சேறுபூசும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளார். ஜனாதிபதியும், அமைச்சர்களும் கோவைகளைத் தாமே தயாரித்து பொலீஸாருக்கு உத்தரவிடுகின்றனர். இது அரசியல் பழிவாங்கல் நடவடிக்கையேயன்றி சட்ட நடவடிக்கை அல்ல. ஜனாதிபதியின் இந்த நாடகத்தின் ஓர் அங்கம்தான் ரவி கருணாநாயக்கா மீது சோடிக்கப்பட்ட வழக்கு. அதற்கு முகங்கொடுக்க நாம் தயார் - என்றும் ஜீ.எல்.பீரிஸ் கூறினார்.

பொலீஸ் ஆணைக்குழு, தேர்தல் ஆணைக்குழு, லஞ்ச ஆணைக்குழு என்பனபோன்று சுதந்திர ஊடக ஆணைக்குழுவும் நியமிககப்படவேண்டும். ஜனாதிபதியின் கட்டுப்பாட்டில் இருக்கும் ரூபவாஹினி, சுயாதீன தொலைக்காட்சி சேவை, லேக்ஹவுஸ் நிறுவனம் அனைத்தும் சுதந்திர ஊடக ஆணைக்குழுவின் கீழ் கொண்டுவரப்பட வேண்டும். அதன் தலைவர்களை நியமிக்கும் அதிகாரம் இந்த ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட வேண்டும். இதனை எதிர்க்கட்சிகளின் கூட்டணி வலியுறுத்துகின்றது எனவும் பேராசிரியர் பீரிஸ் செய்தியாளரிடம் கூறினார்.

இம்மாநாட்டில் ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினரான ஜயவிக்கிரமபெரேரா, ஜோன் அமரதுங்க, லக்ஷ்மன் செனவிரத்ன, ரவீந்திர ரந்தெனிய ஆகியோரும் கலந்துகொண்டனர். '(க-8)

## தவறவிட்ட பயணப்பை சாவகச்சேரி நீதிமன்றத்தில்

தென்மராட்சி,ஜூலை7

முகமாலை சோதனை நிலையத்தில் கைவிடப்பட்ட நிலையில் காணப்பட்ட பயணப்பை கொடிகாமம் பொலீஸாரால் அண்மையில் சாவகச்சேரி நீதிமன்றில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

பயணப்பையினைத் தவறவிட்டவர் சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றப் பதிவாளருடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாமென அறிவிக்கப்பட்டுள்ளது. (-8-117)

## இலவச மூக்குக் கண்ணாடி வழங்கல்

யாழ்ப்பாணம்,ஜூலை7

வலி. தென்மேற்குப் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பகுதியிலுள்ள கண்பார்வையற்றவர்களுக்குக் கரும்புலிகள் தினத்தையொட்டி மூக்குக்கண்ணாடிகள் நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டன.

மானிப்பாய் லயன்ஸ் கழகத்தின் அனுசரணையுடன் இந்த இலவச மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டன. (8-125)


### விற்பனையாளர் தேவை

சுன்னாகத்தில் இயங்கும் மூக்குக் கண்ணாடியகத்திற்கு ஓரளவு ஆங்கில அறிவுள்ள பெண் விற்பனையாளர் தேவை.
வயதெல்லை 30-40இற்கு இடைப்பட்டவராக இருக்கவேண்டும். உங்கள் விண்ணப்பங்களை கீழ்க் காணும் முகவரிக்கு அறியத்தரவும்.
(அருகில் உள்ளோர் விரும்பத்தக்கது)
விள. இலக்கம் 2321,
C/o உதயன், யாழ்ப்பாணம். (33852) (26)


## 31ஆம் நாள் நினைவஞ்சலி



திருமதி
சண்முகதாசன் இராஜேஸ்வரி
(மாம்பழம் - தொண்டைமானாறு)

தோற்றம் 22.05.1931 — மறைவு 08.06.2004

துணையாக நின்று எமக்கு நல்வழிகாட்டி
நினையாத வேளைதனில் நீங்கள் பிரிந்ததேனோ?
அணையாத விளக்காய் அவனியிலே என்றும்
எம் அகங்களில் வாழ்வீரே அன்புத் தெய்வமே!

பழமுதிர்சோலை,
கொத்தியகாடு, தொண்டைமானாறு.

பிரிவால் துயருறும்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(C-36259) (27)

## நெஞ்சை விட்டகலா நினைவலைகள்

### அறுபத்தைந்தாம் நாள்

இவ்வுலகில் 06.02.1920 — இறையுலகில் 02.05.2004



அமரர் வல்லிபுரம் இராசையா
(ஓய்வுபெற்ற ஆசிரியர், விக்னேஸ்வராக் கல்லூரி, கரவெட்டி)

எங்கள் உயிரான அன்புத் தந்தையே!
ஆறாத வேதனையில் எம்மை ஆழ்த்திவிட்டு
நீங்கள் துயில்கொண்டு அறுபத்தைந்து நாள்கள்
ஆகிவிட்டாலும் உங்கள் நினைவுகள் - எம்
நெஞ்சில் நிழலாக என்றும் தொடர்கின்றன
உங்கள் ஆசிகள் என்றென்றும் எங்கள்
குடும்பத்திலும் கிடைக்க வேண்டுகின்றோம்.

உங்கள் நினைவுடன்:
குடும்பத்தினர்.

### நாற்பத்தோராம் நாள்

மலர்வு 19.06.1947 — மறைவு 27.05.2004



அமரர் ஆழ்வாப்பிள்ளை பிரான்சிஸ்
(இளைப்பாறிய மக்கள் வங்கி உத்தியோகத்தர், கரவெட்டி.)

நாள்கள் நாற்பத்தொன்று சென்றாலும்
மறைந்த உம் நினைவுகள் நீங்கவில்லை
மீண்டும் நீ வாராயோ இந்த அவனியிலே
ஆவலாய் ஏங்கியே தவிக்கின்றோம் நாம்.

'ஈஸ்வரி இல்லம்'
நுகவில்,
கரணவாய் கிழக்கு,
கரவெட்டி.

பிரிவால் துயருறும்:
அன்பு மனைவி
மற்றும் குடும்பத்தினர்.

(33685)

ஈராக்கின் பலுஜா நகரில்

# அமெரிக்கப் படைகள் நடத்திய வான்தாக்குதலுக்கு இடைக்கால பிரதமர் இயட் அல்லவி ஒத்துழைப்பு!

ஈராக்கின் பலுஜா நகரில் நேற்றுமுன்தினம் அமெரிக்கப் படைகள் நடத்திய விமானத் தாக்குதலுக்கு ஈராக்கின் புதிய பிரதமர் இயட் அல்லவி ஒத்துழைப்பு வழங்கியதாக அமெரிக்கப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். இந்தத் தாக்குதலில் 10 பேர் கொல்லப்பட்டனர்.

பிரதமர் இயட அலாவி முன்னுதாரணமற்ற முறையில் வெளியிட்டுள்ள ஓர் அறிக்கையில் அமெரிக்க வான்தாக்குதலுக்குத் தமது இடைக்கால அரசு புலனாய்வுத் தகவல்களைக் கொடுத்துதவியதாக அறிவித்துள்ளார்.



அல்கெய்டா தலைவர்களில் ஒருவரான அபு புஸாப் அல்-சர்க்காவி என்பவரின் ஆதரவாளர்களால் பயன்படுத்தப்பட்டதாகச் சந்தேகிக்கப்பட்ட வீடு ஒன்று தாக்கப்பட்டதாக அமெரிக்கப் பேச்சாளர் கூறியுள்ளார்.

இடைக்கால அரசு கையளிக்கப்பட்டதன் பின்னர் நடத்தப்பட்ட முதல் தாக்குதல் இதுவாகும்.

வெளிநாட்டு ஆயுதக் கும்பல்கள் மீது தாக்குதல் நடத்துவதற்கு இடைக்கால அரசு அமெரிக்காவுக்கு வெளிப்படையாகவே ஆதரவளிக்கிறதென்பதை பிரதமரின் அறிக்கை காட்டுகிறது என்று செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இறமையுள்ள ஈராக்கிய மக்களும் எமது சர்வதேசப் பங்காளிகளும் பயங்கரவாதத்துக்கு ஒரு முடிவுகட்டுவதில் முன்னிற்கிறார்கள்; இழிவான இந்தப் பயங்கரவாதிகளை நாம் துரத்தியடிப்போம். அவர்களை ஒருவர் ஒருவராகக் களையெடுப்போம் என்று பிரதமர் அலாவி தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

பலூஜா நகரில் அமெரிக்க விமானங்களின் குண்டுவீச்சினால் உண்டாகியிருந்த 30 அடி அழமான கிடங்கின் அருகில் ஈராக்கியர்கள் திரண்டுநின்று தமது கோபத்தை வெளியிட்டனர். அவர்களில் சிலர், இம்மாதிரி தாக்குதல்களை புதிய அரசு வரவேற்கின்றதா என்றும் வினவினார்கள்.

ஈராக்கிய அரச அதிகாரிகளோடும் ஈராக்கில் உள்ள பல்தேசியப் படையினரோடும் ஆலோசனை செய்த பின்னர் சர்க்காவியின் மறைவிடமான பாதுகாப்பு வீட்டின் மீது குண்டு வீசுவதற்கான தெளிவான புலனாய்வுத் தகவல்களை ஈராக்கியப் படையினர் அமெரிக்கப் படையினருக்கு வழங்கினார்கள் என்று பிரதமர் அல்லவி தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

பலுஜாவில் அமெரிக்கப் படைகளுக்கு எதிரான தாக்குதல்களை அல்கெய்டா தலைவர் சர்க்காவி என்பவரே திட்டமிட்டு நடத்திவந்துள்ளார் என்று அமெரிக்கர்கள் அடிக்கடி குற்றஞ்சாட்டி வந்துள்ளனர். (ப-8)

## சதாமுக்கு ஆதரவாக ஈராக்கில் ஆர்ப்பாட்டம்

ஈராக் முன்னாள் ஜனாதிபதி சதாம் ஹுசைனுக்கு ஆதரவு தெரிவித்து 300 இற்கு மேற்பட்ட ஈராக்கியர்கள் பலுஜர் நகரில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை நடத்தினர். அநேகர் கைகளில் கைக்குண்டுகளை ஏந்தியிருந்தனர்.

புஷ்...புஷ்... நன்றாகக் கேள் "நாங்கள் அனைவரும் எம்மை சதாம் ஹுசைனுக்குத் தியாகம் செய்பவர்கள்" என ஆர்ப்பாட்டக்காரர்கள் கோஷம் எழுப்பினர். அதேவேளை ஈராக்கின் மூன்றாவது பெரிய நகரான மோஸீல் மத்திய நிலையத்தில் சுமார் ஐம்பது சதாம் ஆதரவாளர்கள் அவருக்கு ஆதரவு தெரிவித்து அமைதிப் போராட்டமொன்றை மேற்கொண்டனர்.

ஈராக்கில் இடைக்கால அரசு பதவியேற்றது முதல் கெரில்லாக்கள் பெரிய அளவிலான தாக்குதல்களில் ஈடுபடவில்லை. எனினும் கடந்த சனிக்கிழமை ஈராக்கின் தென் பகுதியில் பாரிய எண்ணெய்க் குழாயைத் தகர்த்துத் தீ மூட்டிக் கொளுத்தியுள்ளார்கள். ஈராக்கிய முக்கிய எண்ணெய்க் குழாய்களில் இதுவும் ஒன்று.

அதேவேளை -

ஈராக்கில் உள்ள தீவிரவாதிகள் சதாம் ஹுசைனின் ஆதரவாளர்கள் அரசுக்கு எதிரான தீவிரவாத முஸ்லிம் இயக்கத்தினர் ஆகியோர் அழிக்கப்படுவர் எனப் புதிய அரசு சூளுரைத்துள்ளது. (8)




ஈராக்கின் தலைநகர் பக்தாத்திலிருந்து 30 கிலோமீற்றர் தொலைவில் உள்ள அபுகிராய்ப் சிறைச்சாலையிலிருந்து கைதிகள் சிலர் நேற்றுமுன்தினம் விடுவிக்கப்பட்டனர். விடுதலையான மகிழ்ச்சியில் அவர்கள் பஸ்ஸிலிருந்து கையசைத்து விடைபெறுவதைப் படத்தில் காணலாம்.

## வெளிநாட்டுப் படைகளுக்கு எதிரான போர் தொடரும் என்கிறார் அல் சதார்



பக்தாத்,ஜூலை7

அமெரிக்க அதிகாரத்துக்கு எதிராக செயற்பட்டுவரும் மதத் தலைவர் மொக்ராடா சதார் தொடர்ந்தும் வெளிநாட்டுப் படைகளுக்கு எதிராகப் போராடப் போவதாக அறிவித்துள்ளார். வன்முறைகளைத் தூண்டப் போவதில்லை என்று அவர் கூறியுள்ளார்.

கிளர்ச்சியாளர்களை ஒடுக்குவதற்கான புதிய சட்டமொன்றை அமுல்படுத்துவதைத் தாமதப்படுத்துவதற்கு இடைக்கால அரசு முன்வந்திருப்பதையடுத்து சதாரின் இந்த நிலைப்பாடு வெளியாகியுள்ளது.

முன்னர் அவர் விடுத்திருந்த அறிக்கை ஒன்றில் காணப்பட்ட தாக்கத்தைத் குறைப்பதற்காகவே இப்புதிய நிலைப்பாடு வெளியிடப்பட்டதாகக் கருதப்படுகின்றது.

அமெரிக்கப் படைகளுடனான போர் ஓய்வு முடிவுக்கு வந்துவிட்டது என்று முன்னர் அவர் அறிவித்திருந்தார்.

சதாரின் பேச்சாளர் தெரிவிக்கையில், போர் ஓய்வு மதிக்கப்படும். ஆனால், வெளிநாட்டுப் படைகளுக்கெதிரான் அமைதியான எதிர்ப்புத் தொடரும் - என்றார். (ப-8)

## பாகிஸ்தானில் அமெரிக்க சுதந்திரதின விருந்து இரத்துச் செய்யயப்பட்டது

இஸ்லாமாபாத்,ஜூலை7

பாகிஸ்தானில் நேற்றுமுன்தினம் நடைபெற இருந்த அமெரிக்க சுதந்திர தின விருந்தை ரத்துச்செய்தது அமெரிக்கத் தூதரகம்.

பயங்கரவாதத் தாக்குதல் அச்சம் காரணமாகச் சுந்திரதின விருந்தை அமெரிக்கத் தூதரகம் ரத்துச் செய்துள்ளது. பிரிட்டிஷ் தூதரகம் தனது அலுவலகத்தைத் தற்காலிகமாக மூடியுள்ளதாக வெளியுறவுத்துறைச் செய்தித் தொடர்பாளர் மசூது கான் தெரிவித்தார். (8)

## சதாமுக்கு என்ன தண்டனை என்பதை ஈ-ராக் நீதிமன்றமே முடிவு செய்யும்

### இடைக்காலப் பிரதமர் தெரிவிக்கிறார்

பக்தாத்,ஜூலை7

ஈராக் முன்னாள் அதிபர் சதாம் ஹுசைனுக்கும், அவரது கூட்டாளிகளுக்கும் மரண தண்டனை விதிக்கப்படுமா என்பதை ஈராக் நீதிமன்றமே முடிவுசெய்யும் என்று இடைக்காலப் பிரதமர் இயட் அல்லவி நேற்றுமுன்தினம் தெரிவித்தார்.

அல்-அரேபியா தொலைக்காட்சி நிலையம் இச்செய்தியை வெளியிட்டுள்ளது.

சர்வதேச நியதிகளை மீறிப் போரின்போது கொடுங்குற்றம் இழைத்தது உட்படப் பல்வேறு குற்றச்சாட்டுகள் தொடர்பாக சதாம் மற்றும் அவரது கூட்டாளிகளிடம் ஈராக் சிறப்பு நீதிமன்றம் விசாரணை நடத்திவருகிறது. குற்றம் நிரூபணம் ஆகிவிட்டால் அவர்களுக்கு என்ன தண்டனை என்பதை நீதிமன்றமே முடிவு செய்யும். அதன் முடிவு எதுவாக இருந்தாலும் அதை ஏற்பேன். விசாரணை பல மாதங்களுக்குத் தொடரும் என்று எதிர்பார்க்கவில்லை என்றார் - அல்லவி.



அமெரிக்க இராணுவத்தின் பாதுகாப்பில் இருந்த சதாம், கடந்த வாரம் ஈராக்கின் இடைக்கால அரசு வசம் விசாரணைக்காக ஒப்படைக்கப்பட்டார்.

நீதிமன்றத்தில் கடந்த வியாழக்கிழமை சதாம் ஆஜரானபோது, பத்திரிகைகளில் அவரைப் பற்றிய செய்தி பிரதானமாக இடம்பெற்றது. அவருக்கு மரணதண்டனை கிடைக்குமா என்ற விவாதமும் சூடுபிடித்துள்ளது. (8)

## லிபியாவிடமிருந்து போர் விமானங்களை வாங்கியது பாகிஸ்தான் விமானப்படை

இஸ்லாமாபாத்,ஜூலை7

லிபியாவிடமிருந்து 50 மிராஜ் போர் விமானங்களை வாங்கியுள்ளது பாகிஸ்தான் விமானப்படை. இவை பழைய விமானங்களாகும்.

பாகிஸ்தான் விமானப் படையின் பயன்பாட்டில் மிராஜ் போர் விமானங்கள் உள்ளன. இவற்றுக்கு உதிரிப்பாகங்கள் கிடைப்பதில் பிரச்சினை இருந்து வந்தது. இதைச் சமாளிக்கவே லிபியாவிடம் இருந்து பழைய விமானங்கள் வாங்கப்பட்டுள்ளன. உதிரிப் பாகங்களுக்காக இவை பயன்படுத்தப்பட இருந்தாலும், விமானப் படையில் பயன்படுத்தத் தகுதி வாய்ந்தவையா என்பதையும் விமானப்படை ஆய்வு செய்யும்.

50 மிராஜ் விமானங்கள், 150 என்ஜின்கள், பெருமளவு உதிரிப்பாகங்கள் என்பன திரிபோலியிலிருந்து பாகிஸ்தான் விமானப்படைத் தளத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்று பாகிஸ்தானின் 'தி நியூஸ்' நாளேடு வெளியிட்ட செய்தி தெரிவிக்கிறது. (8)

உலக அரங்கில்

## பிலிப்பைன்ஸ் தீவிரவாதிகளின் பிடியில் இரு மலேஷியர்கள்?

கோலாலம்பூர்,ஜூலை7

கடந்த ஆண்டு மே மாதம் கடலில் மீன் பிடிக்கச் சென்ற 2 மலேஷியர்கள் பிலிப்பைன்ஸ் தீவிரவாதிகளின் பிடியில் இருக்கலாம் என்று கூறப்படுகிறது.

இதுதொடர்பாக மலேஷிய நாளிதழ் ஒன்று நேற்றுமுன்தினம் வெளியிட்ட செய்தியில் கூறியுள்ளதாவது:-

தொழில் அதிபர் அலெக்நியஸ் ஆனாங், கல்லூரி மாணவர் மெத்துசெலா சாங் உட்பட பல மலேஷியர்கள் கடந்த ஆண்டு மலேஷியாவுக்கும் பிலிப்பைக்ஸுக்கும் இடைப்பட்ட கடல் பகுதியில் பொழுதுபோக்குக்காக மீன் பிடிக்கச் சென்றனர்.

அவர்கள் சென்ற படகு கட்டுப்பாட்டை இழந்து விபத்து ஏற்பட்டது. படகில் சென்ற 10 பேர் மீட்கப்பட்டனர். அலக்சியஸ் ஆனாங் மற்றும் மெத்துசெலா சாங் ஆகியோரை மீட்க முடியவில்லை. அவர்களின் உடல்களும் கிடைக்கவில்லை. அவர்கள் கடலில் மூழ்கியிருக்கலாம் என்று கருதப்பட்டது.

ஆனால், தற்போது பிலிப்பைன்ஸைச் சேர்ந்த அபுசாயப் பயங்கரவாத இயக்கத்தின் பிடியில் அவர்கள் சிக்கியிருக்கலாம் என்ற சந்தேகம் எழுந்துள்ளது. அவர்கள் இருவரும் உயிரோடுதான் இருக்கக்கூடும் என்றும் கூறப்படுகிறது. (8)

## கார்க்குண்டு தயாரிக்கும் தொழிற்சாலையை ஈராக்கில் கண்டுபிடித்தது அமெ. இராணுவம்

ஈராக்கில் அமெரிக்க இராணுவம் நடத்திய சோதனையில் கார்க்குண்டு தயாரிக்கும் தொழிற்சாலையொன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

ஈராக்கில் அமெரிக்கப் படையினர் மீது தீவிரவாதிகள் அடிக்கடி தாக்குதல் நடத்தி வருகிறார்கள். துப்பாக்கியால் சுடுவது, ரொக்கெட் வீசுவது மட்டுமன்றி வெடிகுண்டுகள் நிரப்பப்பட்ட கார்களை வெடிக்கச் செய்து பலத்த உயிர்ச்சேதத்தையும் ஏற்படுத்தி வருகின்றனர்.

இந்தத் தாக்குதலகளில் இராணுவத்தினர் மட்டுமன்றி சில சமயங்களில் அப்பாவி பொது மக்களும் பலியாகின்றனர். இதைத் தொடர்ந்து அமெரிக்கப் படையினர் நடத்திய தீவிர சோதனையில் கார்க்குண்டு தயாரிக்கும் தொழிற்சாலை கண்டுபிடிக்கப்பட்டது.

அதாவது சக்திவாய்ந்த வெடிகுண்டுகளை வெடிக்கச் செய்யும் வகையில் அங்கு கார்களில் சில மாற்றங்கள் செய்யப்பட்டு, பின்னர் வெடிகுண்டுகளை அதில் பொருத்தி குறிப்பிட்ட இடத்திற்குக் கொண்டு சென்று வெடிக்கச் செய்யப்படும்.

இத்தொழிற்சாலையில் 4 வெடி குண்டு கார்கள் தயார் நிலையில் நிறுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதுதவிர அங்கு ஏராளமான ஈராக் பணம், ஏ.கே.47 துப்பாக்கிகள், வெடிகுண்டுகள், வெடிபொருள்கள், கணனிகள் ஆகியவையும் இருந்தாகவும் அவற்றை அமெரிக்கப் படையினர் பறிமுதல் செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. மேலும் அங்கிருந்த 3பேரை கைது செய்து விசாரணை நடத்தி வருகிறார்கள்.

2 நாள்கள் அமெரிக்கப் படையினர் பல்வேறு இடங்களில் மெற்கொண்ட சோதனையில் 48 பேர் கைது செய்யப்பட்டனர். (8)

இடம்பெயர்ந்தோருக்கான நிவாரண விநியோகப் பணி:

# கூ. சங்கங்களுக்கான கொடுப்பனவை அரச செயலகம் உடன் வழங்கவேண்டும்

அரியாலை,ஜூலை7

யாழ்.செயலக புனர்வாழ்வுப் பகுதியினரால் யாழ்.மாவட்ட பலநோக்குக்கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்படவேண்டிய பல லட்சம் ரூபா நிதியை உடனடியாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு யாழ்.மாவட்ட கூட்டுறவுச்சபை ஜனாதிபதியிடம் கேட்டிருக்கிறது.

இந்தக் கோரிக்கை அடங்கிய கடிதத்தை கூட்டுறவுச் சபைத் தலைவர் பெ.கனகசபாபதி 'பக்ஸ்' மூலம் ஜனாதிபதி செயலகத்துக்கு அனுப்பியிருக்கின்றார்.

1997-98ஆம் ஆண்டு காலப்பகுதியில் இடம்பெயர்ந்த பெரும் எண்ணிக்கையான குடும்பங்களுக்கு உலர்உணவு நிவாரணப் பொருள்களை விநியோகித்த வகையில் பல லட்சக் கணக்கான ரூபா பணத்தை யாழ். அரச செயலக புனர்வாழ்வுப் பகுதி கூட்டுறவுச் சங்கங்களுக்கு இன்னும் வழங்கவில்லை என்று கூட்டுறவுச் சங்க நிர்வாகங்கள் முறையிட்டிருக்கின்றன. இதனைத் தொடர்ந்து இது விடயத்தை ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டு வந்திருக்கிறது கூட்டுறவுச்சபை.

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்குப் புனர்வாழவுப் பகுதியினரால் செலுத்தப்படவேண்டிய இத்தொகையைக் கூட்டுறவுத்திணைக்களம் கணக்காய்வு செய்து கணக்கறிக்கைகளிலும் வருமதி என உறுதிசெய்துள்ளது.

எனவே, கடந்தகால யுத்த அனர்த்தங்களாலும், இடம்பெயர்வுகளினாலும் பல லட்சக்கணக்கான ரூபா பெறுமதியான சொத்துக்களை இழந்துள்ள கூட்டுறவுச் சங்கங்களுக்கு இந்தக் கொடுப்பனவை வழங்குமாறு கூட்டுறவுச் சபை ஜனாதிபதிக்கு அனுப்பிவைத்த "பக்ஸ்" செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-17)

## 31 ஆம் நினைவு நாள்



அமரர்

**அமர்த்தோர் அல்போன்ஸ்**

தோற்றம் 29-12-1934 மறைவு 07-06-2004

ஆருயிரே அறிவூற்றே அன்பின் ஐயா,
ஆற்றல்கள் பல எமக்கீந்த
அறிவுத் தந்தையே!
பேரமுதே பெரும் பாசப்பேறே - எங்கள்
பெருமைக்கு வித்திட்ட ஐயாவே,
அன்புடனே அரவணைத்து
அணையாது ஒளி விட்ட தீபமே!
ஆறத்தான் முடியவில்லை - உங்கள்
வேதனையோ தீரவில்லை!
வெம்பி வெம்பி தினம்
தேடுகின்றோம் ஐயா!

உங்கள் நீங்கா நினைவுகளுடன்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

பற்றிமாகிரி,
பண்டத்தரிப்பு.

(43-18-19-26) (33861)

## அடிக்கல் நடும் நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஜூலை7

உடுவில்தெற்கு, புதுமடம் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு நாளை வியாழக்கிழமை காலை 9மணி தொடக்கம் 10.37மணி வரையான சுபநேரத்தில் ஆலய வளவில் கா.இராஜேஸ்வரக்குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ளது. (10)

## உலகத் தமிழ்ப் பண்பாட்டு மாநாடு இந்தியாவில்!

ஒன்பதாவது உலகத் தமிழ்ப் பண்பாட்டு மாநாடு எதிர்வரும் 10 ஆம் திகதி சனிக்கிழமைமுதல் 12ஆம் திகதி திங்கட்கிழமைவரை இந்தியாவின் பாண்டிச்சேரியில் நடைபெறவுள்ளது.

ஒன்பது அரங்குகளில் நடைபெறும் இந்த மாநாட்டில் 36 தலைசிறந்த தமிழறிஞர்கள் பங்குபற்றவுள்ளனர்.

தமிழரின் பாரம்பரிய இசை மற்றும் கலை நிகழ்சசிகள் இந்த மாநாட்டில் நடைபெறவுள்ளன.

21 ஆம் நூற்றாண்டில் 'தமிழும் தமிழரும்' என்ற கருப்பொருளில் பாண்டிச்சேரி, ஆந்திரசபை மண்டபத்தில் இம்மாநாடு இடம்பெறவுள்ளது. (8-ரி)

# 169 மோட்டார் சைக்கி[illegible]களுக்கு இரட்டைப் பதிவுகள் கண்டுபிடிப்பு!

யாழ்ப்பாணம்,ஜூலை7

இரட்டைப்பதிவுகள் (மீள்பதிவுகள்) மேற்கொள்ளப்பட்ட 169 மோட்டார் சைக்கிள்கள் குடாநாட்டில் பாவனையில் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் யாழ். செயலகத்தில் இடம்பெற்ற நடமாடும் சேவையினபோது ஆவணங்கள் அற்றநிலையில் இருநத மோட்டார் சைக்கிள்கள் தற்காலிகமாகப் பதிவுசெயயப்பட்டன.

இவ்வாறு பதிவுசெய்யப்பட்ட மோட்டார் சைக்கிள்களின் விவரங்களை ஆராய்ந்த போதே இந்த இரட்டைப்பதிவுகள் மேற்கொள்ளப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டதாக மோட்டார் போக்குவரத்து திணைக்கள யாழ். அலுவலக உதவி ஆணையாளர் சி.பத்மநாதன் தெரிவித்தார்.

இவற்றுக்கான பதிவுப் புத்தகங்கள் தலைமைச் செயலகத்தினால் உரிய இடங்களுக்கு அனுப்பிவைக்கப்படமாட்டா என்றும் -

சம்பந்தப்பட்டோர் தலைமைச் செயலகத்துடன் தொடர்புகொண்டு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் என்றும் - அவர் மேலும் அறிவித்துள்ளார்.

இரட்டைப்பதிவுகள் மேற்கொள்ளப்பட்ட மோட்டார் சைக்கிள்களின் இலக்கங்கள் வருமாறு:- (பழைய இலக்கங்கள் அடைப்புக்குறிக்குள்)

500-9388 (117-6801), 500-9396 (94-1734), 500-9398 (86-5992), 500-9401 (110-0703), 500-9409 (91-9274), 500-9413 (119-6944), 500-9428 (122-0447), 500-9434 (113-7374), 500-9435 (94-7593), 500-9441 (101-4103), 500-9443 (131-8329), 500-9445 (97-1485), 500-9450 (149-3563),

500-9453 (111-7452), 500-9457 (105-4171), 500-9460 (500-0196), 500-9468 (101-9772), 500-9485 (110-5142), 500-9489 (112-4216), 500-9492 (HN-9570,RB-20033), 500-9500 (129-9059), 500-9507 (135-6160), 500-9511 (86-9591), 500-9514 (92-5072), 500-9516 (128-4292)..

500-9517(*7-9907), 500-9525 (107-3545), 500-9529 (105-6563), 500-9532 (GG-4288),500-9538 (107-5971), 500-9549 (155-0274), 500-9558 (106-9575), 500-9572 (94-9363), 500-9581 (102-6725), 500-9583 (107-4116), 500-9586 (156-3945), 500-9590 (112-8090)

500-9591 (148-7426), 500-9593 (125-9274), 500-9594 (88-3494), 500-9603 (139-5954), 500-9605 (150-8216), 500-9611 (84-5332), 500-9617 (109-2636), 500-9621 (90-9263), 500-9622 (94-6525), 500-9627 (104-2470).

500-9630 (94-0471), 500-9639 (132-9570), 500-9641 (108-2427), 500-9642 (104-9703), 500-9643 (82-5391), 500-9651 (GA-1972), 500-9653 (107-1626), 500-9655 (500-1874), 500-9656 (101-9638), 500-9657 (116-2239).

500-9659 (113-3144), 500-9662 (153-8911), 500-9667 (101-2673), 500-9668 (GT-4979), 500-9674 (155-1702), 500-9677 (110-5704), 500-9679 (84-5777), 500-9686 (500-4831), 500-9696 (100-5806), 500-9702 (139-7657), 500-9709 (96-5700), 500-9713 (GP-1287), 500-9714 (126-6752), 500-9717 (140-4210).

500-9726 (GE-3312), 500-9731 (88-4364), 500-9738 (149-9162), 500-9740 (96-5120), 500-9742 (82-9163), 500-9761 (88-9578), 500-9763 (107-2078), 500-9776 (113-2202), 500-9781 (100-8798), 500-9785 (100-2956).

500-9786 (113-0707), 500-9793 (101-4842), 500-9797 (106-1291), 500-9799 (*5-4643), 500-9802 (112-2645), 500-9804 (101-6916), 500-9807 (500-5539), 500-9808 (500-6508), 500-9825 (86-8388), 500-9829 (95-8036)

500-9837 (148-0257), 500-9838 (93-5586), 500-9840 (104-7274), 500-9843 (111-2653), 500-9851 (95-0171), 500-9854 (108-7797), 500-9860 (113-0322), 500-9862 (114-4909), 500-9867 (113-6584), 500-9871 (108-0751)

500-9874 (136-9839), 500-9878 (94-8879), 500-9885 (120-1440), 500-9888 (157-3271), 500-9890 (GI-5744), 500-9891 (140-2365), 500-9892 (81-6066), 500-9894 (103-5534), 500-9898 (157-0818), 500-9901 (84-4172).

500-9908 (*9-7061), 500-9915 (*10-3243), 500-9928 (95-5020), 500-9935 (130-8727), 500-9936 (96-3787), 500-9941 (139-6679), 500-9942 (109-3148), 500-9947 (500-1538), 500-9955 (110-6609), 500-9962 (101-4711).

500-9965 (134-5818), 500-9966 (157-7634), 500-9974 (GL-1118) 500-9979 (102-1303), 500-9987 (88-9455), 500-9994 (500-1288), 500-9999 (124-2261), 501-0002 (139-6609), 501-0007 (119-8229), 501-0014 (92-4859), 501-0018 (96-5341), 501-0025 (101-0693), 501-0029 (110-1474), 501-0032 (105-9705),

501-0041 (104-7429), 501-0051 (95-3013), 501-0056 (104-4386), 501-0059 (139-5212), 501-0061 (142-8679), 501-0063 (88-8019),501-0065 (107-4235), 501-0066 (86-9808), 501-0074 (150-3274), 501-0092 (93-2661).

501-0116 (111-1794), 501-0129 (153-7215), 501-0130 (102-5410), 501-0134 (94-7721),501-0135 (*1-4173), 501-0137 (500-2835), 501-0138 (101-9526), 501-0157 (103-1615), 501-0165 (500-0229), 501-0173 (102-1288), 501-0179 (83-0623), 501-0180 (88-8328), 501-0181 (113-8813), 501-0188 (102-4356).

501-0195 (GK-1542), 501-0196 (104-3109), 501-0197 (500-2454), 501-0203 (91-0414), 501-0204 (500-2880), 501-0206 (124-5697), 501-0213 (105-3383), 501-0216 (103-2244), 501-0221 (*10-3466), 501-0225 (107-7071), 501-0230 (500-1135).






**London English College**

**No. 105, Arasady Road, Jaffna**


**T.P : 222-5889, 0777-252180, 0776-303539**

எதிர்வரும் 09,10,11.07.2004 அன்று பெற்றோர்களுக்கும் மாணவர்களுக்குமான இலவச கருத்தரங்குகள் காலை 10 மணிக்கும் மாலை 5 மணிக்கும் எமது வளாக கேட்போர்கூடத்தில் நடைபெறும்.




யாழ். நகரில் ஆவலுடன் எதிர்பார்த்த முழுநேர ஆங்கிலக் கற்கைநெறி!

முற்றிலும் British முறையினைப் பின்பற்றிய கல்விமுறை




ஒலி/ஒளி நாடாக்கள் மூலமான கற்பித்தல் முறை





Professional 1
Where can I Learn English...?



Professional 2 :- You can Follow a Course From L.E.C.

மேலதிக விவரங்களுக்கு :-
சனிக்கிழமை உதயனில்...



**BCNS**

**No. 229A, Mitcham Road, Tooting SW 17910 London U.K** (33863) (26-18-19)


## மரண அறிவித்தல்



**கென்றி பாலசிங்கம்**

**(முன்னாள் தொழில் திணைக்கள பிரதம லிகிதர், உயர் நீதிமன்றப் பதிவாளர் - வவுனியா, கல்வித்திணைக்கள நிர்வாக அலுவலர் - வவுனியா கச்சேரி, நல்லூர் பிரதேச செயலக பதில் உதவி அரச அதிபர்)**

தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் ஏழாலை தெற்கு, சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கென்றி பாலசிங்கம் அவர்கள் கடந்த (04.07.2004) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கென்றி - பொன்னம்மா தம்பதிகளின் பாசமிகு மகனும் சின்னப்பு - ஆசைப்பிள்ளை தம்பதிகளின் மூத்த மருமகனும் காலஞ்சென்ற பசுபதி (முன்னாள் சிறைசசாலை பாதுகாப்பு உத்தியோகத்தர்)யின் சகோதரரும் பொன்னாச்சிப்பிள்ளையின் மைத்துனரும் நாகம்மா (இளைப்பாறிய ஆசிரியை)யின் அன்புக் கணவரும் புவனாம்பிகை (லண்டன்), கலாமோகன் (Engineer - லண்டன்), லோஜனாம்பிகை ஆகியோரின் பாசமிகு தந்தையும் உதயகுமாரன் (உதயன் வீடியோ லண்டன்), சுஜாத்தா (B.Sc. லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் தேனுகா, மஞ்சரி, பிருந்தன், கிருஷ்ணி ஆகியோரின் பேரனும் பாலசிங்கம், தர்மலிங்கம், செல்லத்துரை, சிங்கராஜா, சிவஞானம், கமலாதேவி, லோகநாதன், சிதம்பரநாதன், மகேஸ்வரி, புனிதராணி, திருச்செல்வம் ஆகியோரின் மைத்துனரும் அமரர் நடராஜா (வர்த்தகர்), குலசேகரம் (மின்அத்தியட்சகர்), சீவரட்ணம் (யாழ்.கச்சேரி), இரட்ணசிங்கம் (நிலஅளவையாளர் ஓமான்) ஆகியேரின் சகலனும், மகாலட்சுமி, அமரர் லட்சுமி, சிவபாக்கியம் திரேசம்மா, லூர்த்தம்மா, சந்திராதேவி, சரோசாதேவி ஆகியோரின் சகோதரனும் அமரர் சிவபாதசுந்தரம், மனோன்மணி தம்பதிகள், K.தங்கவடிவேல் (ஓய்வுபெற்ற ஆசிரியர்) ரூபசுந்தரி தம்பதிகளின் சம்பந்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*"அம்பிகை மகால்"*
*ஏழாலை தெற்கு, சுன்னாகம்.*
*T.P. 077 6505033*

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

(33862)(36-12-18-26)

## சந்தேக நபருக்குப் பிணை

நாவற்குழி பகுதியில் கடந்த மார்ச் மாதம் குடும்பஸ்தர் ஒருவர் உழவு இயந்திரத்தினால் மோதிக் கொல்லப்பட்டதாகக் கூறப்படும் வழக்கில் முதலாவது சந்தேக நபருக்கு யாழ்.மாவட்ட மேல் நீதிமன்று நேற்றுப் பிணை அனுமதி வழங்கியது.

கடந்த மார்ச் மாதம் 26 ஆம் திகதி நாவற்குழி சித்திவிநாயகர் கோயிலடியைச் சேர்ந்த தம்பிஐயா சீவரத்தினம் (வயது 57) என்ற குடும்பஸ்தர் உழவு இயந்திரம் மோதியதில உயிரிழந்தார்

இது தொடர்பான வழக்கு நேற்று யாழ். மாவட்ட மேல் நீதி மன்றில் நடைபெற்றது. அப்போது முதலாவது சந்தேக நபரான இராசதுரை தவேந்திரன் 20 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையிலும்2 ஆள் பிணையிலும் விடுவிக்கப்பட்டார்.வழக்கின் இரண்டாவது சந்தேகநபரான கந்தன் ஜயராஜசிங்கம் (சின்னத்கோன்) ஏற்கனவே பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.


## இலவசக் கருத்தரங்கு
## மகளிருக்கு ஓர் அரிய வாய்ப்பு

பிரபல அழகுக்கலை நிபுணர் திருமதி நளினி சிவகுமார் (Advance Diploma In Herbal Beauty Culture அவர்கள் யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்து அழகுக்கலை பற்றிய இலவசக் கருத்தரங்கையும் அழகுக்கலை தொடர்பான பாவனைப் பொருள்கள் பற்றிய தெளிவான விளக்கத்தையும் (தயாரிப்பு நிறுவனம் கிடைக்கும் இடங்கள் ) நடத்தவுள்ளார்.

யாழ்ப்பாணத்தில்

★ இடம்: யாழ். Y.M.C.A மண்டபம்

காலம்: பி.ப. 2.00 மணி 11.07.2004 ஞாயிற்றுக்கிழமை

வடமராட்சியில்

★ இடம்: இராஜலக்சுமி திரையரங்கு நெல்லியடி

காலம்: காலை 9மணி ஞாயிற்றுக்கிழமை 11.07.2004

*அன்புடன் அழைக்கின்றோம்.*

*அனுசரணை வழங்குவோர்*

யாழ். குடாநாட்டு மக்களுக்கு ஒரு நற்செய்தி!

இலங்கையின் எப்பாகத்துக்கும் கேபிள் இணைப்புக்கள் இன்றி அன்ரனா மூலம் இயங்கக் கூடிய மேசைத் தொலைபேசிகளை வழங்கிவரும் 'பவர் செல்லூலர் ரேடிங் கொம்பனி' யாழ். மக்களின் நன்மை கருதி 24 மணி நேரத்தில் இணைப்புக்களை வழங்கி வருகிறது. அதன் புதிய கிளை நிறுவனம் 205/1, கஸ்தூரியார் வீதி, ராஜா தியேட்டர் கொம்பிளக்ஸில் அமைந்துள்ளது.

## பவர் செல்லூலர் ரேடிங் கொம்பனி

இது ஸ்ரீலங்கா ரெலிக்கொம்மின் இணை நிறுவனமாகிய மொபிட்டல் ஆகும்.

இங்கு கையடக்கத் தொலைபேசிக்கான திருத்த வேலைகளும் அதன் உதிரிப்பாகங்களும் பெற்றுக்கொள் ளலாம். சகல விதமான கையடக்கத் தொலை பேசிகளின் UNLOCK சீர் செய்து தரப்படும்.

Office
185,1st floor
kasthuriyar Road.
Jaffna.
Tel/ fax 021-2227070

SHOP
205/1, Kasthuriyar Road,
Jaffna.
Tel: 0712 399220 (36238)32-12-16-37)

### லஷ்சுமி இணுவில்



விஜய், சாலினி,தாமு, தலைவாசல் விஜய், வையாபுரி நடிப்பில்

கண்ணுக்குள் நிலவு

தினசரி: 11.00,3.00,7.00(பு.நே.)

(33807) (43)

### நாகம்ஸ் சுன்னாகம்

மாதவன். அமோகா. பூஜா. தாமு நடித்த



ஜேஜே

தினசரி: 11.00, 3.00, 7.00 (பு.நே.)

C/35739) (37)

### ராஜா யாழ்ப்பாணம்

சூர்யா ,ஜோதிகா, (இருவேடம்) விவேக்நடித்த



(ரீல்ஸ்)

பேரழகன்

தினசரி: 10.30,2.30,6.30, (பு.நே)

9.07.2004 முதல் வானவில்

(C/35994)(37)

### நிறைஞ்சனாஸ் சங்கானை

விஜய், திரிஷா, பிரகாஷ்ராஜ் நடித்த



கில்லி

தினசரி:11.00, 2.45, 6.00 (ப.நே)

வெள்ளி, சனி, ஞாயிறு

(C-35653)(37) EXTREMTIES [இரவு 8.45]


## துயர் பகிர்கின்றோம்

எமது பிரதேச செயலகத்தில் கிராம உத்தியோகத்தராகக் கடமையாற்றும் திரு.வே.கண்ணப்பமூர்த்தி அவர்களின் அன்பு மைத்துனர்

### நாகராசா மனோகரன்

அவர்கள் 03.07.2004 இல் விபத்தில் திடீர் மரணமுற்றதால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்குகொள்வதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*நலன்புரிச் சங்கம்*
*பிரதேச செயலகம்,*
*பச்சிலைப்பள்ளி.*

(33871)(37-11-16)

பிரதேச செயலரும்,
அனைத்து உத்தியோகத்தர்களும்.



## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியை

திருமதி பிலீப் மேரிமக்டலீன்

அவர்களின் அன்புத் தந்தை

### யோசேவ் மரியதாசன்

*(இளைப்பாறிய ஆசிரியர், தென்மூலை அச்சுவேலி)*

அவர்கள் இயற்கையெய்தியமையையிட்டு துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*யா/ஸ்ரீ சோமஸ்கந்த கல்லூரி*
*புத்தூர்.* (33872)(11-16-37)

அதிபர், ஆசிரியர்கள்
அலுவலக ஆளணியினர்,மாணவர்கள

## குழந்தை யேசுவே!

### பரிசுத்த ஆவிக்கு ஜெபம்

எனக்கு ஒளியாயிருந்து உன்னத நிலையை நான் அடைய வழிகாட்டும் பரிசுத்த ஆவியே உமது திருநாமம் அர்ச்சிக்கப்படுவதாக. உமது அருட்கொடைகளின் மூலம் என்னுள்ளத்தைப் பக்குவப்படுத்தி எனக்கு தீங்கு செய்தோரை நான் மன்னிக்க அருள் புரிபவரே. என் வாழ்வில எச் சந்தர்ப்பத்திலும் எனக்கு உற்ற துணையான உமக்கு இச்சிறிய ஜெபத்தின் மூலம் நீர் செய்யும் சகலதிற்கும் நன்றி கூறுகிறேன். என் தேவைகள் எவ்வளவு முக்கியமாக இருப்பினும் எக்காரணம் கொண்டும் உம்மிலிருந்து விலகாமல் என்றும் உம்மில் நிலைத்திருப்பேனென உறுதி கூறுகின்றேன். நானும் என்னால நேசிக்கப்படும் அனைவரும் என்றென்றும் உமது முடிவில்லா மகிமையில் பங்குபெற வேண்டுகின்றேன்.

உங்கள் தேவை எவ்வளவு கடினமாய் இருப்பினும் அடுத்தடுத்து 3 நாள்களுக்கு இந்த ஜெபத்தை உங்கள் தேவையைக் கேளாமல் சொல்லிவரின் உங்கள் தேவை நிறைவேறும்.

ஓ பரிசுத்த ஆவியே உமக்கு நன்றி.

குழந்தை யேசுவே!

நீர் எனக்குச் செய்த உதவிகள் அனைத்திற்கும் உமக்கு நன்றி கூறுகின்றேன்.

(33870)(36-11-16) - ஓர் அடியாள்

## உடற்கல்வி டிப்ளோமா முதலாம்(1) இரண்டாம் (2) ஆண்டுப் பரீட்சை - 2004

உடற்கல்வி டிப்ளோமா முதலாம் (1) இரண்டாம் (2) பரீட்சைகள் 19.07.2004 அன்று ஆரம்பமாக உள்ளதால் மேற்படி பரீட்சைக்குத் தோற்றும் பொருத்தமான பரீட்சார்த்திகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

12.07.2004 அன்றோ அல்லது அதற்கு முன்பாகவோ விளையாட்டு விஞ்ஞான அலகில் பதிவினை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

06.07.2004 (C-36293)(36-11-16) - பதிவாளர்.

## பாராட்டு விழா அழைப்பு

அருள்மிகு வல்வெட்டி வேவில் ஸ்ரீ வீரகத்தி விக்னேஸ்வரர் கோயில் ஸப்ததச (17) குண்ட பக்ஷ மகா கும்பாபிஷேக (30.06.2004) பிரதம குரு சிவஸ்ரீ சதா.மகாலிங்கசிவக்குருக்கள் (J.P.) அவர்களுக்கும், அவர் சகோதரன் சிவஸ்ரீ.சதா.மகேஸ்வரக்குருக்கள் (J.P.) அவர்கள் இருவரும் 06.02.2004 அன்று (J.P.) பட்டம் பெற்றமையிட்டு பாராட்டிக் கௌரவித்தல்.



இடம்: வேவில் பிள்ளையார் கோயில் மண்டபம்
காலம்: இன்று (07.07.2004) புதன்கிழமை
நேரம்: பிற்பகல் 4.00 மணி
தலைமை: சிவஸ்ரீ தி.விக்னேஸ்வரக்குருக்கள S.T.O

மேற்படி வைபவத்தில் கலந்து சிறப்பிக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.



(33073)(37-11-16)

திரு.சு.திருச்சிற்றம்பலம் ஐயர் குடும்பத்தினர்,
வல்வெட்டி வேவில் வீரகத்தி விநாயக அடியார்களும்.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி அப்பர் பாறுவதிப்பிள்ளை

காரைநகர், நடுத்தெருவை வசிப்பிடமாகக் கொண்ட திருமதி அப்பர் பாறுவதிப்பிள்ளை 6.7.2004 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அருணாசலம்- லெட்சுமிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற திருநாவுக்கரசு அப்பரின் அன்பு மனைவியும் நாகேஸ்வரியின் அன்புத் தாயாரும் கனகசிங்கத்தின் (காரைநகர் ப.நோ.கூ.சங்கம்) அன்பு மாமியும கருணாநிதி (பொறியியலாளர், நியாப்- யாழ்ப்பாணம்), கலைச்செல்வன் (விஞ்ஞானபீடம், யாழ்.பல்கலைக்கழகம்) கலைச்சந்திரன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான கந்தையா, நடராஜா, திருநாவுக்கரசு, சுந்தரம்மா, சிவபாக்கியம், செல்லம்மா மற்றும் மாணிக்கதியாகராஜா (வத்தளை), சரஸ்வதி, முத்துலிங்கம் (உதயன் பத்திரிகை நிறுவனம்), தனபாலசிங்கம் (ஆசிரியர், கொக்குவில் இந்துக்ககல்லூரி) ஆகியோரின அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற வீரகத்தி பாக்கியம், திருநாவுக்கரசு சுந்தரர் ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் காரைநகர் நீலிப்பந்தனையிலுள்ள அவரது இல்லத்தில் நாளை (08.07.2004) வியாழக்கிழமை காலை 9.00மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைநகர் சாம்பலோடை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*'நீலிப்பந்தனை'*
*காரைநகர்.* (சி36240)(32-11-16-37)

தகவல்:
க.கருணாநிதி
(பேரன்).

## வினாசித்தம்பி குணசேகரம் (குணம்)

(யாழ். போதனா வைத்தியசாலை ஊழியர்)



வண்ணார்பண்ணை, பத்திரகாளி கோவிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும், கொண்ட வினாசித்தம்பி குணசேகரம் (06.07.2004) செவ்வாய்க்கிழமை அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற வினாசித்தம்பி-துரையம்மாவின் அன்பு மகனும் காலஞ்சென்ற தங்கவேலுப்பத்தர் -புஸ்பவதியின் அன்பு மருமகனும், தங்கேஸ்வரியின் அன்புக் கணவரும், குணேஸ்வரி, குணதாசன், குணதீபன், ஜசிந்தன், மணிவண்ணன் ஆகியோரின் அன்புத் தகப்பனாரும். பிரதீபன், சாமந்திப் பிரியாவின் மாமனாரும் ஜனார்த்தனன், அர்ச்சனா, அகிஷன் ஆகியோரின் பேரனும் இராஜபாக்கியம், அமரர் மணியம்மா, உதயச்சந்திரன், சந்திரசேகரம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் நாகேஸ்வரி, இந்திராணி, லோகநாதன், இராஜகோபால், மங்களேஸ்வரி, விவேகானந்தன் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 7.7.2004 புதன் கிழமை மாலை 3 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*பெரிய தம்பிரான் கோவிலடி,*
*வண்ணார்பண்ணை.* (33878)(11-16-37)

தகவல்:
குடும்பத்தினர்.

## திருமதி சின்னப்பா தெய்வானைப்பிள்ளை



கந்தரோடை சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னப்பா தெய்வானைப்பிள்ளை நேற்று (06.07.2004) மாலை இறைபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற அப்பச்சி-முத்துப்பிள்ளை தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரியும் காலஞ்சென்ற அருணாசலம் சின்னப்பாவின் அன்பு மனைவியும் தெல்லிப்பழை செருக்கப்புலம் காலஞ்சென்ற அருணாசலம் - சின்னாச்சிப்பிள்ளையின் மருமகளும், கனகநாயகம், கனகபூசணம், பேரின்பநாயகம் (M.P.C.S. சுன்னாகம்), ஞானதேவி, இராஜேஸ்வரி,கருணாநிதி (C.E.B), கருணாகரன் (C.E.B), சரோஜாதேவி ஆகியோரின் பாசமிகுதாயாரும், காலஞ்சென்ற கதிரமலை (FOREST Dept.) வள்ளிநாயகி, முருகையா (கனடா), காலஞ்சென்ற வன்னியசிங்கம் மற்றும் திலகவதி ஆகியோரின் அன்புச் சகோதரியும் மகேஸ்வரி, அருந்தவராணி, பஞ்சாட்சரம் (J.D.A. C.C.S, யாழ்ப்பாணம்), அருந்தவராசா, தயாபரன் (C.T.B. வவுனியா) அம்பிகாதேவி, சந்திராதேவி ஆகியோர்களின் பிரியமுள்ள மாமியாருமாவார்.

அன்னாரின இறுதிக்கிரியைகள் இன்று 07.07.2004 புதன்கிழமை பி.ப.2 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கந்தரோடை, சங்கம்புலவு மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கந்தரோடை,*
*சுன்னாகம்.* (33879)(11-16-37)

தகவல்:
சி.பேரின்பநாயகம் (மகன்)

## நாகமுத்து தம்பு (துரைசிங்கம்)

*(இளைப்பாறிய ஆசிரியர், யா/சா/ இந்துக்கல்லூரி)*



மீசாலை மேற்கு, மீசாலையைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட நாகமுத்து தம்பு (துரைசிங்கம்) அவர்கள் 04.07.2004 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகமுத்து - தங்கமுத்து தம்பதிகளின அன்பு மகனும் மாணிக்கத்தின் அன்புக் கணவரும், பத்மாவதி, ராஜேந்திரன், செல்வேந்திரன்,குலேந்திரன், ரவீந்திரன், கலாவதி ஆகியோரின் பாசமிகு தகப்பனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.07.2004) புதன் கிழமை அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 2.00 மணியளவில் வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலைஉற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*மீசாலை மேற்கு,*
*மீசாலை.* (C-33876)(36-11-16-37)

தகவல்:
நாச்(பேரன்).

## விபத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வில் பள்ளி வீதியைச் சேர்ந்த பொன்னுத்துரை ஜெகநாதன் (வயது 35) என்ற இளைஞரே உயிரிழந்தவராவார். விபத்தில் சம்பந்தப்பட்ட மோட்டார் சைக்கிளைச் செலுத்தி வந்தவரான இளைஞர் தலைமறைவாகியுள்ளார்.

உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனை, மரண விசாரணையின் பொருட்டு யாழ்.வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

(ஒ-6-13-15)

## கிணற்றில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று ஒப்படைக்கப்பட்டது.

வீட்டில் எவரும் இல்லாதவேளையில் வீட்டுத் தேவைக்காகத் தண்ணீர் அள்ளியபோது இவர் தவறுதலாகக் கிணற்றில் வீழ்ந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. சடலம் பிரேத பரிசோதனையின் பொருட்டு வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

(ஒ-6-13-15)

## குழந்தையை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டே வீட்டினுள்ளோர் உறங்கினர். நேற்று அதிகாலை 12.30 மணியளவில் 7பேர் அடங்கிய கும்பல் ஒன்று தடிகள், இரும்புக் கம்பிகளுடன் வீட்டினுள் நுழைந்தது. அக்கும்பலைச் சேர்ந்தவர்கள் முகங்களைக் கறுப்புத் துணிகளால் மூடியிருந்தனர்.

வீட்டிற்குள் எரிந்துகொண்டிருந்த பெற்றோல் மக்ஸ் விளக்கை அவர்கள் அடித்து நொறுக்கி அணைத்தனர். அப்போது முன்பகுதியில் உறங்கிக்கொண்டிருந்த வீட்டு உரிமையாளர் ஆ.வேலாயுதமும் (வயது 62), அவரது மனைவி வே.நேசமலர் (வயது 55) ஆகியோர் அவலக்குரல் எழுப்பினர். இதனால் அவர்கள் இருவரையும் கொள்ளையர்கள் தாக்கினர். இதில் அவர்கள் இருவரும் தலைப் பகுதிகளில் படுகாயமடைந்தனர்.

இதற்குள் மகளும் மருமகனும் விழித்துவிட்டனர். அப்போது அவர்களுடைய கைக்குழந்தையைப் பறித்தெடுத்த கொள்ளையர்கள் குழந்தையை வைத்து மிரட்டி வீட்டிலிருந்த நகைகள், வெளிநாட்டு மற்றும் இலங்கைப் பணம், கையடக்கத்தொலைபேசிகள் உட்படப் பல லட்சம் ரூபா பெறுமதியான பொருள்களை அபகரித்தனர். பின்னர் குழந்தையை விட்டுவிட்டு அவர்கள் தப்பியோடிவிட்டனர்.

படுகாயமடைந்த இருவரும் மந்திகை மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பாகப் பொலீஸிலும் விடுதலைப் புலிகளின் அரசியற்றுறை அலுவலகத்திலும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ஒ-4)

## புலிகளிடம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வலகத்துக்கு வழிகாட்டுமாறு கேட்டுள்ளார். அவரைப் பொதுமக்கள் சிலர் நல்லூர் அரசியல் துறை அலுவலகத்தில் ஒப்படைத்தனர். பின்னர் அவர் யாழ்.மாவட்ட அரசியல்துறையினரிடம் கையளிக்கப்பட்டார்.

பொலன்நறுவ, நெலும்வெவ, பகுதியைச் சேர்ந்த தான் 1996 ஆம் ஆண்டு இராணுவத்தில் சேர்ந்தார் என்றும் -

தற்போது 'சிங்கரெஜிமெண்ட்' படைப்பிரிவில் 512 ஆவது படையணியில் பணியாற்றும் தனக்கும், கோப்ரல் ஒருவருக்கும் இடையே ஏற்பட்ட தகராறில் தான் துப்பாக்கிப் பிரயோகம் செய்தார் என்றும் -

இதனையடுத்துத் தனக்குத் தண்டனை வழங்கப்பட்டதால் அதிலிருந்து தப்பிக்க இராணுவ முகாமை விட்டு வெளியேறி பொதுமக்களின் உதவியுடன் விடுதலைப் புலிகளிடம் தஞ்சமடைந்தார் என்றும் -

விடுதலைப் புலிகளிடம் அந்த இராணுவ வீரர் தெரிவித்தார். தன்னுடன் தகராறில் ஈடுபட்டவரான கோப்ரல், துப்பாக்கிப் பிரயோகத்தில் காயமடையவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதனையடுத்து, நேற்றிரவு இவரை கண்காணிப்புக் குழுவினரிடம் கையளிக்க விடுதலைப் புலிகள் நடவடிக்கை மேற்கொண்டனர்.

இது தொடர்பாக நேற்றிரவு 7.30 மணியளவில் யாழ்.மாவட்ட போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பிரதிப் பொறுப்பதிகாரி சி.பியர்ஸ் மற்றும் லார்சன் ஆகியோர் மாவட்ட அரசியற்றுறை அலுவலகத்துக்கு வந்தனர்.

அவர்கள் பிரஸ்தாப இராணுவ வீரருடன் விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட அரசியற்றுறைத் துணைப்பொறுப்பாளர் செம்மணன் மற்றும் அலுவலகத் தொடர்பாளர் இமையவன் ஆகியோர் முன்னிலையிலும், பின்னர் தனித்தும் மாறிமாறி உரையாடினர். ஆனாலும், கண்காணிப்புக்குழுவினரால் ஒரு முடிவுக்கு உடனடியாக வரமுடியவில்லை.

இறுதியாக, சுமார் 9.15 மணியளவில் பிரஸ்தாப இராணுவவீரர் தான் மீண்டும் படைமுகாமுக்குச் செல்ல ஒப்புக்கொள்வதாகத் தெரிவித்தார் என்று கூறப்பட்டது. இதனைத் தொடர்ந்து அவரைக் கண்காணிப்புக்குழுவினர் தமது வாகனத்தில் அழைத்துச் சென்றனர். அப்போது அங்கு நின்றிருந்த செய்தியாளர்கள் பிரஸ்தாப இராணுவ வீரரைப் புகைப்படம் பிடிக்க முயற்சித்தனர். ஆனால், கண்காணிப்புக்குழுவினர் அதனைத் தடுத்து அவரைத் தமக்குப்பின்னால் மறைத்துக் கூட்டிச் சென்றனர்.

கடந்த காலங்களிலும் இராணுவத்தின் புலிகளிடம் தஞ்சமடைவதும், அவர்கள் செய்தியாளர்கள் முன்னலையில் புகைப்படம் பிடித்து - கண்காணிப்புக்குழுவினரிடம் ஒப்படைக்கப்படுவதுமே வழக்கம் என்பது குறிப்பிடத்தக்கது.

(ஒ-4)

## ஜப்பானியக் குழு இன்று வருகை

யாழ்ப்பாணம்,ஜூலை7

யாழ்.மாவட்டத்தின் மீன்பிடி மற்றும் விவசாய நடவடிக்கைகளின் அபிவிருத்தி பற்றி ஆராய்வதற்காக ஜப்பான் தூதரக முதன்மைச் செயலாளர் கோசி இவாசிடா தலைமையிலான குழுவொன்று இன்று யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளது.

ஜப்பானியத்தூதரக முதன்மைச் செயலாளர் தலைமையில் இரண்டாவது செயலாளர் மசாயுகி யசுடா, ஜப்பானிய தேசியக் கூட்டுத்தாபன முகவர் அமைப்புக்கான வதிவிடப் பிரதிநிதி கோகோடோ மற்றும் வதிவிட சிரேஷ்ட ஆலோசகர் டாக்டர் சபாபதி முதியன்சலாகே புஞ்சிபண்டா ஆகியோரே வருகைதரவுள்ளனர்.

இன்று வருகை தரும் இக்குழுவினர் நாளை யாழ்.செயலகத்தில் அரச அதிபர் செ.பத்மநாதனையும் கடற்றொழில், கமநல திணைக்கள அதிகாரிகளையும் சந்தித்து அபிவிருத்தி தொடர்பாகக் கலந்துரையாடுவர். (ஒ-150-202-203-ரி)

## மட்டக்களப்பில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிகாரிகள் குழுவை மட்டக்களப்புக்கு அனுப்பிவைத்தார்.

மட்டக்களப்பு உட்பட கிழக்கு மாகாணம் முழுவதும் பாதுகாப்பைப் பலப்படுத்தவும், புலிகளுக்கும், போட்டிக் குழுவினருக்குமிடையிலான மோதல்களைத் தடுக்கவும் தேவையான ஏற்பாடுகள் குறித்து நேற்றைய உயர்மட்ட மாநாட்டில் ஆராயப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை, வெற்றிடமாகவுள்ள கிழக்கு மாகாணத்திற்கான படைத்தளபதி பதவிக்கு உரிய ஒருவரை உடனடியாக நியமிக்க வேண்டியதன் அவசியமும் அங்கு வலியுறுத்தப்பட்டது.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் ஆயுதங்களுடன் நடமாடுவோர் யாராக இருந்தாலும், அவர்களை உடனடியாகக் கைதுசெய்ய வேண்டும் எனவும் - திடீர் சோதனைகளை நடத்தவேண்டும் எனவும் - மேஜர் ஜெனரல் சூல செனவிரத்ன பொலீஸ் அதிகாரிகளைக் கேட்டுக்கொண்டார்.

இம்மாநாட்டையடுத்து மேஜர் ஜெனரல் சூல சென்விரத்ன தலைமையிலான படை அதிகாரிகள், புலிகள் உறுப்பினர்களுக்கு எதிராக நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பான விசாரணைகளில் ஈடுபட்டனர். (க)

## நட்வர்சிங்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இச்சந்திப்பில் இரண்டு நாடுகளுக்கும் இடைப்பட்ட உறவுநிலை குறித்து முக்கிய கவனம் செலுத்தப்பட்டதாகவும் -

இலங்கையின் தற்போதுள்ள நிலைமை குறித்து இரு அமைச்சர்களும் கலந்துரையாடினர் என்றும் -

இந்திய வெளியுறவு அமைச்சக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

நோர்வேயின் அனுசரணையுடன் இலங்கை அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் மேற்கொள்ளப்பட்டுவரும் சமாதான முயற்சிகளின் முன்னேற்றம் குறித்து நோர்வே, இந்தியாவுக்குத் தகவல் தெரிவித்து வருவதாகவும் அவர் கூறினார்.

ஜான் பீற்றர்ஸன், இந்தியப் பிரதமரின் பாதுகாப்பு ஆலோசகர் ஜே.என.டிகஸிற்றையும் சந்தித்துப் பேச்சு நடத்தினார். (ஒ-9-4)

## ஹிங்குராகொட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லையில் பொலன்நறுவை மாவட்டம் அமைந்துள்ளது. அங்குள்ள கிராமம் ஒன்றில் இருக்கும் இந்த விகாரையில் சம்பந்தப்பட்ட குழுவினர் ஒருவார காலமாகத் தங்கியிருந்தனர் என்று கூறப்படுகிறது.

கைதுசெய்யப்பட்ட தமிழ் இளைஞர்களில் எவருக்கும் சிங்கள மொழி தெரியாததால் அவர்களிடம் உடனடியாக விசாரணை நடத்த முடியவில்லை என ஆரம்பத்தில் பொலீஸார் கூறினர்.

எனினும், தாம் மட்டக்களப்பு தொப்பிகல காட்டுப் பகுதிக்குச் செல்வதற்காகவே விகாரையில் தங்கியிருந்தார்கள் என இவர்கள் பொலீஸாரிடம் கூறியுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

ஜாதிக ஹெல உறுமய தலைமையகத்திலிருந்து வந்த உத்தரவின்பேரிலேயே தாம் இவர்களுக்கு அடைக்கலம் கொடுத்தார் எனவும் - இவர்களிடம் ஆயுதங்கள் இருந்தமை குறித்துத தமக்கு எதுவும் தெரியாது என்றும் - விகாராதிபதி பொலீஸாரிடம் தெரிவித்துள்ளாராம்.

இந்த விகாரையில்தான் இலங்கை இராணுவத்தின் - அமெரிக்கப் பயிற்சிபெற்ற - விசேட படையணி அண்மைக்காலம் வரை முகாமிட்டிருந்தது என்பதும் -

கடந்த காலங்களில் மட்டக்களப்பு மாவட்டத்துக்குள் - புலிகளின் பிரதேசத்துக்குள் - ஊடுருவி மேற்கொண்ட இராணுவ நடவடிக்கைகளுக்கு இந்த விசேட படையணியே பொறுப்பாக இருந்தது என்பதும் - குறிப்பிடத்தக்கவை என சில செய்தி ஏஜென்சிகள் தெரிவித்தன.

இந்தப் பதின்நான்கு பேரையும் உடனடியாக விடுவிக்கும்படி இராணுவப்புலனாய்வுப்பிரிவு பொலீஸ் தரப்புக்கு அழுத்தத்துக்குமேல் அழுத்தம் கொடுத்தது எனத்தெரியவருகின்றது.

எனினும், அப்படி விடுவிக்க முன்னர் இந்தக் கைது பற்றிய விவகாரம் பரபரப்பாகச் செய்தி ஊடகங்களில் வெளிவந்துவிட்டத[illegible] அழுத்தத்துக்கு அடிபணிய முடியாத பொல[illegible] தரப்பு புதிய நாடகம் ஒன்றைச் சோடித்ததாக அறியவந்தது.

அதன்படி -

கைதுசெய்யப்பட்ட பதின்னான்கு பேரையும் நேற்றுப் பிற்பகல் பொலன்நறுவை மஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் ஆஜர் செய்தனர்.

வழக்கமாகப் பயங்கர ஆயுதங்களுடன் கைதுசெய்யப்படுபவர்களை எடுத்த எடுப்பில் பிணையில் விடுவிப்பதற்கு மஜிஸ்திரேட் நீதிமன்றுக்கு அதிகாரம் கிடையாது.

ஆனால், பொலீஸாரே இந்தப் 14 பேரும் விஹாரையில் வேறு ஓர் இடத்தில் கைதுசெய்யப்பட்டனர் என்றும், ஆயுதங்கள் பிறிதோர் இடத்தில் தனியாகக் கைப்பற்றப்பட்டன என்றும் புது விளக்கம் ஒன்றை நீதிமன்றத்தின் முன் வைத்தனர்.

இவர்கள் 14 பேரும் ஆயுதங்களுடன் கைதுசெய்யப்படாததால் அவர்களைப் பிணையில் விடுவிப்பதில் தமக்கு ஆட்சேபனை இல்லை என்று பொலீஸார் தெரிவித்ததை அடுத்து அவர்கள் பதின்னான்கு பேரையும் தலா இர[illegible]யிரத்து ஐந்நூறு ரூபா பிணையில்செல்ல அனுமதித்தி நீதிவான் வழக்கை ஒத்திவைத்தார்.


IBMS இன் மாபெரும் புலமைப்பரிசில் திட்டம்-2004/2005

புதியநிர்வாகக் கட்டமைப்பின் கீழ் அதி நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் முற்றிலும் வித்தியாசமான முறையில் எமது முதலாவது புலமைப்பரிசில் திட்டத்தினை நாம் அறிமுகப்படுத்தியுள்ளோம்.



விண்ணப்ப முடிவு திகதி : 31.07.2004

உங்கள் திறமைகளுக்கு நாங்கள் மதிப்பளிக்கின்றோம்.

எமது புலமைப்பரிசில் திட்டத்தின் ஊடாக கற்கை நெறியில் இணைந்துகொள்ளும் அனைத்து மாணவர்களுக்கும் முற்றிலும் இலவசமான ஆங்கில வகுப்புகள் வடக்கின் பிரபல ஆங்கில ஆசிரியரினால் வழங்கப்படவுள்ளன.

DIPLOMA IN MICROSOFT OFFICE 3 Months

DIPLOMA IN DESK TOP PUBLISHING 3 Months

DIPLOMA IN INTERNET TECHNOLOGY 3 Months

DIPLOMA IN HARDWARE ENGINEERING 4Months

மாதிரி விண்ணப்பப்படிவம்
Full Name:................
Address:....................
N.I.C. No:..................
Date of Birth:............
Course:.....................
Date............... Signature..........

மேற்படி மாதிரி விண்ணப்பப் படிவத்தினை சுயமாகத் தயாரித்து, பூர்த்திசெய்து ரூபா 100 பரீட்சைக் கட்டணத்துடன் (19 வயதிற்கு உட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு பரீட்சைக் கட்டணம் ரூபா 50 மட்டும்) கீழ்க்காணும் முகவரிக்கு நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பிவைக்கவும். காசுக்கட்டளையாக அனுப்ப விரும்புவோர் DIRECTOR, IBMS என்று பெயரிட்டு பணம் பெறும் நிலையம் POST OFFICE, JAFFNA எனக் குறிப்பிடுதல் வேண்டும்.
விண்ணப்பப்படிவங்கள் வந்து சேரவேண்டிய முகவரி: DIRECTOR, IBMS 410, K.K.S. ROAD, JAFFNA.

Institute of Business Management Studies
"The Centre for Information Technology"

Head Office
# 410, K.K.S. Road,
Jaffna.
T.p: 021 222 3165

Branches
N.M.M.V. Road, Nelliady.
Sangaththannai,
Chavakachcheri.



D.C.A
ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்
யாழ்.பல்கலைக்கழக
வெளிவாரிப் பட்டப்படிப்புகள்
1st in Com., G.A.Q.
கல்வியாண்டு 2005
ஆரம்பம்~10~07~2004
சனிக்கிழமை காலை 10.00 மணி

| | |
|---|---|
| கணக்கீடு | - D.SAM |
| வர்த்தகம் | - பசில் |
| பொருளியல் | - இராஜேஸ்வரன் ஜெயக்குமார் |
| கணி. | - தவசேகர் |
| தமிழ் | - மீரா |
| இந்துநாகரீகம் | - ஜோதீஸ்வரன் |
| மெய்யியல், அளவையியல் | மோகன் |
| புவியியல், சூழலியல் | கிரீதரன் |
| அரசியல் | - பொன்சந்துரு |
| நாடகம் | - சந்திரன் |

குறிப்பு: வகுப்புகள் யாவும் வெலிங்டன் சந்தி D.M.I நிறுவனத்தில் நடைபெறும். பல்கலைக் கழகப் பதிவுகள் யாவும் எம்மால் செய்துதரப்படும் அனுமதிக்கு முந்துங்கள்.
(33836)



ஆசிரியர் போட்டிப் பரீட்சை
இறுதிச் செயலமர்வு
திரு.P. உமாசங்கர்
இலவச கையேட்டுடன் இறுதியானசெயலமர்வு
10-07-2004-2மணி, 11-07-2004-10மணி
17-07-2004-2மணி, 18-07-2004-2மணி
பதிவுகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.
- நல்லூர் சயன்ஸ் அக்கடமி.
(33869)



புதிய பிரிவுகள் ஆரம்பம்
பிரிவு 1 : 14.07.2004
பிரிவு 2 : 18.07.2004
அநேக மாணவர்களின் வேண்டுகோளுக்கிணங்க மேலும் இரண்டு பிரிவுகள் ஆரம்பிக்கப்படவுள்ளதென்பதை மாணவர்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.
ஆர்வமுள்ள மாணவர்கள் அனுமதிக்கு முந்திக்கொள்ளுங்கள்.
இயக்குநர்,
IIS
100, Clock Tower Rd., Jaffna.
(C-36203)







இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 07.07.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.